71

சக்தி

மாத வெளியீடு

2065

சுபானு ௵
மாசி மீ

-/8

கதைகள்

இந்திரா
குரங்காட்டி
குன்னரங்கன்
பொம்மை மரணம்
நிபுணர்கள்-புராணம்
இருளும் ஒளியும்
சப்தரிஷி-மண்டலம்

கட்டுரைகள்

சீனுவில்-அரச பதவி
எழுத்தாளன்-ஆனந்தம்
சூரியன்

வரலாறுகள்

காந்தி-காந்திதான்
அன்னை கஸ்தூரி
மழை டாக்டர்

பாடல்கள்

மின்மினி
பூனைக்குட்டி

குறிப்புகள்

தாயை-இழந்தோர்
காலச்சுழல்
புத்தக உலகம்

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்

டி. கே. சி. பதிப்பு
பல வர்ணப்படங்களுடன்
அழகிய பதிப்பு
ரூபாய் ஐந்து

மாணவருக்கு

மகாத்மா காந்தி
எழுதியதும் பேசியதும்
அழகிய கதர் பைண்ட்
ரூபாய் ஏழரை

"இதை ஒரு மகத்தான புத்தகம் என்றே சொல்லவேண்டும். விஷயத்தைப் போலவே தோற்றமும் மகத்தானதாய் இருக்கிறது. மகாத்மா காந்தி மாணவர்களுக்காகவும் மானவரைப் பற்றியும் எழுதிய விஷயங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. உணர்ச்சி வேகம் வாய்ந்த நல்ல மொழிபெயர்ப்பு" - கல்கி 10-11-43

புதுமைப் பதிப்பகம்

காரைக்குடி

சென்னையில் கிடைக்குமிடம் :

சக்தி காரியாலயம் : : சைனா பஜார்

செந்தமிழ் நாட்டு சங்கீதத்தை தெற்கே சிங்களத்திலும், வடக்கே பம்பாயிலும் தனது இன்னிசையால் ஒலிக்கச் செய்த

இசைவாணி கோகிலகான

ஸ்ரீமதி எம். எஸ்.

ஸுப்புலக்ஷ்மி

யின் "எச்.எம்.வி." ரிகார்டு சங்கீதம்

✲

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

N. 18218

கண்ணெடுத்தாகிலும் — சிம்மேந்திரமத்திமம்

N. 18208

மா தயை — வஸந்த

N. 18205

கண்டதுண்டோ
வானத்தின் மீது

N. 18685

ஸரகுணபாலிம்ப — கேதாரகௌளம்

N. 18680

என்னகானு ராமபஜன — பந்துவராளி

N. 18100

நீ இரங்காயெனில் — அடாணா
வண்டினமுரலும் — தோடி

சிறந்த சங்கீதம்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

HIS MASTERS VOICE

சீரிய ஒலிப்பதிவு

நீங்கள் தொழ வேண்டுமானல்.

என்னை தொழுங்கள்!

"... நான்தான் கடவுளுக்குப் பிறந்த குட்டிக் கடவுள். நீ ஒரு கீழ்த்தர பிராணி. உன்னுடைய வேலை நான் சொல்லுகிறபடி பதில் பேசாமல் எனக்குப் பணி செய்து நடப்பதே...."

தவறிவிடாதீர்கள்!

ஜப்பானியர் சாதாரன எதிரிகள் அல்ல. அவர்கள் நேர்மையற்றவர்கள். கொடுமைக்காரத் துரோகிகள். மிருகத்தனமுள்ளவர்கள். பேராசை கொண்டவர்கள். சாவதேச ஒப்பந்தங்களை மதிக்காதவர்கள். யுத்தக் கைதிகளை துன்புறுத்துபவர்கள். ஜெர்மனியாகூட அப்படிச் செய்வதில்லை. அவர்களை ஒழிக்க ஒரே வழிதானுண்டு. தரை மேலும், கடல் மீதும், ஆகாயத்திலும் அவர்களை நொறுக்க வேண்டும். அவர்களுடைய சைனியங்களை அடியோடு முறியடிக்க வேண்டும். அவர்கள் பலத்தை அறவே அகற்றி கையாலாகாதவர்களாக்க வேண்டும். அவர்களை நிபந்தனையின்றி சரணாகதியடையச் செய்யவேண்டும். வேறு எதுவும் இக்காட்டுமிராண்டிகளுடைய தொந்தரவினின்று இந்தியாவை நிரந்தரமாகத் தடுக்க முடியாது.

இப்படித்தான் ஜப்பானியன் பேசுகிறான். பேசுவது மட்டுமல்ல; அதைப் பூராவும் மெய்யென்று நம்புகிறான். அதன் கருத்தைக் கவனியுங்கள். அவன் மனதில் ஒரு சாதாரண ஜப்பானிய சிப்பாய் மிகச் சிறந்த இந்தியர்களைவிட தெய்வீக உரிமையினால் உயர்ந்தவன் எனக் கருதுகிறான். தாகூர், இக்பால், சி. வி. ராமன் போன்றவர்களைவிட உயர்ந்தவன். ஜப்பானிய போர் வீரன், வியாபாரி, தையற்காரன், சக்கிலியன், குடியானவன்கூட தன்னை ஓர் உயர் பிறவியாகவே மதிக்கிறான்.

அப்படிப்பட்ட ஓர் சமூகத்துடன் எப்படி பழகுவது? பார்க்கப்போனால் அவர்கள் பொறுப்பற்றவர்கள், தலைகால் தெரியாதவர்கள். அவர்களுடைய பைத்தியக்காரத்தனத்தைக் கண்டு பச்சாத்தாபப்படும்படி தோன்றினால்கூட அவர்கள் உண்மையில் வெறி பிடித்தவர்கள் என்பதை மறக்க வேண்டாம்! அவர்கள் ஆபத்தானவர்கள்!

!AAA, 569 TM.

கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய
வெண்மையாக்குவதில்
நிகரற்றது.

பெரிய பார்களாகவும், சிறு கட்டிகளாகவும்
குறைந்த விலையில் கிடைக்கும்

தயாரிப்பவர்: **டி. எஸ். ஆர். & கோ**
கும்பகோணம்

ஸ்டாகிஸ்ட்: **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்**
திருவல்லிக்கேணி, மதராஸ்

சிறு வித்திலிருந்து தோன்றியது ஆலமரம், ஆனல், அது எண்ணற்றவர்களுக்கு நிழலைக் கொடுக்கிறது. அதைப் போல, ஏழை, எளியவர்கள் முதல் பணக்காரர் வரை எல்லோரும் வாங்கி ஆனந்திக்கும் முறையில் 'அசோகா' குறைந்த விலையில் கிடைக்கிறது.

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

மதராஸ் விற்பனையாளர்கள்:

வி. கனகய்ய செட்டி & கம்பெனி

நைனியப்ப நாய்க்கன் தெரு

சுபானு
மலர் 9

சக்தி

மாசி
இதழ் 5

அன்பும் அறிவும் அறமுந் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

தாயை இழந்தோம்

மகாத்மா காந்தியின் உத்தம மனைவி - தேசத்தின் தாய் - கஸ்தூரி பாயை இழந்தோம். கஸ்தூரிபாய் காந்தியின் வாழ்க்கை பூராவும் தியாக வாழ்வாகும். உலகின் ஓர் ஆச்சர்ய புருஷனை, அவர் கணவ ராகப் பெற்றார். 'ஒரு மகா புருஷனை மணப்பது, தாஜ்மகாலை மணப்பதுபோல்தான்' என்று யாரோ சொன்னார்கள். அங்கே தனிப்பட்ட வாழ்க்கையின் சுகம் கிடைக்காது. கஸ்தூரிபாயின் வாழ்வு முழுதும் அப்படிப்பட்டதேயாகும். உருக்கி உருக்கி மாற் றுயர்ந்த பொன் பதுமை அவர்.

காந்தியின் சத்திய சோதனையில், ஓர் அங்கம் அவர். காந்திஜி, ஓர் அக்கினிப் பிழம்பு. அந்தப் பிழம்பிலே, ஜோதியிலே, ஐக்கிய மாவது யாருக்கும் எளிதான காரியமல்ல. அந்த அபூர்வமான காரி யத்தைச் செய்து முடித்தவர் கஸ்தூரிபாய். பக்தன் அடியோடு தன்னை யிழந்து தெய்வ சித்தத்திலே ஈடுபடுவதுபோல, சமுத்திரத்திலே கானம் கலந்துவிடுவதுபோல, காந்தியின் ஆத்மாவிலே ஒன்றி விட்ட சகதர்மிணி கஸ்தூரிபாய்.

ராஜாஜி சொல்லும் வண்ணம், உழைத்தும், துன்புற்றும், பாட னுபவித்தும், அவர் ஒரு ராணியாகி விட்டார். மாளவியாஜி கூறு கிறபடி, அவர் 'சௌபாக்கியவதி'யாய்க் காலமானார். வயதி லும், அனுபவத்திலும், பாக்கியத்திலும், அவர் வாழ்க்கை பரி பூர்ணத்தை அடைந்து விட்டது. சப்த கன்னிகைகளென்று நாம் கொண்டாடும் பூர்விகக் கற்பரசிகளோடு மற்றொருவராக, அவர் சேர்ந்து விட்டார். நாம் கண்ணீர் சிந்தலாகாது. சதி கஸ்தூரிபாய் நீடூழி வாழ; அவர் நாமம் என்றென்றும் நிலைத்து நிற்குமாக!

காலச்சுழல்

ராஜாஜி பிடிவாதம்: ‘அரசியல் விமோசனம்’ என்ற புத்தகத்தில், ராஜாஜி பாகிஸ்தானை அவ்வளவு பலமாக வற்புறுத்த வில்லை; ஒற்றுமை வேண்டும் என்றும், கிரிப்ஸ் திட்டம் நல்லதென்றும் விளக்கவே பாடுபட்டிருக்கிறார். ஆனால், பேசும் பேச்சுக்களிலே, பாகிஸ்தான் உரிமையை ஓயாமல் வற்புறுத்தி வருகிறார். ‘பூனையையும் நாயையும் சேர்த்துக் கட்டியிழுத்தால் ஒற்றுமையாகுமா?’ என்கிறார். ‘ஒரு மேடையில் நான் எழுந்து நின்றாலே, இதோ பிரிவினைப் பெருமான் வந்து விட்டார் என்று நினைக்கிறார்களே!’ என வருந்தவும் வருந்துகிறார். பாகிஸ்தானோ, பிரிவினையோ, மண்ணாங் கட்டியோ எதை நாம் ஒப்புக் கொண்டாலும் சரிதான்—பிரிட்டன் நமக்கு அதிகாரத்தை வழங்கத் தயாரே யில்லை. ‘காங்கிரஸும் லீக்கும் ஒன்று சேர்ந்து கேட்டாலும் கூட, ராணுவத்தைத் தரமாட்டோம்’ என்று அன்று கிரிப்ஸ் சொன்னதை, ராஜாஜி மறந்து விட்டாரா? ஒற்றுமை என்பது என்ன? யாருக்கும் யாருக்கும்? என்ன லட்சியத்தை அடைய? என்ன முயற்சி செய்ய? செயலுக்கா, கூச்சலுக்கா? இதையெல்லாம் யோசிக்க வேண்டும். ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காக, என்னவாவது சொல்லிக் கொண்டே யிருப்பது நலமல்ல, ராஜாஜிக்கு ஏன் இந்தப் பிடிவாதம்?

ஜயகர் உபதேசம்: ‘தபால் கார்டின் மூலம் நாங்கள் சுதந்தரத்தை அடையவில்லை; போராடியே பெற்றோம்’ என்கிறார்களாம் ருஷியர்கள். ஒரு புத்தகத்தின் முன்னுரையில், இந்த உபதேசத்தை நமக்குச் செய்கிறார் ஜயகர். ருஷியாவிலே பல ஜாதி, பல தேச மக்கள் ஒற்றுமையா யிருப்பதன் காரணத்தையும், அவர் விளக்குகிறார். ஜாதிய அல்லது தேசியக் குரோதத்தை வளர்க்கும் எவரையும், சர்க்கார் அங்கே கடுமையாய்த் தண்டிக்கிறார்களாம். ஆகவேதான், அவர்கள் ஒன்றுபட்டு அற்புதமாய் வளர்ச்சி யடைந் திருக்கிறார்களாம். இருபது வருஷங்களிலே இத்தனையும் அங்கே சாதிக்கப்பட்டு விட்டதாம். காந்தி இயக்கமும் இருபது வருஷம் நடந்திருக்கிறதே, என்ன பயன் என்று விஷமமாய் அதிலே முத்தாய்ப்பு வைக்கிறார் ஜயகர். காந்தி இயக்கம் ஏன் வெற்றி அடையவில்லை என்றால், இந்த ஜயகரைப் போன்ற புண்ணியவான்கள் இருப்பதால்தான். இவர்கள் ஒன்றும் செய்ய மாட்டார்கள்; அந்நிய சர்க்காரின் ஜோதியிலே ஐக்கியமும் ஆவார்கள்; பிறரையும் குறை சொல்லுவார்கள்! என்ன நியாயமோ?

வேவல் பேச்சு: கடைசியாக வைஸிராய் வேவல் இந்திய அரசியல் முட்டுக்கட்டையைப் பற்றிப் பிரஸ்தாபித்து விட்டார். என்ன பேச்சு? அமெரியும் லின்லித்கோவும் வைத்த அதே ‘பிளேட்’டைத்தான் இன்று இவரும் திருப்பி வைத்திருக்கிறார். ‘நாம் புதிதாக இந்தியாவுக்குப் போகிறோமே, ஏதாவது செய்ய வேண்டி யிருக்குமோ?’ என்று, வரும்போது நினைத்தார். வந்தார். பார்த்தார். ஒன்றும் தேவையில்லை என்று தைரியம் வந்துவிட்டது. ‘இருந்தபடியே தான் இருப்போம்’ என்று சொல்லி விட்டார். தலைவர்கள் பாவ மன்னிப்புக் கேட்டுப் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டுமென்று யாரும் விரும்பவில்லை என்கிறார் வேவல். ஆனால், காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் ஒன்றுகூடிப் பழைய முடிவைப் புனராலோசனை செய்யத் தேவையே இல்லையாம். தனித் தனியே தம் தம் மனச்சாட்சியைப் பார்த்து வருந்தி விட்டால் போதுமாம். இதையன்றிப் பாவ மன்னிப்பும் பிராயச்சித்தமும் வேறே உண்டா? நாட்டின் இணையற்ற தலைவர்களை, உத்தமர்களை, இந்த முறையில் நடக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் ஒரு பெருந்தன்மையா? லின்லித்கோ போன வழியே ஒரு நாள் வேவலும் போக

வேண்டியது தான். ஆனால், சுதந்தர இந்தியா, தன் உத்தமத் தலைவர்களை ஒருநாளும் மறக்காது. வேவல் தம் இஷ்டப்படி நடக்கட்டும்; ஆனால், தங்கள் லட்சியத்துக்காகச் சகல தியாகத்தையும் ஒரு பொருட்டாக மதியாத தலைவர்களுக்கு உபதேசம் மாத்திரம் செய்யவேண்டாம்.

கவர்னர் நியமன விவாதம்: வங்காள கவர்னராக கேஸி என்ற ஓர் ஆஸ்திரேலியரை நியமித்திருக்கிறார்கள் அல்லவா? இதைப்பற்றி, லண்டன் 'ஸ்பெக்டேட்டர்' பத்திரிகையில், 'ஜேனஸ்' என்பவர் ஒரு குறிப்பு எழுதினார்: "குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கூட அல்ல, பூரண சுயேச்சையே வேண்டும் என்று இந்தியா ஆசைப்படுகிறது. ஆகவே, குடியேற்ற நாட்டுக்காரர் ஒருவரை இந்தியாவில் ஒரு கவர்னராக நியமித்ததை அவமானமாகச் சில இந்தியர் கருதுவதாய்த் தோன்றுகிறது" என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இதைப் படித்த ஒருவருக்குக் கோபம் வந்து விட்டது. "இந்தியாவுக்கு இனிக்கப் பேசுவதற்காகக் குடியேற்ற நாடுகளை அவமதிப்பதா? குடியேற்ற நாடுகளே பூர்ணசுயேச்சை உடையவைதான். பிரிட்டனும் ஒரு குடியேற்ற நாடு மாதிரிதான். அதிலிருந்து ஒருவரை இந்திய கவர்னராய் நியமிப்பது சரியென்றால், ஆஸ்திரேலியர் ஒருவரையும் ஏன் நியமிக்கலாகாது?" என்று சீறினர். "வாஸ்தவம். ஆனால், ஒரு குடியேற்ற நாடு, சுயேச்சை பெறத் தீர்மானித்தால், பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அல்லவா சட்டம் நிறைவேற வேண்டும்? பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே சட்டம் நிறைவேறா விட்டால், குடியேற்ற நாடு எதுவும் பிரிய முடியாதே. இப்பேர்ப்பட்ட குடியேற்ற நாட்டந்தஸ்து, எப்படிப் பூர்ண சுயேச்சையாகும்?" என்று பதில் சொல்லுகிறார் 'ஜேனஸ்.' வியாக்கியானமும் தேவையா?

ரெயில் கட்டண உயர்வு: நகரங்களுக்குப் பத்து மைலுக்குள் வசிப்பவர்களின் ஸீஸன் டிக்கட்டுகளைத் தவிர, மற்ற ரெயில் கட்டணங்களையெல்லாம், ஏப்ரல்மீ 1-ஆம் தேதியிலிருந்து, 25 சத விகிதம் உயர்த்தி விடுவதென்று இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். இதனால் 10 கோடி ரூபாய், சர்க்காருக்கு அதிக சம்பாத்தியம் ஏற்படுமாம். ரயில்வே மெம்பர் இந்திய அசெம்பிளியில், 'ரயில்வேயை உபயோகிப்பவரிடமிருந்து இன்று வாங்கும் இந்தப் பணத்தைக் கொண்டு, யுத்தத்துக்குப் பின் அவருக்கே நன்மை செய்யப் போகிறோம்' என்று கூறினர். 'அவர் செத்த பிறகா?' என்று கேட்டார் ஓர் அங்கத்தினர். இந்தக் கட்டண உயர்வால், ஏழைகளே அதிகக் கஷ்டப் படுவார்கள். இன்று அவர்களின் பணத்தைப் பறிப்பானேன்; நாளைக்கு நன்மை செய்வதாகச் சொல்வானேன்? விவசாயிகளின் பொருள்கள் நாலு மடங்கு விலை அதிகரித்து விட்டதாம்; தொழிலாளிகளின் சம்பளம் மூன்று மடங்கு ஏறி விட்டதாம். ஆகையால், அவர்களுக்கு இந்தக் கட்டண உயர்வால் சிரமமில்லை என்கிறார் சர்க்கார் மெம்பர். சகல விலைகளும் ஏறி வாழ்க்கைச் செலவு பல மடங்கு உயர்ந்திருக்கும் போது, இந்த உபத்திரவமும் வேண்டுமா அவர்களுக்கு? பணப் பெருக்கத் தொல்லையைக் குறைக்கவே, இந்த நடவடிக்கை என்றும் ஒரு காரணம் அவர் கூறுகிறார். ஏழை மக்கள் முதலாய் உபயோகிக்கும் ஒரு சாதனத்துக்கு அதிக விலை வைப்பது, பணப்பெருக்கத் தீமையைக் குறைக்குமா? ஒரு நாளுமில்லை.

ருஷிய உதாரணம்: ஸோவியத் ருஷியாவில் உள்ள பதினறு குடியரசுகளும் தனித்தனியே சேனை வைத்திருக்கவும், அந்நிய நாடுகளுடன் தனித்தனியே உறவு வைத்துக் கொள்ளவும் உரிமை கொடுத்து விட்டார்கள். இதை நமக்கு உதாரணம் கூறுகிறார்கள் பாகிஸ்தான் வாதிகள். ருஷியாவில், ஸோவியத் கட்சியைத் தவிர இரண்டாவது அரசியல் கட்சியே கிடையாதே; அதற்கு இடமும் கிடையாதே? ஆரம்பத்திலேயே 'அறுத்துப் பேசும் வேலையா' அங்கே நடக்கிறது?

அன்னை கஸ்தூரி

எம். எல் சபரிராஜன்

காந்திஜி சபர்மதி ஆசிரமத்தில் இருந்த காலம். ஒருநாள் பிற்பகல், இரண்டு மணி இருக்கும். உணவு உண்ட மயக்கத்தில், எல்லோரும் அங்கங்கே படுத்து உறங்குகிறார்கள். ஆசிரமம் முழுவதும் அமைதி குடிகொண்டிருக்கிறது. சமையலறையில் ஓசையே இல்லை. அடுத்த அறையில், கஸ்தூரி பாய் அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார்.

யாரோ வரும் ஒலி கேட்கிறது. சுதந்தரமாக ஓடித் திரிந்த எலிகள் மாயமாய் மறைகின்றன. காந்திஜி அடிமேல் அடி எடுத்து வைத்து வருகிறார். சமையலறைக்குள் நுழைகிறார். அங்கே படுத்திருந்தவர்களில் ஒருவரை எழுப்பி, மெல்லிய குரலில், காதும் காதும் வைத்தாற்போல, ஏதோ சொல்லுகிறார். சமையல்காரரின் தூக்கம் பறக்கிறது. அவர் அவசர அவசரமாய், காய்கறி நறுக்கவும் தண்ணீர் எடுக்கவும் தொடங்குகிறார்.

மோதிலால் நேருவும் அவருடைய நண்பர்களும், இன்னும் சற்று நேரத்துக்குள், ஆசிரமத்துக்கு வரப்போகிறார்கள். அவர்கள் வருவதற்கு முன் சிற்றுண்டி தயார் பண்ண வேண்டும். கஸ்தூரிபாயை எழுப்ப, காந்திஜிக்குத் தைரியம் இல்லை. அவர் நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு, இப்பொழுதுதான் படுத்துறங்குகிறார்.

சாமான்களை அங்கு மிங்கும் எடுத்து வைக்கும்போது, ஓசை உண்டாகிறது. காந்திஜிக்குக் கலக்கம் உண்டாகிறது. அவர் உதட்டில் விரலை வைத்து, "உஸ், சத்தம் வேண்டாம். அடுத்த அறையில் கஸ்தூரி பாய் படுத்திருக்கிறாள். அவளுடைய தூக்கம் கலைந்து விடப்போகிறது" என்கிறார்.

அடுப்பு மூட்டி, காய்கறி நறுக்கி, ஒருவகையில் சிற்றுண்டி தயாராகப்போகும் சமயம். துரதிர்ஷ்டவசமாக, ஒரு பாத்திரம் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது. அதனால் ஓசை உண்டாயிற்று. கஸ்தூரிபாயின் தூக்கம் கலைந்தது. அவர் கண்ணைக் கசக்கிப் பார்த்தார். சமையலறையில், ஒரு பூனை சுற்றித் திரிவது வழக்கம். ஒரு வேளை அது எதையாவது கொட்டி விட்டதோ என்று அவருக்குச் சந்தேகம் தோன்றியது. எழுந்து போய்ப் பார்த்தார். என்ன அதிசயம்! அடுப்பு எரிகிறது. சமையல்காரர் அசுரகதியில் வேலை பார்க்கிறார். வெட்டுண்ட காய்கறிகளின் சின்னங்கள் அங்கங்கே தென்படுகின்றன. அவர் சமையல்காரரைப் பார்த்து, "என்ன விஷயம்?" என்று கேட்டார். சமையல்காரர், காந்திஜியின் உத்தரவை விவரமாய் கூறினார்; தூக்கத்தைக் கலைத்ததற்காகக் கஸ்தூரிபாயின்

மகாத்மா காந்திக்கு எத்தனையோ இன்ப துன்பங்களில் - இன்பங்களைவிடத் துன்பங்களே அதிகம் - மன மகிழ்ச்சியோடு பக்கத் துணை நின்ற கஸ்தூரிபாய் காந்தி இன்று நம்மிடையே இல்லை. தேசமே துயர்க்கடலுள் ஆழ்ந்திருக்கிறது. அவருடைய வாழ்க்கைச் சரித்திரம் மிக்க உருக்கமானது.

மன்னிப்பையும் கோரினர். அவருக்குச் சிரிப்பு உண்டாயிற்று. கேலியாக, "பாபுவின் வேலையா இது!" என்றார்.

அன்றையப் பகல் கழிந்தது. இரவில், பிரார்த்தனை முடிந்து, எல்லோரும் படுக்கப்போகும் சமயம். கஸ்தூரிபாய், காந்திஜியருகே சென்றார். "என்னை எழுப்பியிருக்கக் கூடாதா? நான் என்ன அவ்வளவு சோம்பேறியாகவா போய்விட்டேன்?" என்றார்.

காந்திஜி சிரித்துக்கொண்டே, "உனக்குத் தெரியாதா? இந்த மாதிரியான சமயத்தில் உன்னிடம் ஏதாவது சொல்ல, எனக்குப் பயமாய் இருக்கிறது" என்றார்.

கஸ்தூரி பாய்க்கு வெட்கம் உண்டாயிற்று. அவர் அவ்விடத்தை விட்டு அகன்றார்.

உண்மையில், சத்தியாக்கிரக ஆசிரமத்துக்கு ராணிபோல விளங்கினர் கஸ்தூரிபாய். சமையலறையில் அவருடைய ஆதிக்கமே இருந்து வந்தது. ஆனல், பாவம், முதிய வயதிலே எவ்வளவு பொறுப்பு, வேலை! நாள்தோறும் இருபது இருபத்தைந்து பேருக்குச் சமையல் செய்தாக வேண்டும். உதவிக்குச் சிலர் இருந்தார்கள். ஆனல், முக்கியப் பொறுப்பு அவரிடமே இருக்கும். திடீரென்று, இந்தியாவின் ஒரு மூலையிலிருந்து, எதிர்பாராத முறையில் பத்துப் பதினைந்துபேர் வருவார்கள். அவர்களுக்கு, உடனே சமையல் செய்து போட வேண்டும் என்று உத்தரவு வரும். அப்போது, காந்திஜிக்கும் கஸ்தூரி பாய்க்கும் இலேசான விவாதம் உண்டாகும். கஸ்தூரிபாய் கொஞ்சமும் பயம் இல்லாமல், மனதில் தோன்றியதைச் சொல்லிவிடுவார். அந்த மாதிரியான சமயத்தில், காந்திஜி ரொம்பப் பணிந்து போவார். கஸ்தூரி பாயை எதிர்த்துப்பேச, அவருக்கு மிக்க பயம்.

* * *

முதலில் சிஷ்யரை இழந்தார் காந்திஜி. இப்போது மனைவி, வாழ்க்கைத் துணைவி, வாழ்க்கைப் பாதையிலே கடைசிவரை ஒன்ருக நடந்து வந்து தொண்டாற்றுவதாகக் கங்கணம் பூண்ட மனைவியையும் இழந்தார்.

இறந்து போகிறவர்கள் அதிர்ஷ்டக்காரர்கள். அவர்கள் துன்பமயமான இந்த உலகத்திலிருந்து மறைந்து போகிருர்கள். ஆனல், உயிரோடு இருப்பவர்களுக்கு ஏக்கத்தையும் கண்ணீரையும் வைத்துவிட்டுப் போய் விடுகிருர்கள்.

சில நாட்களுக்கு முன், காந்திஜி தம்முடைய மனைவியைப் பற்றி ஒரு நண்பரிடம் கூறிய போது, "அவளுடைய சக்தி வர வரக் குன்றுகிறது. அவள் பழுத்த பழம்போல் ஆகி வருகிருள். அந்தக் கனி, கிளையிலிருந்து எப்போது கீழே விழப் போகிறதோ? அவள் ஆண்டவன் திருவடியில் போய்ச் சேருவாளாக!" என்றார். இந்தியப் பெண்களுக்கு உதாரணமாய் விளங்கிய ஒரு கனி, வாழ்க்கை என்னும் மரத்திலிருந்து கீழே விழுந்து விட்டது; சுதந்தரம் அற்றதொரு சிறைக் கூடத்திலிருந்து தப்பி, சுதந்தர மயமான ஒரு பொன்னுலகத்துக்கு, அவர் சென்று விட்டார்.

இப்போது இறந்தவர் கஸ்தூரி பாய் அல்லர்; காந்திஜியின் மற்ருெரு வடிவம். கஸ்தூரிபாயை நாம் பார்க்க வேண்டுமானல், அறுபத்திரண்டு வருஷத்துக்கு

முன் போக வேண்டும். அப்போது கஸ்தூரிபாய், பதின் மூன்று வயதுப் பெண்ணாகத் தெருவில் ஓடியாடித் திரிந்தாள். கல்யாணமானதும், கஸ்தூரிபாய் மறைந்தாள்; அதற்குப் பதிலாக 'மனைவி' என்ற பெயரில், காந்திஜிக்கு மற்றொரு வடிவம் தோன்றியது. அதுதான் 'கஸ்தூரிபாய்.' காந்தி என்ற ஜோதியில், கஸ்தூரிபாய் இரண்டறக் கலந்து விட்டார்; தேஜோ மயமான அந்த ஒளிவெள்ளத்திலே அவர் ஐக்கியமாய் விட்டார். அவர் காந்திஜியின் நிழல். செயலிலும் சிந்தனையிலும் அவர் காந்திஜியைப் பின் பற்றினார். அவருக் கென்று சொந்தமாக நினைப்பதற்கோ, செய்வதற்கோ ஒன்றும் இல்லை.

சூரியனை ஆணாகவும் சந்திரனைப் பெண்ணாகவும் கூறுவது கவிகள் மரபு. காந்திஜியைச் சூரியனாகவும் கஸ்தூரி பாயைச் சந்திரனாகவும் நாம் கொள்ளலாம். சூரியன் ஒளிக்கடவுள். அதற்கு முன், வேறு எந்த ஒளியும் நிற்க முடியாது. ஆனால், சந்திரனுக்கு இயற்கை ஒளி இல்லை. அது சூரியனிடமிருந்து கிரகித்த ஒளியைப் பிரதிபலித்தே, உலகத்துக்கு வெளிச்சம் கொடுக்கவேண்டும். ஒரு காலத்தில் சந்திரனும் சூரியனைப் போலவே நெருப்பு மயமாய் இருந்தது. அது குளிர்ந்து குளிர்ந்து, தன்னியல்பழிந்த தியாகத்தினாலேயே, இன்று சூரியனின் கனல் கதிர்களைக் குளிர்வித்து வெளிவிடும் ரசவாதியாயிற்று. கஸ்தூரிபாயின் வாழ்க்கையும் அதுபோன்றதே யாகும்.

அறுபத்திரண்டு வருஷத்துக்கு முன்னால், அதாவது, தம்முடைய பதின்மூன்றாம் வயதில் கஸ்தூரிபாய், காந்திஜியை மணந்தார். அவருக்கும், போர்பந்தரே சொந்த ஊர். தம்பதிகள் இருவருக்கும் சமவயது. ஆனால், புருஷன் ஆண்மகன் அல்லவா? அவன் அதிகாரம் செலுத்த அல்லவா பிறந்திருக்கிறான்! அந்த வயதிலேயே, காந்திஜி, தம் மனைவி மேல் அதிகாரம் செலுத்தத் தொடங்கினார். வெளியே போகக் கூடாதென்றும், மற்றவர்களுடன் பேசக் கூடாதென்றும், காந்திஜி கட்டுப்பாடு செய்வார். ஆனால், கஸ்தூரிபாய் அதைச் சற்றும் பொருட்படுத்துவதில்லை. கட்டுப்பாடு அதிகமாக ஆக, அவருடைய சுதந்தரமும் அதிகமாயிற்று.

சிறு வயதிலிருந்தே அவருக்கு மனைவி மேல் மிக்க அன்பு. பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதும், மனைவியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பாராம். 'எப்போது விடுவார்கள்? மனைவியை எப்போது பார்க்கலாம்?' என்று ஏங்குவாராம். "அவளை விட்டுப் பிரிந்திருக்க, என்னால் இயலவில்லை. இரவு வெகு நேரம் வரை, அவளைத் தூங்க விடாமல் அவளுடன் வம்பளந்து கொண்டிருப்பேன்" என்று தம் சுயசரிதத்தில் கூறுகிறார் காந்திஜி.

கஸ்தூரிபாய்க்கு எழுதப் படிக்கத் தெரியாது. காந்திஜி கற்றுக் கொடுக்க விரும்பினார். ஆனால், பாவம், இளந் தம்பதிகள்! அக்காலத்தில், கற்றுக் கொடுப்பதற்கோ கற்றுக்கொள்வதற்கோ அவர்களுக்கு மனம் இல்லை. உல்லாசத்திலேயே பொழுது கழிந்தது. இதற்காக, பிற்காலத்தில் காந்திஜி மிகவும் வருந்தியிருக்கிறார். நாற்பது வயதுக்குப்பின், கஸ்தூரிபாய்க்கு, படிப்புக் கற்றுக் கொடுக்கவேண்டு மென்று அவருக்கு ஓர் ஆவல் உண்டாயிற்று. ஆனால், என்ன பயன்?

அப்போது அவர் பொதுவாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட்டிருந்த காலம். அவருக்கு ஓய்வு கிடைக்கவில்லை. ஏதோ ஓரளவு, எழுத்துக் கூட்டி வாசிக்க மாத்திரம் கஸ்தூரி பாய்க்குத் தெரியும்.

கல்யாணமானபோது, கஸ்தூரி பாய் மிகச் சிறிய பெண். தொடர்ந்தாற்போல ஆறு மாதத்துக்கு மேல் கணவன் வீட்டில் வாழ்ந்ததில்லை. அந்தக் காலத்திலே, பெண் புருஷனை விட்டு அடிக்கடி பிரிந்து, தாய் வீட்டிலே காலங் கழிப்பது வழக்கம். ஆனால், காந்திஜிக்கோ, அவர் மனைவிக்கோ இது பிடிக்கவில்லை.

சில வருஷங்கள் கழிந்தன. காந்திஜி மேல் படிப்புக்காக இங்கிலாந்து சென்றார். அப்போது கஸ்தூரி பாய்க்கு ஒரு கைக்குழந்தை. நீண்ட காலம் கணவனைப் பிரிந்து வாழவேண்டியதாயிற்று. வேலையும் அதிகம். மாமி சொன்ன வேலைகளைச் செய்து கொண்டிருந்தார். மாமிக்கு அவர் மேல் மிக்கஅன்பு. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அவரும் விரைவில் காலமாகிவிட்டார். இப்போது மாமியும் இல்லை. கஸ்தூரிபாய் தன்னந்தனியரானார். அவருக்குக் கவலையும் வேதனையும் அதிகமாயின. 1891-ஆம் வருஷம் காந்திஜி திரும்பி வந்தார். அவர் வந்தும் என்ன? பழைய பொறுமைப் புராணமும், சந்தேகப் படலமும் ஆரம்பமாயின. சின்னஞ் சிறு விஷயங்களுக்குக் கூட மனைவிமேல் எரிந்து விழுந்தார். ஒரு முறை, கஸ்தூரி பாயைத் தாய் வீட்டுக்கு அனுப்பப் போவதாகவும் பயமுறுத்தினார். அந்தப் பேதை, பெரிதும் பணிந்து வேண்டிக் கொண்ட தன் பேரில், காந்திஜி மனம் இரங்கினார். இதற்காக, காந்திஜி பிற்காலத்தில் மிக வருந்தி, பின் வருமாறு எழுதியுள்ளார்:

"இந்த மாதிரியான கொடுமைகளை, ஹிந்துப் பெண்ணைத் தவிர, வேறு யாராலும் சகிக்க முடியாது. அதனாலேயே, நான் பெண்களைப் பொறுமையின் வடிவமாகக் கருதுகிறேன். ஒரு பாவமும் செய்தறியாத வேலைக்காரன்மேல் நாம் சந்தேகப்பட்டால், அவன் வேலையை உதறிவிட்டுப்போக வழி இருக்கிறது. அதைப்போலவே, தந்தையின் வீட்டை விட்டுச் செல்ல, மகனுக்கு வழி இருக்கிறது. நண்பன், நட்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம். மனைவிக்குக் கணவன் மேல் சந்தேகம் உண்டானால், அவள் வாய் பேசாமல் மௌனமாய் இருப்பாள்; ஆனால், கணவனுக்கு மனைவிமேல் சந்தேகம் தோன்றி விட்டாலோ, அவள் அடியோடு நாசமானாள் என்று வைத்துக்கொள்ளலாம். அவள் எங்கே போவது? ஹிந்துப்பெண் விவாகரத்துச் செய்து கொள்ள அனுமதி கிடைக்காது. சட்டத்தால், அவளுக்கு யாதொரு பலனும் இல்லை. என்னுடைய மனைவிக்கு அந்த மாதிரியான கதி உண்டாக்கியதை, நான் ஒரு நாளும் மறக்க முடியாது."

காந்திஜி தென்னாப்பிரிக்காவுக்குப் போகும்போது, மனைவியையும் குழந்தைகளையும், உடன் அழைத்துச் சென்றார். முதல் முதலாக, கஸ்தூரிபாய் ஐரோப்பிய நாகரிகத்தைக் கைக்கொள்ளத் தொடங்கினார். காலுக்கு பூட்ஸ், பார்ஸி முறையில் உடை அலங்காரம். கஸ்தூரிபாய்க்கு மிக்க சங்கடமாகவே இருந்தது. ஆனாலும், என்ன செய்வது? காந்திஜிக்கு, அந்தக் காலத்தில்

மேல் நாட்டு நாகரிகத்தின் மேல், ஒரே பைத்தியமாக இருந்தது. அதன் விளைவாக மனைவியும் அதற்கு உட்பட வேண்டிய தாயிற்று. சாப்பிடுவற்குக் கரண்டிகளை உபயோகிக்க வேண்டியதாய் நேர்ந்தபோது, கஸ்தூரிபாய் அடைந்த வேதனைக்கு அளவில்லை.

இந்தச் சமயத்தில் காந்திஜியின் மனோநிலைமை வெகு வேகமாக மாறிக் கொண்டிருந்தது. எதிர்காலத் தேசப்பணிக்காக, அப்போதிருந்தே அவர் தயாராகி வந்தார். அதற்கு, கஸ்தூரிபாய் தம்மாலியன்ற ஒத்துழைப்பையும் உதவியையும், அன்பையும் ஆதரவையும் அளித்து வந்தார். தம்பதிகளுடைய இல்வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக மாறியது.

மோஹன்தாஸ் கரம்சந்திர காந்தி, மகாத்மா காந்தியானதற்கு, கஸ்தூரிபாய் ஒரு முக்கியமான காரணம் என்பது வெளியுலகத்துக்குத் தெரியாது. காந்திஜியின் இன்பதுன்பங்களிலும், சத்தியத்தை ஒட்டி அவர் நடத்திய பற்பல போராட்டங்களிலும், அவர் சிறைச்சாலைக்குள் தவம் கிடந்தபோதும், புகழ்மாலையுடன் மலர்மாலை சூடி நின்றபோதும், முட்டை வீச்சுக்கு இலக்காகி வசைமாரி பெற்ற போதும், கஸ்தூரிபாய் ஓர் உறுதியான தளபதிபோல் அவருக்குப் பக்கத் துணையாக நின்றார். அவருக்கு அதைரிய மூட்டவோ, வேதனை உண்டாக்கவோ இல்லை. கஸ்தூரிபாய் ஓர் உத்தம மனைவியாய் நடந்து கொண்டார்.

சாரதாமணி தேவி, ஆரம்பத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தம் கணவராகக் கருதினார். அவர் தம்மைத் தவிர வேறு யாருக்கும் உரியவர் அல்லர் என்றும் எண்ணினார். அப்போது அவருக்கு மங்கைப் பருவம். காலங்கழிந்தது; இளமை மறைந்தது. ராமகிருஷ்ணர் இப்போது கணவராகத் தோன்றவில்லை; தேவனாகத் தோன்றினார். அவரை வழிபட்டுத் தொண்டு புரிவதையே தம்முடைய கடமையாகக் கொண்டார் சாரதாமணி தேவி. அதேபோல, ஸ்ரீராமகிருஷ்ணரும், சாரதாமணியை, அன்னையாகத் தொழுது போற்றினார். இதை மனதில் நிலைநிறுத்திக் கொண்டு, மற்றொரு பக்கம் பார்ப்போம்: திடீரென்று, ஒரு நாள் காந்திஜி முற்றிலும் மாறினார். தேசசேவக ரானார். பிரமசரியத்தைக் கையாளுவதென்று உறுதி பூண்டார். அன்றிருந்து, காந்தி தம்பதிகளின் உறவு, சகோதர முறையில் மாறியது. குறுகிய சுயநல பந்தங்களை, காந்திஜி அறுத்தெறிந்தார். உலகத்தையே தம் குடும்பமாகவும் அதிலுள்ள மக்களையே தம் உறவினர்களாகவும் கொண்டார். கஸ்தூரிபாய், தம்முடைய கணவராகிய மோஹன்தாஸ் காந்தியை இழந்தார்; அதற்குப் பதிலாக, இதய முழுவதும் அன்பு மிக்க 'மகாத்மா' வைத் துணைவராகப் பெற்றார்.

தென்னாப்பிரிக்காவில் வக்கீல் தொழில் புரிந்து கொண்டிருந்த காலம்.

காந்திஜியுடன் வேலைபார்த்து வந்த குமாஸ்தாக்கள், ஒவ்வொரு சமயம் அவருடைய வீட்டிலேயே தங்கி விடுவது உண்டு. காந்திஜி, அவர்களைத் தம் சொந்தக் குடும்பத்தார்களைப் போலவே நடத்தி வந்தார். இது சம்பந்தமாக, அவருக்கும் அவருடைய மனைவிக்கும் அடிக்கடி விவாதம் நிகழும். குமாஸ்தாக்களில் ஒரு



காலம் மாறிவிட்டது

கி. பி. முதல் நூற்றுண்டு

கடியாரங்கள்



TIMES HAVE CHANGED

20வது நூற்றுண்டு

ஆதிகாலத்தில் காலத்தினைக் காட்ட ஜலமானிகளை உபயோகித்து வந்தார்கள். அதைவிட சரியான காலங் காட்டக்கூடிய மணல்மானிகளை ரோமர்கள் காலத்திலும் அதற்கு முன்னுலும் உபயோகித்து வந்தார்கள். 20ம் நூற்றுண்டிலோ சாஸ்திரீயமான, அட்க்கமான, நம்பகமான வசீகரமான ஒரு கடியாரம் அவசியம். இந்த அவசியத்தை பல ரகங்களில் விற்கப்படும் வெஸ்ட் எண்ட் கடியாரங்கள் சரிவர பூர்த்தி செய்கின்றன. இலவச காட்லாக்கிற்கு எழுதவும்.

வெஸ்ட் எண்ட்

வாட்ச் கோ.

பம்பாய் - கல்கத்தா



பிஜோ ஸெமி தின் — *11"* சைஸ்
பேடலட் எவர்பிரைட் ஸ்டீல் ரூ. *150*
18 காரட் முழுத் தங்கம் ரூ. *365*



பிஜோ ஸெலகட்: பேடன்ட் எவர் பிரைட் ஸ்டீல் ரூ.*175*. *18* காரட் முழுத்தங்கம் ரூ.*475*

சாமான்கள் சரிவர வராததினுல் விளம்பரப்படுத்திய மாடல்களை சப்ளை செய்ய இயலாது. ஸ்டாக் உள்ளவரை சப்ளை செய்வோம்.

WEST END WATCH Co

Bombay - Calcutta

சக்தி மலர்

மாதம் ஒரு புத்தகம்

அரசியல், பொருளாதாரம், சயன்ஸ், கதை கட்டுரை, கவிதை, இலக்கியம், சரித்திரம், வேதாந்தம், அயல்நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில்—இவைகள் தனித்தனியே ஒவ்வொரு தமிழ் மாத முதல் வாரத்திலும் வெளிவரும். [ஆங்கிலத்தில் வெளியாகும் 'பெங்குவின்', 'பெலிகன்' மாதிரி இருக்கும்.]

[இதுவரை சக்தி மலரில் 29 புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. விலைப்பட்டி தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பிக்கப் பெறும்.]

கண்ணிழந்த துர்ப்பாக்கியப் பெண் பிரதிமா. அவளுக்கும் மனித உணர்ச்சிகள்—காதலும் கூடத்தான்—உண்டு. அவளுடைய காதல், நிறைவேறவில்லை. ஆனால், அவளுடைய தியாகம், அந்தக் காதலின் பரிபூர்ணத்தை அற்புதமாய் ஜொலிக்கச் செய்கிறது. பொருளும் புகழும் பெற்று ஒருகாலத்தில் தமிழ் நாட்டின் கலைக் களஞ்சியமாய் விளங்கிய புகார் நகர் மறைந்த சரித்திரத்தைப் பகைப் புலனாய் வைத்து எழுதிய இனிய காதல் கதை. **மாளவிகா** சக்தி மலரில் 30-வது புத்தகமாக வெளிவருகிறது.

எழுதியவர்: சரோஜா ராமமூர்த்தி

ஒவ்வொரு சக்தி மலரும் **விலை ஒரு ரூபாய்.** தபால் செலவு **மூன்றணா.** பத்து மலர்களுக்குச் சேர்த்து ஒரே தடவையில் ரூபாய் பத்து அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவின்றி அனுப்பிக்கப் பெறும்.

சக்தி காரியாலயம்

சைனா பஜார், :: சென்னை

வர் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்.

வீடு மேற்கத்திய முறையில் அமைந்திருந்தது. கழிவு தண்ணீர் வெளியே போவதற்கு, அங்கே வசதி இல்லை. சிறுநீர் கழிப்பதற்கு, ஒவ்வோர் அறையிலும் ஒரு பானை இருந்தது. அதை, காந்திஜியோ, அல்லது அவருடைய மனைவியோ அலம்புவது வழக்கம். அதற்காக, தோட்டியையோ வேலைக்காரர்களையோ அவர்கள் தேடுவதில்லை. அவர்களுடன் நன்றாகப் பழகிய குமாஸ்தாக்கள், அவரவர்களின் அறையில் இருக்கும் பானையை அவரவர்களே அலம்பி விடுவது வழக்கம். ஆனால், அந்த ஹரிஜனக் குமாஸ்தா புதியவர். அவருக்கு விஷயம் தெரியாது. ஆகையால், அவருடைய அறையிலிருந்த பானையை, காந்தி தம்பதிகளே அலம்ப வேண்டியதாக நேர்ந்தது. கஸ்தூரிபாய் மற்ற அறைகளில் இருந்த குடங்களை எல்லாம் அலம்பினர். ஹரிஜனக் குமாஸ்தாவின் அறையில் இருந்த குடத்தை மாத்திரம் அலம்பவில்லை; அலம்ப முடியாதென்றும் கூறிவிட்டார். இருவருக்கும் சச்சரவு உண்டாயிற்று. அதைப் பற்றி, காந்திஜி தமது சுய சரிதையில் பின்வருமாறு கூறுகிறார்:

"அவளுடைய கோபக் காட்சி இன்னும் என் கண் எதிரில் நிற்கிறது. அவளுடைய கண்கள் சிவந்திருந்தன. குடத்தைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கும்போது, முத்துப்போன்ற கண்ணீர்த் துளிகள் அவளுடைய கன்னங்களிலிருந்து வழிந்தன. ஆனால், நான் அன்பு நிறைந்த கணவன்தான்; என் அன்பே அவளுக்குக் குரூரமாய் முடிந்தது. அவளுடைய ஆசிரியனாக என்னை நான் நினைத்துக் கொண்டேன்."

கஸ்தூரிபாய் மனம் இல்லாமல் ஒரு காரியத்தைச் செய்வதில், காந்திஜிக்கு விருப்பம் இல்லை. அவருக்குக் கோபம் உண்டாயிற்று. "இந்த வீட்டிலே இம்மாதிரியான அபத்தத்தை எல்லாம் சகித்துக் கொண்டிருக்க இனி என்னால் முடியாது" என்று இரைந்தார். இது, நெஞ்சில் அம்பு தைப்பதுபோல் இருந்தது கஸ்தூரிபாய்க்கு. "உங்கள் வீட்டை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்; நான் போகிறேன்" என்றார். காந்திஜிக்கு ஆத்திரம் உண்டாயிற்று. கஸ்தூரி பாயைக் கரகர வென்று இழுத்துக் கொண்டு போய், வெளியே தள்ளுவதற்காக, கதவைத் திறக்க முயன்றார். கஸ்தூரிபாயின் கண்ணிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் வழிந்தது. அவர், பரிதாபமான குரலில், "உங்களுக்குக் கொஞ்சங்கூட வெட்கம் இல்லையா?...நான் எங்கே போவது? என்னை அழைத்து வைத்துக் கொள்வதற்கு, இங்கே தாயார் தகப்பனரோ, சொந்தக்காரர்களோ இருக்கிறார்களா? நான் உங்கள் மனைவி என்பதற்காக, எல்லா அவமரியாதையையும் சகித்துக் கொள்ள வேண்டுமா? கடவுளின் பொருட்டாகவாவது, நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள். கதவை மூடுங்கள்; வெளியில் யாராவது பார்க்கப் போகிறார்கள்" என்றார்.

காந்திஜியின் கோபம் தணிந்தது. அவருக்கு வெட்கம் உண்டாயிற்று. இந்த மாதிரியாக, அவர்களின் குடும்ப வாழ்க்கையில் பல சச்சரவுகள் நடந்திருக்கின்றன. ஆனால், இறுதியில்

அவை யாவும் சுமுக மாகவே முடியும்.

காந்திஜி தென்னுப்பிரிக்காவில் இருந்து இந்தியாவுக்குப் புறப் படும் போது, தென்னுப்பிரிக்க இந்தியர்கள் அவருடைய சேவை யைப் பாராட்டி அவருக்குப் பல பரிசுகள் வழங்கினர்கள். அவற்றை வைத்து என்ன செய்வ தென்று காந்திஜிக்குப் புரிய வில்லை. பொதுஜன சேவை புரி பவர்கள் யாரிடமிருந்தும் நன் கொடைகளையோ, பரிசுகளையோ பெறுவது சரியல்ல என்பது காந்திஜியின் கருத்து. அதை ஒரு பொதுக்காரியத்துக்கு உப யோகிப்பது என்று காந்திஜி முடிவு செய்தார்.

பரிசு வந்த பொருள்களுள், கழுத்துச் சங்கிலியும் ஒன்று. அது கஸ்தூரி பாய்க்கு என்று கொடுக்கப்பட்ட தாகும். அப் போது கஸ்தூரி பாய்க்குக் கொஞ்ச வயது. நகைமேல் ஆசை நீங்காத பருவம். சங்கிலி யைத் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டார். அவர் அழு தார், வாதாடிப் பார்த்தார். குழந்தைகளுக்குக் கல்யாண மாகும்போது, மருமகளின் கழுத் தில் போடுவதற்காவது இருக்கட் டும் என்று சொல்லிப் பார்த்தார். ஆனல், காந்திஜி விடவில்லை. "இந் தக் குழந்தைகள் வளர்ந்து, கல்யாண வயதடையும்போது தெரியாதா? அதற்கு, இப்போ திருந்தேயா தயார் செய்யவேண் டும்?" என்ருர், கேலியாக. "ஆம்" என்ருர் கஸ்தூரி பாய். "மரு மகள் கேட்கும்போது, நான் வாங்கிக் கொடுத்து விடுகிறேன்" என்ருர் காந்திஜி. கஸ்தூரி பாய்க்கு ஆத்திரமும் எரிச்சலும் உண்டாயிற்று. "வாங்கிக் கொடுப்பீர்களே! நன்ருய் வாங் கிக் கொடுப்பீர்கள்!! உங்கள் சேதி எனக்குத் தெரியாதா, என்ன? இப்படிச் சொல்லிச் சொல்லி, என்னையும் வெறுங் கழுத்தாக்கி விட்டீர்கள். இனி மருமகளுக்கு வாங்கிக் கொடுக் கப் போகிறீர்களோ, மருமக ளுக்கு!" என்ருர். என்ன முயன் றும் பயன் இல்லை. எல்லா நகை யும் பொதுச் சொத்தாயிற்று.

ஒரு முறை, ஹரிஜன நிதிக்காக வந்த பணத்தில் நாலணுவைத் திருப்பிக் கொடுக்க, கஸ்தூரிபாய் மறந்துவிட்டார். காந்திஜி, இதை ஒரு பெரிய குற்றமாகக் கருதி ஞர்; கஸ்தூரிபாயை பிராயச்சித் தம் செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினர். பார்க் கப் போனல், இது ஞாபக மறு தியால் நேர்ந்த ஒரு சிறு தவறு. ஆனல், காந்திஜிக்கு, சிறிய தவறு என்று எதுவும் கிடையாது அல்லவா?

கஸ்தூரி பாய் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்றதில்லை. எழுத்துக் கூட்டி வாசிப்பதுதான கல்வி? தேசீயப் போராட்டம், துன்ப வாழ்வு, சிறைச்சாலை என்ற பெரிய பெரிய பள்ளிக்கூடங் களிலே கல்வி கற்று, அநுபவ முதிர்ச்சியடைந்தார். சாம்பரான் சத்தியாக்கிரகத்தின் போது, அவர் காந்திஜிக்கு வலது கையாக விளங்கினர். 1923-ஆம் வருஷம் காந்திஜி சிறை புகுந்தபோது, அவர் தேசத்துக்கு விடுத்த வீர வாசகம், நம்மவர்களின் மனதை விட்டு இன்னும் நீங்கி யிராது; அது வருமாறு:

"என் அன்பார்ந்த சகோதரர் களே, சகோதரிகளே, என் கண வருக்கு ஆறு வருஷ தண்டனை கிடைத்திருக்கிறது. இது, ஓரளவு என் மனதைக் கலக்கிய போதி

லும், தண்டனையைக் குறைக்கத் தக்க அதிகாரம் நம் கையில் இல்லையென்பதை உணர்ந்தபோது, ஆறுதல் அடைந்தேன். இந்தியா விழித்தெழுந்து, காங்கிரசின் நிர்மாணத் திட்டங்களை மேற்கொள்ளுமானால், நாம் அவரை இலகுவில் விடுவிக்கலாம்......... ஆகையால், பரிகாரம் நம்மிடமே இருக்கிறது. அதில் நாம் தோல்வியடைந்தால், குற்றம் நம்முடையதே.''

காந்திஜி பொது வாழ்க்கையில் இறங்கியதிலிருந்து, கஸ்தூரிபாய் தம்முடைய சொந்த சுகபோகங்களைத் துறந்தார். கணவன் கேட்டதை எல்லாம், அவர் இல்லை என்னாமல் கொடுத்தார். ஓயாத தியாகம் என்னும் செங்குத்தான பாறையிலே அன்னை கஸ்தூரிபாயின் பாதங்கள் ஒரு போதும் பதறவில்லை, சறுக்கியதும் இல்லை. சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பமானபோது, இளைஞர்களைப் போல வெகு உற்சாகத்துடன் சிறை புகுந்தார். ராஜகோட்டை சத்தியாக்கிரகம் ஆரம்பமான போது, தள்ளாத வயதில் முதல் முதலாகச் சிறை சென்றவர் அவரே.

கடைசி முறையாக அவர் சிறை சென்றது, 1942-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 9-ஆம் தேதியன்று. காந்திஜியையும் காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களையும் கைது செய்த பம்பாய் சர்க்கார், பிர்லா மாளிகையில் தங்கியிருந்த கஸ்தூரிபாயையும் பியாரிலாலையும் சுசீலா நாயரையும் கைது செய்து கொண்டுபோய், ஆகாகான் மாளிகையில் கைதிகளாக வைத்தார்கள்.

கஸ்தூரி பாய் நோயுற்றிருப்பதாக, சென்ற வருஷம் டிசம்பர் மாதம் 4-ஆம் தேதியே செய்தி வந்தது. இருமுறை மாரடைப்பால் அவதியுற்றதாக, பம்பாய் சர்க்கார் அறிக்கை வெளியிட்டார்கள். தவிரவும், அவருடைய புத்திரர்களும் பேரர்களும் போய் அவரைப் பார்த்து வர, அனுமதியும் அளித்தார்கள்.

ஓரளவு அவருக்குக் குணமான போதிலும், திடீரென்று நோய் இம் மாதம் அதிகமாயிற்று. பிப்ரவரி மாதம் 21-ஆம் தேதி பம்பாய் சர்க்கார் வெளியிட்ட அறிக்கையில், கஸ்தூரிபாயின் தேகநிலைமை மோசமாகி வருவதாக அறிவித்தார்கள். 22-ம் தேதி மாலை காலமானார். எங்கும் எதற்கும் கலங்காத அந்த மகாதீரன் காந்திஜி கூட, கண்கலங்கி, ஒரு துளிக் கண்ணீர் சிந்திவிட்டார். தேசமே – என், உலகின் பல கோடியிலும் கூட, துயரம் சூழ்ந்துள்ளது.

ஸ்ரீ மதன்மோகன் மாளவியா கூறியது போல, கஸ்தூரிபாய் ஹிந்துப் பெண்களுக்கு ஒரு சிறந்த உதாரணம். சாவிலும் ஹிந்துப் பெண்களுக்குரிய கடமையில் தவறவில்லை. எழுபத்தைந்து வயதுக்குப் பின்னால், சுமங்கலியாய்க் காலமாவது எல்லோருக்கும் கொடுத்து வைக்கக் கூடிய பாக்கியம் அல்ல.

ஸ்ரீமதி கஸ்தூரிபாய் ஒரு சிறந்த அன்னை, பதிபக்தி மிக்க மனைவி, உன்னத தேச சேவகி. மங்களகரமான சிவராத்திரி புண்ணிய காலத்திலே உலக வாழ்வை நீத்த அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக!

*

இருளும் ஒளியும்

'சீரும் தளையும் தெரியாதவர்கள் பாட்டெழுதக் கூடாது' என்று பண்டிதர்கள் கட்டாயம் சொல்வார்கள்; வேறு சில நண்பர்களும் கூடத் தான் அவ்வாறு சொல்லலாம். சிறுகதை உலகில் கீர்த்தி பெற்ற நண்பர் பிச்சமூர்த்தி, 'பாட்டு' எழுதவில்லை; ஒரு புதிய பரிட்சை செய்கிறார். என்னவென்று தான் பார்ப்போமே.

ந. பிச்சமூர்த்தி

உலகின் ஆதிகாலம்: முதல் இரவு.

மனிதர்கள் :

பரிதிக் கதிர் பரவி நிற்க
மர நிழலில் சுகித் திருந்தோம்.
இரவில் ஒளி ஏற்றும் வேலை,
வந்த தேனோ விரை வினிலே!
பரவி நிற்கும் பாரினிலே
தேங்கி நின்ற பகலொளியும்
காணாது போன தென்ன;
கனலாது அவிந்த தென்ன?
பாய்ந்து வந்த பால் பசுவும்
தடம் கெட்டுத் தொலைந்த தென்ன?
பறந்து வந்த பொன் பருந்து
சிற கொடுக்கிச் சோர்ந்த தென்ன?
இரு ளெங்கும் சூழ்ந்த தென்ன?
உயி ரெங்கும் ஓய்ந்த தென்ன?
பொன் னொளியும் புதைந்த தெங்கே?
போன வெயில் புகுந்த தெங்கே?
பாழு நெஞ்சம் பதைக்கு தையோ!
இந்திரனை இறைஞ்சிக் கேட்போம்.

'வருகவே, இந்திரா!
தருகவே வெற்றி.
மறையவோ வெய்யில்
மடியவோ நாங்கள்?
மது வினைப் பருகி,
ஒளியினை மீட்டு,
விண்ணின் விளக்கை
விடுதலை செய்திடு.
வருகவே இந்திரா!
தருகவே தெளிவு!'

பிரார்த்தனையின் பெரும் வலியால்
பெருமை கொண்ட இந்திரனும்,
சோமபானம் செய்து விட்டு,
ரிபுக்கள் செய்த பொன் ரதத்தில்,

இடி மின்னல் அதிர் வெடிகள்
எதிரொலித்து ஓசை செய்ய,
கருங் குதிரை சேர்த் திணக்கிப்
போர்க் கோலம் பூண் டெழுந்தான்.
பேரவையின் பெருந் தலைவன்
போர்க் கோலம் பூண் டெழுவே,
பேசாமல் மருத்துப் படை
மூவேழும் புரண் டெழுந்து,
பொன் ஈட்டி, பொன் பரசு,
பூ மாலை கவச முடன்
தம் தேரை முன் நிறுத்தித்
தாரைபோல் எக்களித்தார்.

மருத்துக்கள் :

'போர் வேண்டிப் புறப்பட்டீர்,
அறிவீரோ பகைவன் இடம்?
ஒளித்திருட்டுச் செய் வயிரி
இருள் மலையில் துள்ளுகிறான்;
விருத்திரனும் வெம் அசுரன்
வாய்வீச்சு வீசுகிறான்.
அகி என்னும் இருள் அரவைக்
காவல் வைத்தான் ஒளி மணிக்கு.'

இச்செய்தி கேட்ட இந்திரன்
உதிரம் கொதித் தெழவே,
துவஸ்திராவின் கைத் திறத்தால்
தோன்றிய வெம் வச்சிரத்தை
வேகமாய் வாங்கி வீசிப்
போர்க்கதியில் பாய்ந்து விட்டான்.
காடு மலை எல்லாம்
மருத்துக்கள் மோத;
கலவரத்தில் காற்றுக்கள்
அரிமா போல் உறும;
பேய்க்காற்றில் மரமெல்லாம்
பயிர்கள் போல் சாய;
போரொலிகள் பாரெங்கும்
பேய் போலக் கூவ;
பாய்ந்தது பார் இந்திரன் தேர்
மருத்துக்கள் தொடர.
நக்ஷத்ர போதையிலே
நள்ளிரவு வீதியிலே
உருண்டோடும் எழில்படையை
உற்றுணர்ந்தார் உலகமக்கள்.

*　　　*

வான் கருவில் இருள் மலைகள்
வரிசையாய் விம்மி நிற்க;

இருள் மலையின் மைக்குகையில்
ஒளி மாடு ஓலமிட;
கதிர்க் கன்றின் சோக ஒலி
கடுஞ் சிறையில் கம்ம;
பரிதி எனும் பொன் பருந்து
பாய்ச் சலின்றிக் கிடக்க;
பரிதித்தீ பேய்க் குகையில்
தென் பின்றித் தூங்க;
குகை வாயில், கோரைப்பல்,
இருள் முகமும் காட்டி,
விருத்திரனும் வெம் அசுரன்
வேங்கை போல் நின்றான்.
கொடுங் கூற்றுக் கருநாகச்
சோதரனும் அகியும்—
ஒளித்தேனில் ஓரளவு
உண்டிட்ட அகியும்—
காவலனாய்க் கடு வெறியில்
காத்தது அந்தக் குகையை.

வைரிகளைக் கண்ட இந்திரன்
வெறிப்போரைத் தொடங்கி விட்டான்.
விருத்திரனைக் கண்ட இந்திரன்
வச்சிரத்தை ஏவி விட்டான்.
அகி அரவைக் கண்ட இந்திரன்
அங்குசத்தை ஓங்கி விட்டான்.
இருள் குகையைக் கண்ட இந்திரன்
வானவில்லை வளைத்து விட்டான்.
வச்சிரத்தால் அடி வாங்கி
வீழ்ந்து விட்டான் விருத்திரனும்.
அங்குசத்தால் உடம்பிரண்டாய்,
ஆவி யற்றான் அகியும்.
வானவில்லின் வன்கணையும்
திறந்த தந்தக் குகையை,

காலை

ரவியான பொன் பருந்து
விடுதலையாய் வட்டமிட்டான்.
ஒளியான பொன் பசுக்கள்
குதித்து வந்து மூச்சு விட்ட.
கதிரான கன்றுகளும்
வால்தூக்கித் துள்ளி வந்த.
போதையாம் ஒளி இன்பம்
பாரெங்கும் பொங்கியது.
இருள் கூட்டத்தின் சிறகு
பொசுங்கிற்றுப் புது ரவியில்.

தாராகக் கிழிந்த அகி
மாலையாய் மாண்டு வீழ்ந்தான்.
வீழ்ந்து விட்ட விருத்திரனே
இந்திரனிடம் வெறித்துரைத்தான் :

விருத்திரன் :

‘அகமகிழாதே, இந்திரா !
ஆவேசம் கொள்ளாதே.
வெற்றி கொட்டாதே, இந்திரா !
வையாளி போடாதே.
ஒளி நிலைக்காதே, இந்திரா !
இருளே சிரஞ்சீவி.
விருத்திரன் வீழ்ந்தாலும், இந்திரா !
வம்சம் அழியாதே.
மேகமும் ராத்திரியும், இந்திரா !
ஒளியின் பகைவர்களே.
விருத்திரன் வார்சுகளை, இந்திரா !
வீழ்த்த முடியாதே.
விருத்திரன் வீழ்ந்தாலும், இந்திரா !
இரவு வந்தே ஒழியும்.
வான விதானத்தில், இந்திரா !
பரிதிப் பட மழியும்.
பாதிப் பொழுதேனும், இந்திரா !
உண்டு எங்கள் ஆட்சி.
வெற்றி ஊதாதே, இந்திரா!
வீழ்ச்சியைச் சொல்லாதே !’

என்றிசைத்து விருத்திரன் வீழ
மருத்துக்கள் மகிழ்ச்சி கொண்டார்.

‘அழிந்த மலர் அலர்வதுண்டோ ?
விழுந்த பழம் எழுவதுண்டோ ?
போன ரத்தம் புகுவதுண்டோ ?
செத்த பிணம் பிழைப்பதுண்டோ ?’

என்றிடித்து மருத்துக் கூட்டம்
மது வெறியில் பாட்டெடுத்தார்:

‘இந்திரன் வெற்றி பெற்றனென்று பாடுவோமே;
ஒளியை மீட்டும் கண்டோமென்று ஆடுவோமே.
மாந்தர் கிலி மாய்ந்ததென்று கொட்டுவோமே;
வான் குதிரை கனைத்த தென்று தட்டுவோமே.’

* * * *

மறு இரவு

இரவு கழிந்தாலும்,
இருளும் தொலைந்தாலும்,
பரிதிப் பசுவும்
பாய்ந்து சிலிர்த்தாலும்,

கன்றுக் கதிர்கள்
குதித்துக் குனிந்தாலும்,
மா நில மாந்தர்
ஒளியில் திளைத்தாலும்,
முப்பது நாழிகை
மூர்க்கமாய்ப் பறந்தது.
முன் போலவே இரவு
மீண்டும் புகுந்தது.
வானில் பொறிகள்
வெடித்து நிரம்பின.

இயற்கையை வென்ருே மென்றே
உரைத்த அவ்வானின் வேந்தும்,
மா இருள்மாய்ந்தா னென்றே
நினைத்த அவ்வொளிப் படையும்,
மூளும் இருள் கண்டார்,
மூர்ச்சையாய் விழுந்தார், ஈசா!

அன்று முதல் அகிலமெங்கும்
ஒளியும் இருளும் கலந்து கூடி,
நற்பாம்பும் சாரைபோலும்
பின்னிக்காலம் ஓடலாச்சு.
ஒன்றென்னும் பேதமையும்
ஒளி என்னும் நுரைக்கனவும்,
புகைபோலப் போகலாச்சு;
புது விழியும் பிறக்கலாச்சு.
பரிதி செத்தால் பதில் ஒளியை
ஏற்று மந்திரம் நாமறிந்தோம்.
ஒளியை விட்டால் தீ உண்டு,
ஒன்று போனல் ஒன்பதுண்டு.

ஒளியை வணங்குவமே—தோழர்காள்
இருளில் மகிழுவமே.
ஒளி வந்து வளர்க்கும்;
இருள் வந்து காக்கும்.
உயிரின் வளர்ச்சிக்கு
அலையாம் ஓய்வாம்,
ஒளியை வணங்குவமே—தோழர்காள்
இருளில் மகிழுவமே.

வைஸிராய் குறை

நான் ஒரே ஒரு வார்த்தையில் உத்திரவிட்டால் போதும்; லட்சக் கணக்கான பேர் கீழ்ப் படிந்து நடக்கிருர்கள்... ஆனல், என் குமாரிகள் பாமீலா, பெலிஸிட்டி, ஜோன் மூவரையும் சரியான நேரத்தில் வந்து சாப்பிடும்படி செய்யமட்டில், என்னல் முடியவேயில்லை.

— வைஸிராய் வேவல்.

பேழைகள் செய்ய

உளியும் சுத்தியும் போதுமா ?

உண்மையான பாதுகாப்பளிக்கக் கூடிய பேழைகள் செய்வதற்கு, தக்க வசதிகளும், நீண்ட அனுபவமும் இன்றியமையாதவை. ஏதோ உலோகத்தினால் பெட்டிகளைச் செய்து, அவற்றிற்கு 'பேழைகள்' என்று பேரிட, வசதியும் வேண்டாம், அனுபவமும் வேண்டாம். சகல யந்திரங்கள் படைத்த தொழிற்சாலை, 'பேடன்ட்' செய்யப்பட்ட நிர்மாண முறைகள், திறமை வாய்ந்த தொழிலாளர்கள் — கீழ் நாடுகளில் வேறு யாரிடத்துமில்லாத இவ்வசதிகளும், பாதுகாப்பளிக்கும் பொருட்களைத் தயாரிப்பதில் 50 வருட அனுபவமும் படைத்தவர் கோத்ரெஜார். பல சமயங்களில் கோத்ரெஜ் பேழைகள் விலையுயர்ந்த பொருட்களை பெருந்தீக்களினின்றும், கைதேர்ந்த முரட்டுக் கொள்ளைக் காரர்களினின்றும் காப்பாற்றி, தங்கள் சிறப்பு பேரில் மாத்திர மல்லவென்பதை நிரூபித்திருக்கின்றன.

Godrej

கோத்ரெஜ்

'பேடன்ட்' 16-வளைவு

இணைப்பில்லாத

பேழை



தீ, வீழ்ச்சி, கொள்ளைக்காரர் - இவற்றினின்றும் பாதுகாப்பு

கோத்ரெஜ் & பாய்ஸ் மான்யுபாக்சரிங் கோ., லிமிடெட்.

பம்பாய்-கல்கத்தா-மதருஸ்-டில்லி-கான்பூர்-ஹைதராபாத் (டெக்கான்)

Godrej

கோத்ரெஜ்
சாவி மார்க்

சோப்புகள்

ந.1 & ந.2:	தாவர எண்ணைகளால் செய்யும் சோப்புகளில் தலை சிறந்தவை
ஸ்நாநவத்னி:	ஒப்புயர்வற்ற சுதேசி சோப்
ஸாண்டல்:	மிருகக் கொழுப்பற்ற சந்தன சோப்

சிவாஜி

தையல் நூல்

✲

பணத்தைப் போட்டு
வாங்கத் தக்க மிகச்
சிறந்த நூல் அதுவே

✲

இந்தியாவில் செய்வோர் :

ஆக்மி த்ரெட் கோ, லிமிடெட்.

பாங்க் ஆப் பரோடா பில்டிங்
அப்பாலோ தெரு, பம்பாய்.

டோங்ரே

பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு
பிரசித்தி பெற்ற டானிக்

பற்கள் வளர
உதவி செய்கிறது

அறிவிப்பு

சக்தி பத்திரிகை சம்பந்தமான கடிதங்கள், பின்வரும் விலாசத்துக்கு எழுதப்பட வேண்டும் :

சக்தி,
115-இ, மோபரீஸ் ரோடு,
ராயப்பேட்டை

புத்தகங்கள் சம்பந்தமான கடிதங்கள் பின்வரும் விலாசத்துக்கு எழுதப்பட வேண்டும் :

சக்தி காரியாலயம்,
261, சைனா பஜார்,
சென்னை

இதை அன்பர்கள் கவனிக்க வேண்டும்.

மானேஜர் :
சக்தி

காந்தி காந்திதான்

நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை

மகாத்மா காந்தி ஒரு சமயம் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு, மலையாளம், கொச்சி, திருவாங்கூர் வழியாக ஸிலோனுக்குப் போகும் திட்டத்துடன் வந்தார். அந்தச் சமயத்தில், அவர் கரூருக்கும் வருவார் என்று, அவருக்காகப் பிரயாணத் திட்டம் போட்டவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அவருக்குப் பண முடிப்புத் தருவதாக, நானும் கரூர்க் காங்கிரஸ் காரர்களும் வெகு பாடுபட்டு, சுமார் 300 ரூபாய் வரையில் வசூல் செய்தோம். சுற்றுப் பிரயாண விவரம் இரண்டு மூன்று தரம் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் வெளியாயிற்று. அதிலும் கரூர் வருகிற தேதியும் நேரமும் குறிப்பிடப்பட்டிருந்தன. கரூர்க் காங்கிரஸ் கமிட்டிக்கும், காந்தியடிகள் கரூர் வருகிற விவரங்களை, சுற்றுப் பிரயாண அதிகாரிகள் கடித மூலமாக எழுதியிருந்தார்கள். இதனால், கரூர்த் தாலுக்கா முழுவதும் கிராமம் கிராமமாகத் தொண்டர்களை அனுப்பி, விளம்பரப் படுத்தி, வெகு விமரிசையான வரவேற்பு நடத்த வேலை செய்தோம்.

'காந்தி வரப்போகிறார், வரப்போகிறார்' என்று ஊரெல்லாம் பரவிவிட்டது. நண்பர்களெல்லாம் மகாத்மாஜியை வரவேற்க, பேருற்சாகத்தோடு, ஏற்பாடு செய்கிறார்கள். இந்நிலையில், 'இடி' போல், 'அவர் வர மாட்டார்' என்று ஒரு தந்தி வந்தால் எப்படி இருக்கும்? மாறிய திட்டத்தைத் திருத்த வழியேயில்லை. காந்திஜியே தன்னலத் தியாகத்தின் மூலம் அதற்கு வழி காட்டுகிறார். காந்தி காந்திதான். அதில் என்ன ஆட்சேபனை?

ஆனால், காந்தியடிகள் கரூருக்கு வருவதாக விளம்பரப் படுத்தியிருந்த தேதிக்கு மூன்று நாள் முன்னால், எங்களுக்கு ஒரு தந்தி வந்தது. அது சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அனுப்பிய தந்தி. அதில் "காந்தியடிகளின் உடல் நலத்தைக் கருதி, கரூருக்கு வருவது ரத்தாகி விட்டது. ஏமாற்றத்தை மன்னிக்க வேணும்" என்று கண்டிருந்தது. எனக்கு இடி விழுந்ததுபோல் ஆகிவிட்டது. வரவேற்புக்காக என்னுடன் பெரிதும் பாடு பட்டு வேலை செய்த கந்தசாமிச் செட்டியார், ராமசாமி ஐயர், வெங்கட்ரமணஸ்வாமி ஐயர், நன்னு சாயபு முதலிய பலருக்கு, வருத்தத் தோடு கோபமும் பொங்கி விட்டது. ஒரு மாதமாகக் கடிதப் போக்குவரத்து நடத்தி, பிரயாணத் திட்டத்தில், கரூர் சேர்த்துக் கொள்ளப்பட்டது. சேர்த்துக் கொள்ளப்பட்ட பிறகு, இருபது நாளாக அதை விளம்பரப்

படுத்தி, போகாத இடங்களுக்கெல்லாம் போய்க் கேட்காதவர்களை யெல்லாம் கேட்டுப் பணமும் வசூல் செய்து, எல்லா ஏற்பாடுகளும் முடிந்து, தாலுகா முழுவதும் ஒரே பரப்பரப்பாக, காந்தியடிகளின் தரிசனத்துக்குக் காத்துக்கொண் டிருக்கிற சமயத்தில், இப்படி ஒரு தந்தி வந்தால்,யாருக்குத்தான் கோபம் வராது?

என்ன செய்வதென்று தெரியவில்லை.

கடைசியாக, டாக்டர் ராஜனைக் கேட்போம் என்று, நானும் கந்தசாமிச் செட்டியாரும் திருச்சிக்கு ஓடினோம். தந்தியைக் காட்டினோம். அவரும் அதிசயப்பட்டு வருத்த முற்றார். உடனே கோயமுத்தூருக்குச் சென்று, ஆச்சாரியாரைச் சந்தித்துப் பேசும்படி, டாக்டர் ராஜன் எங்களுக்கு யோசனை கூறினார். கரூருக்கு மகாத்மாஜி வரவேணும் என்ற முயற்சிகளில் ராஜனும் கலந்திருந்தபடியால், அவர் எங்களுக்கு ஒரு சிபார்சுக் கடிதமும் கொடுத்தார். நேரே கோயமுத்தூருக்குப் போனோம்.

காந்தியடிகள் ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியாரின் வீட்டில் தங்கியிருந்தார். நாங்கள் அங்கே போன சமயத்தில், கோபிச் செட்டி பாளையத்திலிருந்து, எங்களைப் போலவே மனக் குறையுடன், ஸ்ரீ சுப்பண கவுண்டரும் இன்னும் சிலரும் வந்திருந்தார்கள். கோபிச் செட்டி பாளையமும், கரூரைப் போலவே வருவதாக வாக்களிக்கப் பட்டு, ஏற்பாடுகளெல்லாம் முடிந்த பிறகு, கடைசி நேரத்தில் நீக்கிவிடப்பட்டது.

எனக்கு ஆச்சாரியா ரிடத்தில் கொஞ்சம் செல்வாக்கு உண்டென்று பேர். ஆச்சாரியாரும் ஸ்ரீ எஸ். ராமநாதனும் தான், அந்தப் பிரயாணத் திட்டத்துக்கு அதிகாரிகள். ஊர்களைச் சேர்த்துக் கொள்வதோ, விட்டுவிடுவதோ,எல்லாம் அவர்களுடைய தீர்மானத்துக்கு உட்பட்டது. பிரயாணத் திட்டத்தின் விவரங்கள், காந்தியடிகளுக்குத் தெரியாது. அப்போதைக் கப்போது ஆச்சாரியார் தீர்மானிக்கிற ஊர்களுக்குப் போவது என்ற அளவில்தான், காந்தியடிகள் தமது பிரயாணத் திட்டத்தை அறிவார்.

நான் ஆச்சாரியாரைக் கண்டு, கரூரை இப்படித் திடீரென்று நீக்கிவிட்ட அநியாயத்தை மாற்றும்படி கேட்டுக் கொண்டேன். அவர் "என்ன செய்வது? காந்திஜிக்கு உடம்பு சரியாயில்லை. அவருடைய சௌக்கியத்தைத் தானே நாம் முதலில் கவனிக்க வேண்டும்? உங்களுக்குத் தெரியாததா? புதிதாகக் கள்ளிக் கோட்டை, கொச்சி முதலான பல இடங்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. எல்லா இடங்களுக்கும் அவரை மோட்டாரில் வைத்து அலைக்கழிப்பது ஆபத்தாக முடியலாம். அதற்காகச் சில இடங்களை நீக்க வேண்டியிருந்தது. உங்களுக்கு வெகு வருத்தமாகத்தான் இருக்கும்; பொறுக்க வேண்டும்" என்றார்.

"என்ன சொன்னாலும் இது மிகவும் கொடுமையான அநியாயம். வருவதாக வாக்களித்து, பத்திரிகைகளி லெல்லாம் விளம்பரப் படுத்தி, ஏற்பாடுகளெல்லாம் முடிந்து, எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற ஊர்களைத் தள்ளிவிட்டு, புதுப்புது ஊர்களை சேர்த்துக் கொள்வது, காந்தி

யடிகளின் உபதேசங்களுக்கே விரோதமாக இருக்கிறதே" என்று வாதித்தேன்.

"என்ன செய்வது? நீங்கள் சொல்வது சரியான நியாயம் தான். காந்திஜியின் தேக சௌக்கியத்தைக் கவனிக்க வேண்டாமா?" என்றார் ஆச்சாரியார்.

"கொண்ட கொள்கைகளையும் விட்டு விட்டு, சரீர சௌக்கியத்தைப் பெரிதாக எண்ணுகிற வரா காந்திஜி?" என்றேன்.

"காந்திஜி அப்படி எண்ண மாட்டார். ஆனால், நாம் அவருடைய சுகத்தைக் கவனிக்க வேண்டாமா?"

"சரி, அப்படி உடல் நலத்துக்காகச் சில இடங்களை விட்டு விட வேண்டியது என்றால், வேறு பல இடங்களைப் புதிதாகச் சேர்த்திருப்பது நியாயமா?" என்றேன்.

"அது நியாயம் இல்லைதான். இருந்தாலும் சேர்த்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. என்ன செய்வது? பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றார் அவர்.

"காந்திஜீ வருகிறார் என்று வாங்கின பணத்தை என்ன செய்வது?" என்றேன்.

"அதைக் கரூர்வாசிகள் பேரால் இங்கே கொடுத்துவிடுங்களேன்" என்று பதில் சொன்னார் ஆச்சாரியார்.

ஆச்சாரியாரை உண்மையில் எனக்கு ஓர் ஆசாரியனாகவே கருதுகிறவன் நான். என்றாலும், அந்தச் சமயத்தில் எனக்கு அவர் மேல் வெகு எரிச்சலுண்டாகி விட்டது. அதை அடக்கிக் கொண்டு, "அப்படிச் செய்தால், ஜனங்கள் சும்மா விடுவார்களா? இனிமேல் அவர்கள் எங்களையும் நம்ப மாட்டார்கள்; உங்களையும் நம்ப மாட்டார்கள்; காந்திஜியையும்கூட நம்ப மாட்டார்களே!" என்றேன்.

ஆச்சாரியார் அதை ஒப்புக்கொண்டது போல் சிரித்துவிட்டு, "என்ன செய்வது? காந்திஜியின் சரீர சௌக்கியம் ஒன்றையே கருதித்தான் இப்படிச் செய்ய வேண்டியிருந்தது. தயவு செய்து பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று, வெகு அமைதியுடன் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

நானும் கோபி நண்பர்களும், ஆச்சாரியாரை விட்டுவிட்டு, ஸ்ரீராமநாதனிடம் சென்று முறையிட்டுக் கொண்டோம். அவர் "நான் என்ன செய்யட்டும்? ஆச்சாரியார் அப்படி முடிவு செய்து, திட்டத்தை மாற்றி, பத்திரிகைகளுக்கும் அனுப்பி விட்டார். இனிமேல் ஒன்றும் செய்வதற்கில்லை" என்று கையை விரித்தார்.

சொல்ல முடியாத துக்கத்தோடு, நானும் கந்தசாமிச் செட்டியாரும் கோபியிலிருந்து வந்திருந்த ஐந்தாறு நண்பர்களும், ஒரு மரத்தின் அடியில் போய் உட்கார்ந்தோம். ஒவ்வொருவர் முகத்திலும் பொரி பறக்கிறது கோபம்; கண் கலங்குகிறது; வாய் துடிக்கிறது. கொஞ்சம் கொதிப்பு ஆறினவுடன், சத்யாக்கிரகம்செய்ய வேண்டும் என்றும் சண்டித்தனம் காட்ட வேண்டுமென்றும், ஆளுக்கு ஒரு யோசனையாய்ப் பேசினார்கள்.

கடைசியாக, நான் ஒரு யோசனை சொன்னேன்: "நாம்

எல்லோரும் சேர்ந்து காந்திஜியையே நேரில் கண்டு, 'இது சரிதானா?' என்று கேட்டு விடுவோம்" என்றேன். அதை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள்.

காந்தியடிகள் தினந் தினம் மத்தியான ஆகாரத்துக்குப் பிறகு, கொஞ்சம் படுத்திருப்பார். அதற்குப்பின், ஒரு மணி நேரம் நூல் நூற்பார். பேட்டி காண வந்தவர்கள் இருந்தால், நூற்றுக்கொண்டே அவர்களுடன் பேசுவது அவர் வழக்கம். அந்தத் தருணத்தில் நாங்கள் நேரில் சென்று காந்தியடிகளைக் கேட்டு விடுவதென்று முடிவு செய்து கொண்டு, எல்லாரும் ஷண்முகம் செட்டியாரின் விருந்தினராகச் சாப்பிட்டோம். காந்திஜி நூல் நூற்கும் காலத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தோம். எங்களிடத்தில் மிகவும் அனுதாபம் கொண்ட ஒரு தொண்டருடைய தயவால், காந்திஜி நூல் நூற்க ஆரம்பித்துவிட்டார் என்று அறிந்தோம்.

நாங்கள் சுமார் பத்துப் பேர், திபு திபு என்று காந்திஜி இருந்த அறைக்குள் முன்னெச்சரிக்கை யில்லாமல் புகுந்தோம்; நமஸ்கரித்தோம். அவர் புன்சிரிப்புடன் வணங்கி, நூற்றுக்கொண்டே, வரவேற்று உட்காரச் சொன்னார். நானும் சிலரும் உட்கார்ந்தோம். கோபியிலிருந்து வந்திருந்த நண்பர்களில் ஒருவர், உட்காராமல், வெகு ஆத்திரப்பட்ட குரலில், "மகாத்மாஜி! உங்கள் பேரால் இந்த அநியாயங்கள் நடக்கலாமா?" என்று அலறினார். காந்தியடிகள் உடனே நூற்பதை நிறுத்திவிட்டு, "என்ன அநியாம்?" என்றார். உடனே, கோபிக் காங்கிரஸ் கமிட்டிக்கும், சுற்றுப் பிரயாணத்தை நிர்ணயம் செய்பவர்களுக்கும் ஒரு மாதமாக நடந்த கடிதப் போக்குவரத்துகளையும், அவைகளினால் கோபிக்கு மகாத்மாஜி வருவதாக ஒப்புக்கொண்டிருந்ததையும், பத்திரிகைகளில் வெளியான பிரயாணத் திட்டத்தில் கோபியைச் சேர்த்து விளம்பரப்படுத்தி யிருந்ததையும் விளக்கிச் சொல்லி, கடைசியாக, கோபிக்கு வருவது ரத்தாகி விட்டதென்று கொடுக்கப்பட்ட தந்தியையும் இதர கடிதங்களையும் காந்திஜியிடம் அளித்தோம். காந்தியடிகள் எல்லாக் கடிதங்களையும் சளைக்காமல் வரிசைக் கிரமமாகப் பார்த்து, தந்தியையும் படித்து விட்டு, முகத்தில் வருத்தக் குறி காட்டினார். கரூர்க் கடிதக் கற்றையையும் தந்தியையும், காந்திஜியிடம் கந்தசாமிச் செட்டியார் கொடுத்தார். அவைகளையும் காந்திஜி அலுப்பில்லாமல் படித்துப் பார்த்துவிட்டு, "பிரயாணத் திட்டங்களுக்கு அதிகாரி ராஜாஜிதான். அவரைக் கேட்போம்" என்று, ராஜாஜியை அழைக்கச் சொன்னார். அதற்கு முந்தியே அங்கே வந்திருந்த ராஜாஜி, முன்னே வந்தார்.

"ராஜாஜி! உங்கள் மேல் பெரிய குற்றச் சாட்டுகள் இருக்கின்றன. ஏன் அப்படிச் செய்தீர்கள்?" என்றார் காந்திஜி.

"ஆம்; அந்தக் குற்றச் சாட்டுகளை அறிவேன். இருந்தாலும், உங்கள் சரீர சௌக்கியத்தையும், கள்ளிக்கோட்டை, கண்ணனூர், கொச்சி, எர்ணாகுளம் முதலிய பல இடங்களுக்குப் போக வேண்டியிருப்பதையும் உத்தேசித்து, சில இடங்களை நீக்கிவிட வேண்டி யிருக்கிறது" என்றார் ராஜாஜி.

"குற்றம் சாட்டுகிற இந்த நண்பர்களுடைய ஊர்களுக்கு வருவதாக, நீங்கள் முன்னாலேயே வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்களே!" என்றார் காந்திஜி.

"ஆம். அது குற்றம்தான். இருந்தாலும்............"

"அது சரியல்ல. வாக்குறுதி என்றால், வாக்குறுதியாகத்தான் இருக்கவேண்டும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றியே தீர வேண்டும். எதிர்பாராத இடையூறுகள் ஏற்பட்டால் அல்லாமல், வாக்குத் தவறக் கூடாது......சரி: கடைசியாக நிச்சயிக்கப் பட்டிருக்கிற உங்கள் பிரயாணத் திட்டம் எங்கே?" என்று காந்திஜி கேட்டார்.

திட்டம் கொடுக்கப்பட்டது. அதில் அன்றைக்கு அடுத்த இரண்டு நாட்களும் காந்தியடிகளுக்குக் கோயமுத்தூரிலேயே ஓய்வு நாட்களாகக் குறிக்கப்பட்டிருந்தன. அந்தத் திட்டத்தைப் பூராவும் வெகு நிதானமாகப் படித்துப் பார்த்து விட்டு, மகாத்மாஜி, "நல்லவேளை! உங்களுடைய திட்டத்தையும் நான் கெடுக்க வேண்டிய சிரமம் இல்லை. நாளைக்கும் அதற்கடுத்த நாளும் கரூருக்குப் போக ஏற்பாடு செய்து விடுங்கள். அவசியமானால் புது ஊர்களைச் சேர்த்துக் கொள்ளுவதை விலக்குங்கள். வருவதாக முன்னாலேயே நீங்கள் வாக்களித்திருக்கிற எந்த இடத்தையும் நீக்க வேண்டாம்" என்றார் மகாத்மா காந்தி.

எங்களுக் குண்டான மகிழ்ச்சிக்கு எல்லை சொல்லவா? சந்தோஷத்தில் தலை கால் தெரியாமல் வெளியில் வந்தோம். எல்லாரும் வெகு வேகமாகப் போய் விட்டார்கள். நான் சற்றுத் தயங்கி ராஜாஜியிடம் விடை பெற்றுக் கொண்டேன். அவர் என் முதுகைத் தடவிக் கொடுத்து, "உங்கள் வெற்றியை நான் மிகவும் பாராட்டுகிறேன்" என்று விடை கொடுத்தனுப்பினார். வெளியில் வந்த நண்பர்கள் வெற்றி வெறியுடன் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டும் கும்மாள மிட்டுக் கொண்டும் போனார்கள். கடைசியில் வெகு அமைதியாக என்னுடன் நடந்து கொண்டிருந்த சுப்பண கவுண்டர், என்னைப் பார்த்து, "காந்தி காந்திதான்" என்று சொன்னது இன்றும் எனக்கு நினைவிருக்கிறது.

அத்தாட்சிப் பத்திரம்.

ஒரு புகையிலைக் கம்பெனியின் முதலாளி, ஜனாதிபதி ரூஸ்வெல்டிடம் சென்று, தம் கம்பெனியின் சுருட்டுக்கு ஓர் அத்தாட்சிப் பத்திரம் வேண்டுமென்று, துணிச்சலோடு கேட்டார்.

"அத்தாட்சியா? நான் கொடுத்தால், அதனால் உங்களுக்கு என்ன லாபம் கிடைக்கும்?" என்றார் ரூஸ்வெல்ட்.

"50,000 டாலர்" என்று பதிலளித்தார் முதலாளி.

"அப்படியானால் இதோ தருகிறேன்" என்று சொல்லிய ரூஸ்வெல்ட், முதலாளி கொடுத்த ஒரு புகைச் சுருட்டை வாங்கி, இரண்டு இழுப்பு இழுத்தார். பின்பு, காரியதரிசியை அழைத்து, "இந்தா, ஓர் அத்தாட்சிப் பத்திரம் எழுது; இந்தச் சுருட்டுக்களை வெறுப்பில்லாமல் குடித்து விடக்கூடிய இரண்டே மனிதர்கள் இந்த உலகத்தில் நானும் அவரும்தான் என்று அதில் குறிப்பிடு" என்றார்!

குரங்காட்டி

'சூரபி'

அவன் ஒரு குரங்காட்டி. ஓட்டை ஜாதிக்காய்ப்பெட்டி, அதைத் தாங்குவதற்கு இரண்டு உடைசல் சக்கரங்கள், இரண்டரைக் குரங்குகள், ஒரு சோணங்கி நாய்—இவ்வளவுதான் அவன் ஆஸ்தி. அவன் நடத்தி வந்த வியாபாரத்துக்கு மூலதனம், காரியாலயம், காட்சிச்சாலை, தளவாடம், சிப்பந்தி எல்லாம் இதுதான். எங்கள் பேட்டையிலுள்ள ஐந்து தெருக்களுந்தான் அவன் வியாபாரம் நடக்கும் பிரதேசம். அவற்றிலுள்ள சுமார் 300 குடும்பத்தினர்தான் அவன் கிராக்கிக்காரர்கள்.

இந்த வியாபாரம் எத்தனை நாளாய் நடந்து வருகிறதோ தெரியாது. நாங்கள் இந்தப் பேட்டைக்குக் குடிவந்தது முதல் அந்தக் குரல் என் காதில் பட்டுக்கொண்டுதானிருக்கிறது. தினசரி, சூரியன் தவறினாலும் அவன் தவறமாட்டான். தெருக்கோடியிலே அந்தக் குரலோசை கேட்டால், மணி எட்டு என்று கடியாரத்தைத் திருப்பி வைக்கலாம். எங்கள் வீட்டுவாசலில் கணீரென்று குரல் கேட்கும்போது, பெரிய முள் கறுக்காய் மூன்றில் வந்து நின்றிருக்கும்.

பாட்டு, பழைய பாட்டு; பெரியோர் பாடிய பாட்டு. ஆனால், அதை அந்தக் குரங்காட்டி புதுவிதமாய்ப் பாடுகிறான் - தன் சொந்தக் கற்பனையுடனும் திருத்தங்களோடும். அதைச் சகிக்க முடியவில்லை, படிப்புப் படித்த இவருக்கு. பாட்டைச் சரிப்படுத்தி விடுகிறார்; ஆனால், அவன் உள்ளத்தை இவர் என்ன செய்ய முடியும்? அது பழைய சோட்டை விட்டுத் திரும்பமுடியவில்லையே!

தெருவாசல்படியண்டை வந்து நின்ற உடனே, அந்தப் பல்லவி ஆரம்பமாகும்:

பாராயோ எந்தன் முகம்
பார்த்தொருகால் உன் கவலை
தீராயோ வாய் திறந்து
சங்கரா மகாதேவா.

கைலையங்கிரியிலே பார்வதி சமேதனாய் வீற்றிருந்து படியளக்கும் அந்த மகாதேவனையே அறை கூவியழைப்பது போலிருக்கும் அந்த வெண்கலத் தொனி. எல்லா வீட்டிலும் ஒரே பல்லவிதான்; எல்லா வாசலிலும் ஒரே நேரந்தான். பிச்சை இட்டார், இடாதார் எல்லாரும் நல்லவர்கள் தான். "மகாதேவா" என்ற அலறல் முடியுமுன்னே ஏதாவது வந்தால்தான் உண்டு. இல்லையானால் நடையைக் கட்டிவிடுவான். அடுத்த நிமிஷம் அடுத்த வீட்டில் கேட்கும் "பாராயோ எந்தன் முகம்" என்ற கர்ஜனை.

ஏதோ தப்பித் தவறி எந்த வீட்டிலாவது குழந்தைகள் நின்று கொண்டு குரங்குகளைக் கொஞ்சம் ஆழ்ந்து கவனித்தால், "ஏ, சின்ன ஐயாவுக்கு ஒரு சலாம் பண்ணு, ஏ ராமா" என்று ஆண் குரங்குக்கு உத்தரவு பிறக்கும். ராமியின் தலையில் எத்தனை வகைப் பேன்கள் இருக்கின்றன என்னும் சுவாரஸ்யமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் ராமனுக்கு இது எங்கே காதில் ஏறப்போகிறது? உடனே அதன் கவனத்தையே கையால் பிடித்திழுப்பது போல் சங்கிலியைப் பிடித்து ஓர் உலுக்கு உலுக்குவான். ஆராய்ச்சிக்கு நேர்ந்த

குந்தகத்தைப் பொறுக்கமாட்டாமல், ராமன் பல்லெலாந் தெரியக் காட்டி உறுமிக் கிரீச்சிடுவதைக் கேட்டு, பக்கத்தில் இதுவரை தலையை அவனிடம் ஒப்படைத்துவிட்டு உட்கார்ந்திருந்த பெண்மணி துள்ளிக் குதித்துச் சக்கரத்தின்மேல் உட்கார்ந்து கொள்வாள்; ராமனின் ஸ்தானத்துக்குத் தயாராகிக்கொண்டிருக்கும் குட்டி ராமனே, ஜாதிக்காய்ப் பெட்டியின் அடியிலே போய், தாய்மடியில் பற்றிக்கொள்வது போல் தொற்றிக் கொள்வான். இவர்களுக்கெல்லாம் முந்தி, குழந்தையும் ஓடிப்போய்த் தன் அம்மாவின்காலைக் கட்டிக்கொள்ளும். இதற்குள் வீட்டுக்கார அம்மாள் கொண்டுவரும் ஆழாக்கின் அடியிலே ஒட்டிக்கொண்டு கிடக்கும் நாலரிசி, அவனுடைய இடது தோளில் தொங்கும் துணிப் பைக்கு மாறிவிடும். இதைக் கண்டவுடனே, ஓடி ஒளிந்த குரங்குகள், பழையபடி தத்தம் இடத்துக்குவந்து சேர்ந்துவிடும்; அவைகளின் பஞ்ச கல்யாணியும் அடுத்த வீட்டை நோக்கிக் காலடி எடுத்து வைத்துவிடும்.

சில சமயம்—ஏதோ அபூர்வமாகத்தான் — மனிதவர்க்கத்துக்கே ஆதிகர்த்தர்களான இந்த ஜீவன்களைப் பிடித்தாட்டி வயிறு வளர்க்கும் இந்த மனிதன், கோபந் தணியாது கையை ஓங்குவான். அதைக் கண்டு அந்த நாய் வாகனம் குறுக்கேயடித்து ஓடும் ஓட்டத்தைப் பார்த்தால், அவன் வியாபார ஸ்தாபனம் அப்படியே கவிழ்ந்து விடுமோ என்று பயமாயிருக்கும்.

தன் வாழ்க்கையையே ஓர் ஓட்டைப் பெட்டியில் வைத்து, நாயைக் கட்டித் தெருத் தெருவாய் இழுத்துச் சென்றுகொண்டிருந்த இந்த விசித்திர முதலாளி தன் வியாபாரத்துக்கு விளம்பரமாகக் கொண்டிருந்த அந்தப் பல்லவி, முதல் முதலில் என் காதில் பட்டபோது, ஒரு காதின் வழியாய்ப் புகுந்து மற்றொன்றின் வழியாய் வெளியேறிவிட்டது. அப்புறம், தினசரி இந்த ஓசை சகஜமாய்ப் போய்விடவே, சப்தத்தை மட்டும் காது வாங்கிக் கொள்ளுமே யொழிய வார்த்தை இன்னது என்று உணரும்

சிரமத்தை மனம் மேற்கொள்ளாது.

ஒரு நாள் மனம், வேறு ஜோலியொன்றுமில்லாமல் வாய் முணுமுணுத்துக்கொண்டிருந்த தாயுமானவர் பாடலொன்றின் ரீங்காரத்தில், பட்டதும் படாததுமாய் ஈடுபட்டிருந்தது. அந்தச் சமயத்தில் வீட்டு வாசலில், "பாராயோ எந்தன் முகம்" என்னும் பல்லவி பாய்ந்து வரவே, என் மனப்பாட்டும் அதுவும் மோதிக் கொண்டன. "பாராயோ என்னை முகம்" என்று நான் பாடும் சமயத்தில் "பாராயோ எந்தன் முகம்" என்று என்னையே தட்டி மடக்குவதுபோல் வெறொருவர் எதிரொலித்தால் எப்படியிருக்கும்? மின்சார சக்தியின் எதிரெதிரான அலைகள் இரண்டு மோதின. உடனே ஒரு பொறி கிளம்பியது. என் காதுக்கும் மனதுக்கும் சுரணைபிறந்துவிட்டது. ஆயினும், உடனே, "பிச்சைக்காரன் பாட்டுத்தானே" என்று சமாதானம் சொல்லிற்று மனம். ஆனால், மேற்கொண்டு வந்த வார்த்தைகளைக் கேட்டபோது, எனக்குச்சிரிப்புத் தாங்க முடியவில்லை. "பார்த்தொருகால் உன் கவலை." பேஷ்! இந்தத் தடியனைப்பார்த்துத்தான், சங்கரனும் மகாதேவனும் கவலை தீர்த்துக் கொள்ளவேண்டும்!

என் சிரிப்பு அடங்குவதற்குள்ளே, விசாலம் நாலு அரிசியில் புண்ணியம் தேடிக்கொண்டு திரும்பி விட்டாள்; அவள் புண்ணியத்துக்கும் என் புரையேற்றத்துக்கும் காரணமா யிருந்த அந்த மகானுபாவனும் போயே போய்விட்டான்.

"என்ன அப்படி ஒரேயடியாய்ப் புரையேறும்படி உங்களுக்கு நீங்களே சிரித்துக் கொள்ளுகிறீர்கள்?" என்றாள் விசாலம். "பாரேன், அந்தத் தடியன் பாடும் பாட்டை: பாராயோ எந்தன் முகமாம்; பாத்தொருகால் உன் கவலை யாம்" என்றேன். "என்னவோ பிச்சைக்காரன் அவ்வளவாவது பாடுகிறானே. ஏதோ 'தங்கந் தில்லாலே' என்று பாடாமல், நல்லவர் வாக்காய் நாலு வார்த்தை சொல்லுகிறானே" என்று அவள் அவனுக்காகப் பரிந்துகொண்டு வந்துவிட்டாள். "அடி பைத்தியக்காரி, நல்லவர் வாக்குத்தான். அதை இப்படிக் கொலை பண்ணினால் நாராசமாயில்லையா? என்ன, இவன் முகத்தைப் பார்த்து மகாதேவன் கவலை தீர்த்துக்கொள்ள வேண்டுமாமே" என்று என் பிடியையே நான் சாதித்தேன். "மகாதேவனை............" என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவள், பேச்சு சுவாரஸ்யத்திலே தன்னையும் மறந்து என் பெயரைச் சொல்லிவிட்டதை யறிந்து, சட்டென்று வாயைப் பொத்திக் கொண்டு வெட்கத்தோடு சிரித்துக் கொண்டே, அடுப்பங் கரைக்கு ஓடி விட்டாள். நானும் நேரே குளிக்கப் போய்விட்டேன். ஆனால், என் மனம் மட்டும் அத் தவறான அடிகளை ரீங்காரம் செய்துகொண்டேயிருந்தது.

அது முதல், தினசரி இந்தப் பல்லவியைக் கேட்கும் போதெல்லாம் எனக்கு ஒருபுறம் சிரிப்பு வரும். மற்றொருபுறம் ஆத்திரம் வரும். ஒரு வாரம் இப்படியே கழிந்தது. அதற்கப்புறம் ஒரு நாள், சப்தம் வந்தவுடனே நான் வாசலுக்கு வெளியே ஓடிவந்து, "டேய், இந்தா" என்று அவனைக் கூப்பிட்டேன். 'இது ஏதடா என்று மில்லாமல் இன்

றைக்கு' என்று அச்சமும் நாணமும் கலந்த அடக்கத்துடன், அவன் வாசற்படி யண்டை வந்து சற்று எட்டினாற் போலவே நின்றான்.

"என்டா, உன் பேரென்ன?"

"மொட்டை, சாமி."

"சரி, நீ பாடறையே; இந்தப் பாட்டை யார் சொல்லிக் கொடுத்தது?"

"நெனப்பில்லேங்க, சாமி. சின்னப்போ இருந்து பாடிக்கினு இருக்கேன்"

"தப்புந் தவறுமா ஒளர்றயே. யார் பாடலுன்னு தெரியுமா அது?"

"பிச்சைக்காரனுக்கு என்ன சாமி தெரியும்?"

"சரி, இந்தா. இப்பொ சொல்லு, நான் சரியாய்ச் சொல்லித் தரேன். உம், சொல்லு."

ஒவ்வோர் அடியாக நாலு அடியையும் தெளிவாய்ச் சொல்லிக் கொடுத்தேன். கடைசியில் மொத்தத்தையும் திருப்பிச் சொல்லச் சொன்னபோது, ஒரு பிழையுமில்லாமல் அவன் சொன்னதைக் கேட்டு, எனக்கே ஆச்சரியமாய்ப் போய் விட்டது. எனக்கிருந்த சந்தோஷத்தில், "எய், விசாலம், ஆழாக்கு அரிசி கொண்டு வந்து இவனுக்குப் போடு" என்று தாராளமாய் மான்யம் வழங்கும் மன்னனைப்போல் கட்டளையிட்டேன். சாதாரணமாய்க் குறைந்தது இருபது வீட்டில் எதிர்பார்க்கும் அளவு அரிசி அவனுக்கு ஒரே வீட்டில் கிடைத்து விட்டது. ஆனால், அவன் முகம் மட்டும் நான் எதிர்பார்த்தபடி மலரவில்லை. இன்னதென்று வர்ணிக்க முடியாததோர் உணர்ச்சி அவன் முகத்தில் படர்ந்து விட்டது. "போய் வரேங்க, சாமி" என்று வினயத்தோடும் வெட்கத்தோடும் நன்றிக்கறிகுறியாகத் தோன்றிய புன்முறுவலோடும் விடைபெற்றுக் கொண்டான். "சரி, இனிமேல் தப்பாய்ப் பாடாதே, தெரியுமா? நான் சொல்லிக் கொடுத்தது ஞாபக மிருக்கிறதா?" என்று கேட்டு நானும் விடைகொடுத்தனுப்பினேன். ஏதோ பெரிய கைங்கரியம் செய்து விட்டது போல் பெருமிதப் பட்டுக்கொண்டது என் மூளை. ஆனால், என் மனதில் மட்டும் நிம்மதியில்லை. நான்தான் எதையோ அவனிடமிருந்து பறித்துக்கொண்டதுபோல், என் மனச்சாட்சி குற்றஞ்சாட்டிக் கொண்டேயிருந்தது.

அடுத்த வீட்டில் நான் ஓதி வைத்த வாசகங்கள் ஒலிக்குமென்று எதிர்பார்த்தேன். ஆனால், கால்மணி நேரத்துக்கு மேல் உன்னிப்பாய்க் கவனித்தும், அவன் குரலே கேட்கவில்லை. சரி, வெட்கப்படுகிறான் போலும். அல்லது ஒருவேளை பை நிரம்பிவிட்டதென்று நேராய்க் குடிசைக்குப் போய்விட்டானோ என்னவோ என்று என் விவகாரங்களில் இறங்கினேன்.

மறுநாளும் அவன் எங்கள் வீட்டுக்கு வரவில்லை. ஏன்? எங்கள் தெருப்பக்கமே வரவில்லையென்று தெரிந்தது. அப்புறம் எத்தனையோ நாள் வருவான் வருவானென்று எதிர்பார்த்தேன். காணோம். "அந்தக் குரங்காட்டி இப்போதெல்லாம் வருகிறதேயில்லையோ?" என்று விசாலத்தைக் கேட்டேன். "சும்மாப் போகிற பிச்சைக்காரனைக் கூப்பிட்டு வம்புக்கிழுத்து நீங்கள் ஞானோபதேசம் செய்யப் பார்த்

தால், அவனுக்கு அதெல்லாம் ஏறுமா? ஏதோ வயிற்றைக் கழுவுவதற்கு என்னத்தையாவது பாடிவிட்டுப் போகிருன். நமக்கென்ன வந்தது?'' என்று பெண்களுக்கே உரிய தோரணையில் அவள் பதில் சொல்லி விட்டாள். சரி, எப்படியாவது தொலைகிருன். ஒரு வேளை உடம்பு கிடம்பு சரியில்லையோ என்னவோ என்று, நான் அந்தச் சம்பவத்தையே மறக்க முயன்றேன். சுமார் இரண்டு வாரங் கழித்து அந்த மொட்டையின் குரல் மீண்டும் கேட்டது. ஆனல், என் காதில் விழுந்துவிடக் கூடாதே யென்று பயப்படுவது போல் அது வெகு தூரத்திலேயே நின்று விட்டது. எப்படிப் பாடுகிருன் என்று நிதானிப்பதற்கு வார்த்தையே ஒன்றும் சரியாய்க் கேட்கவில்லை. ''தொலையட்டும், எப்படியாவது; நமக்கேன் இந்த விசாரம்?'' என்று மீண்டும் என் மனத்தை அந்தப் பல்லவியி லிருந்து பிரித்துப் பலவந்தப்படுத்தி இழுத்துக் கொண்டுவந்தேன். அதன் பிறகு மறுபடியும் பழைய நிலைக்கு வந்து விட்டன என் காதும் மனமும். ஏதோ மூடி போட்ட பதுமை போல், தூரத்திலே மொந்தாகாரமாய் ஒரு சப்தம் கேட்கும்—அவ்வளவுதான்.

ஒரு மாதத்துக்கு மேலாகி யிருக்கும். ஒருநாள் காலை எட்டு மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்க மனம் இல்லாமல் சாய்ந்து கொண்டிருந்தேன். முன்னுள் வியாபாரத்தில் 2,000 ரூபாய்க்கு மேல் நஷ்ட மேற்பட்டிருப்பதாக மதுரையி லிருந்து வந்த செய்தி, என் மனத்தைக் கலக்கி விட்டிருந்தது. இரவெல்லாம் என் மனைவி என்னென்னவோ தேறுதல் சொல்லியும் என் மனம் குழம்பிக்கொண்டேயிருந்தது. வழக்கம் போல் எழுந்து தன் வேலையில் இறங்கி விட்ட விசாலம், நான் திரும்பவும் நஷ்டத்தை யெண்ணியே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துத் திரும்பவும் தன் உபதேசத்தை ஆரம்பித்தாள். ''எழுந்திருங்கள், எழுந்துபோய்ப் பல்லைத் தேய்த்துக் கொண்டு வந்து எதையாவது சாப்பிடுங்கள். ராத்திரி கூடச் சரியாய்ச் சாப்பிடவில்லை. போன பணத்தை நினைத்து எண்ணமிட்டுக் கொண்டிருந்தால், திரும்பி வந்துவிடுமா? என்னமோ, வியாபார மென்ருல் இந்தக் கையில் நாலு காசு வரும், அந்தக் கையில் நாலு காசு போகும். இப்படித் தான்'' என்று சரமாரியாய்ப் பொழிந்து கொண்டே போனுள்.

''அதற்கில்லை............'' என்று நானும் கலந்து கொண்டேன்.

''பின்னே என்ன இப்போது முழுகிப் போய்விட்டது?''

''அடி அசடே, அதற்குச் சொல்லவில்லை நான். ஒரு மாசத்துக்கு முன்னேதான் 1,500 ரூபாய் எதிர்பாராத லாபமென்று எழுதியிருந்தான் உன் தம்பி. இப்போது 2,000 நஷ்டம். எவ்வளவு விசித்திரமா யிருக்கிறது வாழ்க்கை என்றுதான் யோசிக்கிறேன். விசாரமா படுகிறேன்? என்ன வியாபாரம், என்ன பணம் வேண்டி யிருக்கிறது? பணம் வந்தால் மட்டுந்தான் நிம்மதியா யிருக்கிறது என்கிருயா? அப்போதுந்தான் மனம் எப்படி எப்படியோ அலைகிறது? அதனல்தான் 'ஈட்டலுந் துன்பம், ஈட்டிய ஒண்பொருளைக் காத்தலுந் துன்பம்' என்ருர்கள். சீ! இது என்ன பணக்கார வாழ்க்கை! நம்மை விடப் பிச்

சைக்காரனே எத்தனையோ விதத்தில் தேவலே."

இதைக் கேட்ட வுடனே, "பின்னே அன்றைக்கென்னவோ அந்தக் குரங்காட்டி யோடே போய்த் தர்க்கம் பண்ணிக் கொண்டு நின்றீர்களே? அதோ பாடுகிறான், கேளுங்கள். அவன் சொல்வதிலே என்ன தப்பு?" என்று மடக்கினுள் விசாலம்.

தெருக் கோடியிலிருந்து காற்றில் வந்து கொண்டிருந்தது மொட்டையின் பாட்டு. வெறும் சப்தந்தான். என் காதுக்கு மட்டும் எப்படியோ வார்த்தைகள் புரிந்து விட்டன. பழைய பல்லவிதான். ஆனல், அவன் பாடுவது எனக்கே நேரிடையாய் உபதேசம் செய்வது போலிருந்தது. துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு சப்தத்தை நோக்கி விறு விறு என்று நடந்தேன். 'தீராயோ வாய் திறந்து' என்று சொன்னவன், என்னைப் பார்த்து, அப்படியே மௌனமாய்ப் போய்விட்டான்.

"அடே மொட்டை, ஏன் நிறுத்திட்டே பாட்டை? இங்கே வா" என்று கூப்பிட்டுக் கொண்டே, என் வீட்டை நோக்கித் திரும்பினேன். ஏதோ அபராதம் செய்தவன் போல் முழித்துக் கொண்டு, என் பின்னலேயே சற்றுத் தூரத்தில் வந்தான் மொட்டை. வழியில் "ஏன் இப்போதெல்லாம் நீ எங்கள் வீட்டுப் பக்கம் வருகிறதே யில்லே?" என்று கேட்ட கேள்விக்கு, "இல்லிங்க, சாமி. ஒன்னுமில்லே ......" என்று இழுத்தான்.

வீட்டுக்கு வந்ததும், "விசாலாம், இந்தா, இந்தக் குரங்காட்டிக்கு அரிசி கொண்டு வந்து போடு" என்று கூப்பிட்டேன். அவளும் தாராளமாய் ஆழாக்கு நிறையக் கோபுர அளவில் அளந்து கொண்டு வந்தாள்.

அரிசியை வாங்கி அவன் பையில் கவிழ்த்துவிட்டு, "உம், பாடு. நீ பழையபடியே பாடு, அதுதான் சரி. தெரிஞ்சுதா? பாடு" என்றேன். அவனுக்கு முகத்தில் ஒளி பிறந்தது. ஒரு மாதத்துக்கு மேலாகக் கவிந்து கொண்டிருந்த கவலே விலகியது. ஆனலும், வாயைத் திறக்க முடியவில்லே. சற்று நேரம் அந்த நிஷ்களங்கமான வதனத்தைப் பார்த்து அனுபவித்திருந்து விட்டு, "சரி, போ. இனிமேல், நாளே முதல் கொண்டு இங்கே வந்து வழக்கம் போல் அரிசி வாங்கிக் கொண்டு போ" என்று சொல்லி விட்டு உள்ளே வந்தேன். வந்து கால் அலம்பிக் கொண்டிருக்கையிலேயே, உலகத்தில் யார் யார் உள்ளத்திலே கவலே குடிகொண்டிருக்கிறதோ அவர்களுக்கெல்லாம் ஆண்டவனே வாய்திறந்து ஓர் அருமருந்தை உபதேசித் தருளியது போல் கணீரென்று ஒலித்த அந்த வாசகங்கள், அவற்றைத் தாங்கிக்கொண்டு வெள்ளம்போல் என் இதயத்தில் வந்து பாய்ந்தது அந்தக் குரங்காட்டியின் குரல்.

தெரு நெடுக அவன் பாடிக் கொண்டே போனன். திருப்பித் திருப்பி ஒரே பல்லவியை. என் வாயும் என்னை யறியாமல் கூடவே பாட ஆரம்பித்தது. அவன் குரல் காற்றில் கலந்து தணிந்துவிட்டது. அப்போதும் என் வாய் மட்டும் 'பாராயோ எந்தன் முகம்' என்று பாடிக் கொண்டேயிருந்தது.

✲

சீனாவில் அரச பதவி

வெ. சாமிநாத சர்மா

மேலை நாட்டைக் காட்டிலும் கீழை நாட்டில்தான் மன்னர்களுக்கு அதிகமான மதிப்பு இருந்து வந்திருக்கிறது. இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளின் பூர்விக சரித்திரத்தையும் நாம் சிறிது துருவிப் பார்த்தோமானால், இந்த உண்மை விளங்கும். அரசர்கள், தங்களைத் தெய்வாமிசம் நிறைந்தவர்க ளென்று கருதிக் கொண்டதோடல்லாமல் பிரஜைகளின் தந்தையாகவும் நடந்து வந்தார்கள்; பிரஜைகளும் மக்கள் போல் கவலையற்று நிம்மதியாக வாழ்ந்தார்கள். இது சம்பந்தமாகச் சீன சரித்திரத்திலிருந்து சில உதாரணங்களை இந்தக் கட்டுரையின் மூலம் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

சீன சரித்திரம் மிகவும் புராதனமானது. பதினாயிரம் வருஷங்களுக்கு முந்திக்கூட, இதன் சரித்திரம் செல்கிறது. வாழ்க்கையின் தத்துவங்களையும் ரகசியங்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டு அவைகளின்படி வாழ்க்கையை

> 'அரசன் மகன் அரசன்' என்ற பரம்பரைப் பாத்தியம், பூர்விக சீனாவில் இல்லை. ஜனங்களின் காவலனே அரசன் என்றால், பிறப்பா பெரிது? யோக்கியதை அல்லவா வேண்டும்? அதைத்தான் கவனித்தார்கள் பூர்விக சீனர். ஒரு சீன அரசன், தனக்குப் பின் பட்டங் கட்ட ஆள் பொறுக்கிய அரிய பழைய சம்பவம் ஒன்றை, கட்டுரையாளர் உதாரணங் கூறுகிறார். அது ஒரு பொருள் செறிந்த கதை.

நடத்தி வந்திருக்கிறார்கள் சீனர்கள்; வாழ்க்கை முறைகளை வகுத்துக் காட்டி யிருக்கிறார்கள் சீன அறிஞர்கள். இந்த முறைகள் அனைத்திற்கும் நடு நாயகமாய் இருந்தது எது? சீலம். இதற்குச் சீன பஷையில் லீ என்று பெயர். பிரதியொரு மனிதனும் தன்னைச் சுற்றியுள்ள சர்வ ஜீவராசிகளிடத்தும் நியாயமாக, அதாவது, தான் பிறரால் எப்படி நடத்தப்பட வேண்டுமென்று விரும்புகிறானோ அதே பிரகாரம், நடந்து கொள்வதற்கே சீலம் என்று பெயர் வைத்தார்கள் சீனர்கள். இங்ஙனம் சீலத்துடன் நடந்து கொள்கிறவர்களுக்குத்தான் வழி பிறக்கிற தென்பது அவர்களின் நம்பிக்கை. வழி பிறக்கிற தென்றால் என்ன? நித்தியமான இன்பத்திற்கு வழி என்றே இதனைச் சொல்லவேண்டும். இந்த வழியைச் சொன்ன ஞானிதான் லாவோத்ஸு. லாவோ என்றால் 'வயதான', த்ஸு என்றால், பெரிய மனிதர். அதாவது'—பெரியார் என்று அர்த்தம்; வேறொன்றுமில்லை. இவர் சன்மார்க்கத்தை உபதேசித்தார். இதற்கு டாவோ என்று பெயர். நன்னெறி என்று நாம் சொல்லவில்லையா, அதுதான் இது.

சீலம் என்றும் சன்மார்க்கம் என்றும் சொன்னோமல்லவா, இவற்றில் அரசனுக்கும் பிரஜைகளுக்கும் எந்த விதமான சம்பந்

தம் இருக்க வேண்டு மென்பது முக்கியமாக வலியுறுத்தப் படுகிறது. அரசனுடைய ஆட்சி எப்படி இருக்க வேண்டு மென்ருல், ஜனங்கள், தாங்கள் ஆளப் படுவதாகவே உணரக்கூடாது. அதாவது, தாங்கள் எந்த்விதமான நிர்ப்பந்தங்களுக்கும் உட்பட்டு வாழ்க்கையை நடத்துவதாக ஜனங்கள் கருதக்கூடாது. ஜனங்களுடைய சுதந்திரம் எவ்வளவு உயர்வாக மதிக்கப்பட் டிருக்கிறது? இந்த ஜன சுதந்திரத்தைப் பாராட்டுகிற மாதிரி, சீனப் பாட்டு ஒன்றுண்டு. இதை, ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முந்தி சீனுவில் குடியானவர்கள் சர்வ சாதாரணமாகப் பாடி வந்தார்களென்று அறிஞர்கள் கூறுகிருர்கள்.

"காலையில் எழுந்திருக்கிறேம்;
மாலையில் ஓய்வு கொள்கிறேம்;
கிணற்றைத் தோண்டி நீர்குடிக்
கிறேம்;
நிலத்தைச் சாகுபடி செய்து சாப்பிடு
கிறேம்;
அரசனுடைய அதிகாரத்தைப் பற்றி
எங்களுக்காவ தென்ன?"

இன்னெரு பாட்டு:

"அரசனே! நீ உனது
சீல சுபாவத்திஞல்
ஜனங்களை ஆள்கிருய்;

ஆனுல் ஜனங்கள் அதைத்
தெரியாமலே உன் வழியைப்
பின்பற்றுகிருர்கள்."

"ஜனங்கள் எந்த நிமிஷத்தில் தாங்கள் ஓர் அரசனுல் ஆளப்படுகிறேமென்று உணர்கிருர்களோ அந்த நிமிஷத்திலேயே, ஜனங்களுக்கும் அரசனுக்குமுள்ள தொடர்பில் ஏதோ கோளாறு இருக்கிற தென்று ஊகித்துக் கொண்டுவிடலாம்" என்று ஒரு சீன அறிஞன் கூறுகிருன். எப்படி நாம் செய்கிற நற்காரியங்கள், பிறருக்குத் தெரியாமலிருக்க வேண்டுமென்பது அடக்கத்தின் உயர்வோ அப்படியே ஆளப்படுவது தெரியாமலே ஆள்வதுதான் ஆட்சியின் உயர்வு. இந்த உயர்ந்த நிலையிலிருந்து கொண்டே, அரச தருமத்தை வரையறுத்து விட்டுப் போயிருக்கிருர்கள் சீன ஞானிகள்.

சீனர்கள் தங்கள் அரசனை, "தேவ ராஜ்யத்தின் மகன்" என்று அழைத்தார்கள். தெய்வமானது, அரசனைத் தனது பிரதிநிதியாக நியமித்து அவன் மூலமாக இந்தப் பூலோக ராஜ்யத்தை ஆண்டுவருவதாக ஐதிகம். அப்படியானுல் அந்த அரசனுடைய பொறுப்பு எவ்வளவு மகத்தானது! எவ்வளவு புனிதமுடையது! கடவுளின் திருவுளக் கருத்தைப் பூர்த்தி செய்விப்பதே அவன் கடமை. அவனுடைய ஸ்தானம் எங்கே? கடவுளுக்கும் குடிகளுக்கும் மத்தியில் அவன் கடவுளின் பிரதிநிதியாகவும் இருக்கிருன்; ஜனங்களைப் பரிபாலிக்கும் அரசனுகவும் இருக்கிருன். இதனுலேயே அவன் ஜனங்களுடைய இகலோக வாழ்க்கைக்கு மட்டுமல்ல, பரலோக வாழ்க்கைக்கும் பொறுப்பாளி. சுருக்கமாகச் சொல்லப் போனுல், அவன் மதத்திற்கும் அதிகாரி; ராஜ்யத்திற்கும் அதிகாரி.

சீனர்களுடைய நம்பிக்கையில், அரசன் ஒருவனே மனிதன்; மனிதன் என்று அழைக்கப் படுவதற் குரியவன். அவனுக்குச் சமதையானவர் யாரும் கிடையார். அவன், மற்றவர்கள் எப்படி வாழ்க்கையை நடத்தவேண்டும், எல்லோரிடத்திலும் எப்படி நடந்துகொள்ள வேண்டு மென்பதற்கு வழி காட்டியாயிருக்

கிருன். அவனை முன்மாதிரியாக வைத்துக்கொண்டுதான், ஜனங்கள் தங்கள் வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொள்கிருர்கள்.

ஒரு தகப்பன், தன் குழந்தைகளை எங்ஙனம் அன்புடன் காப்பாற்றுகிருனே, அங்ஙனமே அரசனும் தன் பிரஜைகளைக் காப்பாற்றவேண்டுமென்ற கருத்தை, பலபட வலியுறுத்திக் காட்டியிருக்கிருர்கள் சீன அறிஞர்கள். அரசன் நல்லவனுயிருந்தால், அவனுடைய பிரஜைகளும் நல்லவர்களா யிருப்பார்கள். அவனுடைய குடும்பத்தில் ஒற்றுமையும் இனிமையும் இருந்தால், ராஜ்யத்திலுள்ள எல்லாக் குடும்பங்களிலும் ஒற்றுமையும் இனிமையும் நிலவியிருக்கும். ஜனங்களுக்குத் தேவையான உணவு, உடை முதலியவைகளும், உழைத்துப் பிழைப்பதற்கான வசதிகளும் இருந்து விட்டால், ராஜ்யத்தில் கொலை, களவு முதலியவை ஒன்றுமே நிகழமாட்டா. சீனர்களுடைய நம்பிக்கை என்னவென்ருல் மனிதர்கள், சுபாவத்திலேயே நல்லவர்கள்; ஆனல் கஷ்டத்தினுலோ அல்லது வறுமையினுலோதான் ஏதேனும் கெட்ட காரியங்கள் செய்கிருர்கள். எனவே, அவர்கள் கஷ்டத்திற்கும் வறுமைக்கும் ஆளாகாமல் செய்துவிட்டால், அவர்கள் நல்ல பிரஜைகளாகவும் நல்ல மனிதர்களாகவும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் அல்லவா? இந்தத் திருஷ்டியில்தான் அரசனுக்கும் குடிகளுக்குமுள்ள தொடர்பைச் சீன அறிஞர்கள் பார்த்தார்கள்.

அரசனுக்கு, ராஜ்யம் ஒரு கண்ணாடி மாதிரி. கண்ணாடியில் எப்படி நம்முடைய குறைநிறைகளெல்லாம் பிரதிபலித்துக் காண்கின்றனவோ அப்படியே, அரசனுடைய குறைநிறைகளெல்லாம் ராஜ்யத்திலே பிரதிபலித்துக் காண்கின்றன. ராஜ்யத்தில் சாந்தியும் சந்தோஷமும் நிலவியிருக்குமேயானல், நன்ருக அதாவது நெறிபிசகாமல் தான் நடந்து கொள்வதாகவும், அப்படியே ராஜ்யத்தில் பிணியும் பஞ்சமும் குற்றங்களும் மலிந்திருக்குமேயானல், தன்னிடத்தில் ஏதோ குறைகள் இருப்பதாகவும் அரசன் உணரவேண்டும்.

ஆதிகாலத்தில் சீனுவில் பரம்பரைப் பாத்தியங் கொண்டாடிக்கொண்டு அரசர்கள் அரியணை ஏறவில்லை. ஆண்டு கொண்டிருக்கிற ஓர் அரசன், தனக்கு முடிவு காலம் சமீபித்திருக்கிறதென்று உணர்ந்து கொள்வானே யாகில், அவன், தகுதியுள்ள ஒருவனைத் தனக்குப் பின்னல் பட்டத்திற்குரிய வார்சாக நியமிப்பதுவே சீன சம்பிரதாயமாக இருந்தது. இந்தச் சம்பிரதாயமே, நாளாவட்டத்தில் பரம்பரைப் பாத்தியமாகி விட்டது. தகுதியுள்ள ஒருவனைப் பொறுக்கி யெடுப்பதென்பது லேசான காரியமா? இது விஷயத்தில் சீனர்கள் மிகவும் கண்டிப்பாகவும் ஜாக்கிரதையாகவும் இருந்தார்கள்.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னல் நடந்த விஷயம். யாவோ என்ற ஒரு மன்னன் ஆண்டு வந்தான். ஜனங்களுடைய க்ஷேமத்திலே மிகவும் அக்கரையுடையவன். இவனுக்கு வயதாகிவிட்டது. தனக்குப் பின்னல் தக்க ஒருவனை அரசனக நியமித்துப் போகவேண்டுமல்லவா? எனவே, தன் பிரதம மந்திரியைக் கூப்பிட்டுச் சொல்கிருன் :

"நான் பல வருஷங்களாக இந்தச் சிங்காதனத்தில் இருக்கிறேன். என் எண்ணங்கள், இச்சைகள் எல்லாம் உனக்குத் தெரியும். ஆகையால், என்னுடைய ஸ்தானத்தில் உன்னை நியமிக்க விரும்புகிறேன்.

பிரதம மந்திரி: நான் அதற்குத் தகுதியுடையவனல்ல; நான், சிங்காதனத்தைக் களங்கப்படுத்தி விடுவேன்.

அரசன்: அப்படியானால் தக்க ஒருவனை எனக்குக் காட்டு. அவன், ஒன்று பணக்காரனாகவும் அதே சமயத்தில் பெருந்தன்மையுள்ளவனாகவும் இருக்க வேண்டும்; அல்லது ஏழையாகவும் அதே சமயத்தில் அடக்கமுள்ளவனாகவும் இருக்கவேண்டும். மந்திரிகளே! உங்களுக்குத் தெரிந்தவன் யாராவது இருந்தாலும் சொல்லுங்கள்.

மந்திரிகள்: ஷுன் என்ற ஒருவன் இருக்கிறான். அவன் ஒரு சாதாரணப் பிரஜை; விவாகமாகாதவன். அவனைப் பெற்ற தாயார் இல்லை. அவனுடைய தகப்பனார் இரண்டாவது விவாகம் செய்துகொண்டிருக்கிறார். அவரோ கண்தெரியாத குருடர். அந்த இரண்டாந் தாரமோ மகா பிடிவாதக்காரி. ஷுன்னைக் கண்டால் கொஞ்சம்கூடப் பிடிக்காது. சதா இவனோடு சண்டை போடுவதுதான் அவளுடைய வேலை. அவளுக்கு ஒரு பிள்ளை உண்டு. அவனும் இவனோடு எப்போதும் சண்டை போடுவான். ஷுன்னோ இவர்கள் அனைவருடனும் சமாதானமாக வாழ்ந்து வருகிறான். மிகவும் பொறுமையாக இருந்து, குடும்ப விவகாரங்களைக் கவனித்து வருகிறான். அன்பு செலுத்தி அனைவரையும் நல்வழிப் படுத்துகிறான்.

அரசன்: நிரம்ப சரி. அப்படிப் பட்டவன்தான் ராஜ்யத்தை ஆள்வதற்குத் தகுதியுடையவன். எவனொருவன் குடும்பத்தை அமைதியாக நடத்திக்கொண்டு போகிறானோ, அவன் ராஜ்யத்தையும் அமைதியாக, நடத்திக்கொண்டு போவான். அவனை நான் மேலும் பரிசோதித்துப் பார்க்கிறேன்.

யாவோ: அரசன் இப்படிச் சொல்லிவிட்டு, தன்னுடைய இரண்டு பெண்களையும் ஷுன்னுக்கு விவாகம் செய்து கொடுத்து, குடும்பத்தை நடத்துவதற்கு வேண்டிய சாமக்கிரியைகளையும் கூடவே அனுப்பினான். தங்கள் குமாரன், இரண்டு ராஜ குமாரத்திகளை விவாகம் செய்துகொண்டு வந்துவிட்டதை யறிந்து, ஷுன்னின் பெற்றோர்களுக்கு அவன் மேல் இன்னும் ஆத்திரம் அதிகரித்தது. அவனை எப்படியாவது கொன்று விட்டு மறுவேலை பார்ப்பதென்று தீர்மானித்தார்கள்.

ஒரு நாள் ஷுன், நெல் கொட்டிவைத்திருந்த இடத்தின் மேல் கூரையைப் பழுதுபார்க்க வேண்டி, ஏணியைப் போட்டுக் கொண்டு மேலேறி வேலைசெய்து கொண்டிருந்தான். அப்பொழுது, அவன் குடும்பத்தினர், ஏணியை அப்புறப் படுத்திவிட்டு மேற்படி இடத்திற்கு நெருப்பு வைத்து விட்டனர். ஆனால், ஷுன் எப்படியோ தப்பிக்கொண்டு வெளியே வந்துவிட்டான்.

இன்னொரு சமயம் ஷுன், வீட்டுக் கிணற்றில் இறங்கித் தூர்வாரிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனுடைய குடும்பத்தினர் கல்லையும் மண்ணையும் வாரிப் போட்டு அவனைக் கிணற்றுக்

குள்ளேயே மூழ்கடித்து விடப் பார்த்தனர். ஆனால் ஷுன் எப்படியோ சாகாமல் தப்பிக் கொண்டு வெளியேறி விட்டான்.

இவ்வளவு தூரம் தன் குடும்பத்தினர் தனக்குக் கெடுதல் செய்தபோதிலும், ஷுன் அவர்களிடம் முன்னைவிட அதிகமான அன்போடு நடந்து வந்தான். இவனைக் கணவனாகக் கொண்ட அரசகுமாரிகளும், இவனுடைய பெருந்தன்மையையும் நல்ல சுபாவத்தையும் அறிந்து, இவனிடம் பக்தி விசுவாசத்துடன் நடந்து வந்தார்கள். இவனுடைய பெற்றோர்களும், இவனுடைய அன்பிலே ஈடுபட்டவர்களாய், இவனிடம் ஆதியில் கொண்டிருந்த துவேஷத்தையெல்லாம் கைவிட்டு விட்டு, இவனிடம் மரியாதை செலுத்தத் தொடங்கினார்கள்.

இங்ஙனம் எதிரிகளை அன்பினால் வெற்றி கொண்ட ஷுனை, யாவோ அரசன், தனது ஆஸ்தானத்திற்கு வரவழைத்து அவனை முதலில் பிரதம மந்திரியாக்கினான். அவனே பின்னர் ராஜ்ய விவகாரங்களை யெல்லாம் நடத்தி வந்தான்.

இப்படிச் சீன சரித்திரம் கூறுகிறது. இது எதைக் காட்டுகிறதென்றால், சீனர்கள், அரச பதவியைத் தொண்டு செய்வதற்கேற்ற ஒரு பீடமாகவே கருதி வந்தார்களென்பதையும், அந்தப் பீடத்தில் அமருவதற்கு முன்னர் பிரதியொருவனும் பலவிதப் பரிசோதனைகளுக் குட்பட வேண்டுமென்ற கொள்கை யுடையவர்களா யிருந்தார்க ளென்பதையுமே காட்டுகிறது. பிளேட்டோ என்ற கிரேக்க அரசியல் ஞானி கூட, காவலர்களுக்கு (பிளேட்டோ, அரசர்களைக் காவலர்களென்றே அழைக்கிறான் என்பது இங்கே கவனிக்கத் தக்கது) இத்தகைய கடுமையான பரிசோதனைகள் பல வைக்க வேண்டுமென்று கூறுகிறான். இன்ப துன்பங்களைச் சுயமாக அனுபவிக்கிறவன்தான் ஜனங்களுடைய இன்ப துன்பங்களை எளிதிலே உணரமுடியும்: குறைகளுள்ள இடத்திலே நிறைகளைச் செய்யமுடியும்.

பரம்பரைப் பாத்தியங் கொண்டாடிக் கொண்டு அரியணை ஏறுகிற அரசனைக் காட்டிலும், மன்பதையிலே ஒருவனாக இருந்து, பின்னர் கோல்பிடிக்கிற காவலனையே முற்காலத்தவர் விரும்பினர். இன்று அழிந்து போயிருக்கிற அல்லது அடிமைப்பட்டுக் கிடக்கிற நாடுகளின் பூர்விக வரலாறுகள், இந்த உண்மையையே நமக்கு வலியுறுத்திக் கூறுகின்றன.

நல்ல போதனை!

அமெரிக்க சேனையில் சேர வரும் அநேக சோல்ஜர்களுக்குச் சரியாய் எழுதப் படிக்கத் தெரியவில்லை. அவர்களுக்குக் கல்வி போதிக்க, பல பாடப் புத்தகங்கள் தயாராகி யிருக்கின்றனவாம். இவைகளிலிருந்து, இரண்டு பாடங்களை, 'லிபர்ட்டி' என்ற பத்திரிகை உதாரணமாய்த் தருகிறது:

1. "முகாமிலே வேலை இருக்கிறது. வேலை கடுமையா யிருக்கிறது. கடுமையாய் வேலை செய்பவன், அருமையான ஸோல்ஜர் ஆகிறான்."

2. "புத்திசாலியை யார் விரும்புவான்? அவன் நல்ல சிநேகிதனாய் இருக்கமாட்டான். வேலையைக் கண்டால், புத்திசாலி எப்போதும் புகார் செய்வான். நீ புத்திசாலியா யிராதே."



மின்மினி

ஹமீது

இருளில் பதித்த முத்தெனவே
இரவில் மின்னும் மின்மினிகள்,
உருவிப் புரளும் கடலடியில்
உறங்கு சிப்பியின் வயிற்றினிலே,
உருளும் வடிவம் பெற்றிலகும்
உயர்ந்த முத்தின் உடன்பிறப்போ ?
இருண்ட இரவுக் கெழில்தரவே
ஈசன் அனுப்பும் உயிரொளியோ ?

பரந்த வானப் பெருங்கடலில்
பளிச்சிடும் தாரகை முத்தினங்கள்
சிரிக்கும் சிரிப்பைப் பழித்திடவே
சகத்தினில் திரியும் வயிரங்களோ ?
இரவின் இருளைத் துரத்திடவே
இச்சை கொண்ட கதிரவன்தான்,
விரவிச் சொலிக்க இவ்வுலகில்
வீசி எறிந்த வெண்மணியோ ?

கன்னிப் பெண்டிர் கடைக்கண்கள்
கக்கும் காதல் நெருப்பினிலே,
மின்னொளி சிந்த மேதினியில்
விந்தை சொரியும் தண்ணொளியோ ?
பின்னி முடித்த சடைக்கொண்டை
பிடித்து முத்தும் பிச்சியைப்போல்,
தன்னிக ரில்லாக் காரிருளைத்
தடவி முத்தும் வெண்மதியோ ?

நாகப் பாம்பின் தலையினிலே
நல்ல முத்தொன் றிருப்பதுபோல்,
சோக வாழ்வில் ஒளிந்திருக்கும்
சுகத்தைக் காட்டும் மின்மினிகாள் !
மேகக் கூட்டம் மோதுகையில்,
மிடுக்குற்றெழுந்து வெடி மின்னல்,
சாகும் பொழுதில் வந்துங்கள்
சிறிய உடம்பில் புகுந்ததுவோ ?

*

குன்னரங்கன்

மு. அருணசலம்

["போற்றினும் போற்றுவர், பொருள் கொடாவிடில் தூற்றினும் தூற்றுவர்" புலவர்கள் என்பது பழமொழி. போற்றத்தக்க இயல்புகளான கொடை, வீரம், பணிவு, அன்பு முதலியவற்றைக் கண்டவிடத்துப் புலவர்கள் போற்றத்தான்போற்றுகிறார்கள். அவ்வியல்புகளைக்காணுதவிடத்து அவர்கள் போற்றுவதில்லை என்பதும் உண்மைதான். இகழ வேண்டிய சந்தர்ப்பம் வந்த போது, அவர்கள் இகழ்வதிலும் தவறுவதில்லை: மிக்க கொடுமையாகவே தங்கள் இகழ்ச்சியைப் புலப்படுத்துவார்கள். இதை யுணர்ந்தே, மேற்சொன்ன "போற்றினும் போற்றுவர்" என்ற பாடலைப் பாடியவர், "கூற்றினும் பாவலர் கொடியர் ஆவரே" என்று மிக்க அச்சத்தோடு சொன்னார். அவர் சொன்ன சொற்கள் எவ்வளவு தூரம் பொருத்தமானவை என்பதைப் பின்வரும் நிகழ்ச்சிகளிலிருந்து தெளிவாக உணரலாம்.]

காட்சி 1.

[பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி, உத்தேசம் கி. பி. 1735-ம் ஆண்டு. இடம்: அரியலூர். மழவர் தலைவனும் சமீன்தாரனுமான குன்னரங்கன் என்பவனுடைய அரண்மனை வாயில்.

ஒருநாள் காலை நேரம்; மணி ஒன்பதிருக்கலாம். அரண்மனைக்குள் செல்ல வந்த சுப்பிரதீபக் கவிராயர், வாயிலருகே வெளிப்புறத்தில் சற்று நிற்கிறார். பாகவதரொருவர், துவாதச நாமங்களும் அணிந்து, வைதிகக் கோலத்துடன் அங்கே வந்து சேருகிறார்.]

கவிராயர்: வரவேணும், வரவேணும், பாகவதர்வாள்! அடியேன் சுப்பிரதீபன் நமஸ்கரிக்கிறேன்.

பாகவதர்: தீர்க்காயுஷ்மான் பவ! சர்வாபீஷ்ட சித்திரஸ்து!

க: எங்கே தங்களை இந்தப் பக்கமே வெகு நாளாய்க் காணவில்லை?

பா: நான் ஊரை விட்டுப் போய்ச் சில மாதங்களாகி விட்டன. நேற்றுத்தான் திரும்பி வந்தேன்.

க: அப்படியா சமாசாரம்! எனக்குத் தெரியாதே! எங்கே போயிருந்தீர்கள்?

பா: குடும்ப வாழ்க்கை என்றால் விடுகிறதா? எங்கெங்கேயோ, ஸ்ரீரங்கம் முதலான பல இடங்களுக்குப் போயிருந்தேன்.

க: போக வேண்டியதுதான். பெருமாள் தரிசனமெல்லாம் சௌகரியமாய்க் கிடைத்ததல்லவா?

பா: தரிசனம் கிடைத்தது, கிடைக்காமலென்ன?

ஒரே அரசரை ஒரு நாள் அருமையாய்ப் புகழ்கிறார் கவிஞர்; இன்னொரு நாள் அவரையே இகழ்கிறார். ஏன்? அன்று கண்டது வள்ளன்மை; இன்று காண்பது புன்மை. அதற்குப் புகழ்ச்சி; இதற்கு இகழ்ச்சி. இரண்டு பாட்டல்களும்தான் என்ன அருமையாய் அமைகின்றன! இரண்டினுலும் நமக்கு எவ்வளவு வியப்புச் சுவை உண்டாகிறது!

க: போனது என்ன காரியமோ?

பா: காரியமா?.........முக்கியமான காரியமொன்று இருந்தது வாஸ்தவந்தான். அது......

க: அது என்னவோ?

பா: இனிமேல் சொல்லி என்ன பயன்?......நான் புண்ணியம் பண்ணவில்லை, அவ்வளவுதான்...

க: என்ன, தாங்கள் ஏதோ வருத்தப்படுவதாகத் தெரிகிறதே! முடியுமானால், தங்கள் வருத்தத்தை நான் போக்கிவிடுகிறேன். சொல்லுங்கள்.

பா: சொல்லாமலென்ன? உங்களை அரண்மனை வாயிலில் கண்டவுடனே என் கலியெல்லாம் பறந்தோடி விட்டதென்றே துணிந்துவிட்டேன். தாங்கள் சுப்பிரதீப மல்லவா? கூர்மையான அறிவு படைத்தவராயிற்றே! எனக்கு ஏதாவது வழிகாட்டுவீர்கள்.

க: எதற்கு வழிகாட்ட வேண்டும்? உங்களுடைய கலி என்ன வென்பதைச் சொல்லவில்லையே!

பா: கலியெல்லாம் என்ன? வேறொன்று மில்லை. பொருளில்லாத கலிதான். வருகிற தை மாதம் என் மகளுக்குக் கலியாணம் நிச்சயமாகி யிருக்கிறது. அதை நடத்திவைப்பதற்குச் சிறிதும் என்னிடம் பொருளில்லை,

க: அப்படியானால் என்ன செய்தீர்கள்?

பா: செய்வதென்ன இருக்கிறது! இந்தக் கலிகாலத்திலே திருவரங்கப் பெருமான் தான் கண்கண்ட தெய்வமாயிற்றே! லக்ஷ்மியையே எந்நேரமும் மார்பில் வைத்திருப்பவனல்லவா? அவனிடம் போய் முறையிடுவோம் என்று போனேன்.

க: பேஷ், அப்படியா சமாசாரம்? என்னவோ பெருமானை வழிபடத்தான் போனீர்களாக்கும் என்றெண்ணினேன்.

பா: ஆம், வழிபடத்தான். வழிபட்டு நம் குறையைச் சொல்லிக் கொள்ள.

க: வழிபடலாமே யொழிய, குறையைச் சொல்லிக்கொள்ள என்ன இருக்கிறது? அரங்கா, திருவரங்கா, தென்னரங்கா என்றெல்லாம் கூவி அரற்றினீர்களே? அத்தனைக்கும் அந்தத் திருவரங்கன் ஏதாவது வாய் திறந்து ஒரு வார்த்தை சொன்னானா?

பா: இல்லை.

க: சுகமாக ஆதிசேஷன்மீது தூங்கிக் கொண்டிருக்கிறானே அந்த அரங்கன், உங்கள் குறையைக் கேட்டானா? உங்களைத் திரும்பியாவது பார்த்தானா, கண்ணையாவது திறந்தானா?

பா: திறக்கவில்லை என்பது உண்மைதான். ஆனாலும்......

பாலும் வெண்ணெயும்

பாலையும் நீரையும் சேர்த்தால், அவை சீக்கிரம் ஒன்றாய்க் கலந்து விடுகின்றன. ஆனால், பாலின் சத்தை வெண்ணெயாக்கி, அந்த வெண்ணெயை நீரிலே சேர்த்தால், அது நீரில் கலவாமல் அதன் மேலே மிதக்கிறது. இம்மாதிரியே, ஒரு ஜீவன் ஒரு தரம் தெய்விக நிலையை அடைந்து விட்டால், பின் பக்குவமடையாத கணக்கற்ற ஜீவர்களுடன் அது பழகினாலும், அவைகளின் கெட்ட சகவாசத்துக்கு ஒரு போதும் உட்படாது.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

க: அப்புறம் என்ன ஐயா, 'ஆனாலும்?' கடவுளைப் போய்க் கும்பிடலாம். வேறு நமக்குக் கடவுள் ஏதாவது உதவி செய்வார் உன்று எதிர்பார்க்க என்ன இருக்கிறது?

பா: அப்படிச் சொல்லக் கூடாது கவிராயர்வாள். அரங்கன் சித்தம் எப்படியோ, நாம் எப்படி அறிவோம்?

க: அறிய என்ன ஐயா இருக்கிறது? அவன் இரங்கினால்தான் உமக்குப் பொருள் கிடைத்திருக்குமே! ஏழைகளுக்கு அவன் இரங்கமாட்டான். உம் பக்கத்திலேயே உம்மைப்போல எத்தனை பேர் அரங்கா அரங்கா என்று கதறினர்கள்? யாருக்காவது வாய் திறந்து ஒரு வார்த்தை பேசினானா? அவனிடத்தில் கருணையாவது, இரக்கமாவது, ஒன்றையும் எதிர்பார்க்கக் கூடாது. லக்ஷ்மியோடு கூடி வாழ்பவனுக்கு ஏழையின் வருத்தம் தெரியுமா?

பா: ஐயோ! அப்படியானால் நான் என்ன செய்வேன்? இந்த உலகத்திலே எனக்கு வேறு புகல் ஏது!

க: புகல் இல்லாமலா போய் விட்டது? தெய்வம் உதவி செய்யவில்லை என்று கவலைப்படாதீர்கள். மனிதர்களிலே தெய்வம் உண்டு, மனிதன் உங்கள் கவலையைப் போக்குவான்.

பா: மனிதரில் தெய்வமா? அப்படியும் உண்டா? மனிதன் என் கவலையைப் போக்குவானா? அப்படி யார் இருக்கிறார்கள்? யாரிடத்தில் நான் போவேன்?

க: அந்தத் தெய்வ ரங்கனை விட்டீர்களானால், இங்கே உங்களுக்கு உதவிசெய்ய மனிதரங்கன் இருக்கிறான். நமது மழவர் குலத் தோன்றலான மழவரங்கனுடைய புதல்வன், தமிழிலே உயிராயுள்ளவனான குன்னரங்கன் இருக்கிறான். இவன் ரங்கனுக்கெல்லாம் மன்னனான மன்னரங்கன். இவன் உங்களுக்கு வேண்டிய உதவி செய்வான்.

பா: செய்வானா? குன்னரங்க மன்னன் அருள் செய்வானா? அவனிடம் போய் நான் எப்படிக் கேட்பேன்! தெய்வமே ஏழைக்குக் கருணை செய்யாதபோது, மனிதனைப் போய் நான் என்ன சொல்லிக் கேட்பேன்?

க: ஒன்றும் சொல்ல வேண்டாம். குன்னரங்கா, எனக்கு அருள்செய், என் தமிழுக்கு இரங்கிக் கருணைபுரிய வேண்டும் என்று கேட்டு ஒரு பாட்டுப் பாடுங்கள், தமிழிலே பாடுங்கள், அதுவே போதும்:

தென்னரங்கன் அரங்கனென்பார்
வாய்திறவான் கண்விழியான்
திரும்பிப் பாரான்,

என்னரங்கன் தூங்கிரங்கன்
ஏழையர்பாற் கருணையுடன்
இரங்கா ரங்கன்,

அந்த அரங்க நாதனைப்போல் பவனல்ல இவன். இவனைக் கண்டு,

மன்னரங்கன், தமிழ்ப்பெருமான்,
மழவரங்கன் அளித்தருளும்
மைந்தனை

குன்னரங்கா! எனக்கிரங்காய்
குழைந்தெழுந்த தமிழ்க்கிரங்கிக்
குழைந்தெழாயே!

என்று பாடுங்கள். உங்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கும்.

பா: என் நன்றியை உங்களுக்கு எப்படித் தெரிவிப்பேன்!......சரி, நீங்கள் சொன்ன படியே போய்க் குன்னரங்கனைப் பிரார்த்திக்கிறேன்.

காட்சி 2.

[முந்திய காட்சிக்கும் இதற்கும் இடையிலே இருபது ஆண்டுகள் கழிந்துவிட்டன. குன்னரங்கனுடைய மகன் ஒப்பிலா மழவராயன் இப்போது மழவர் தலைவனுயிருக்கிருன். யாது காரணம் பற்றியோ இவனுக்கும் இவன் தந்தை குன்னரங்கனுக்கும் கொடிய பகைமை ஏற்பட்டிருக்கிறது. குன்னரங்கன், அயலூரிலுள்ள சிறு கோட்டையொன்றில் தன் படைகளோடு தங்கியிருக்கிருன். ஒப்பிலா மழவராயன் அரியலூர்க் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டான். மகனுக்கும் தந்தைக்குமிடையில் பல போர்கள் நிகழ்ந்தன. வெற்றி பெரும்பாலும் மகன் பக்கந்தான். குன்னரங்கன் மனம் நொந்து சமாதானத்துக்கு வழிதேடுகிருன்.

இக்காட்சி நிகழும் இடமும், பழைய இடந்தான்: அரியலூர் அரண்மனைவாயில் வெளிப்புறம். நேரமும் காலை நேரம், மணி ஒன்பதிருக்கும். சுப்பிரதீபக் கவிராயர் வருகிருர். நரைத்த தலை. முன்னிலும் முதியகோலம். கண் பார்வையும் சிறிது மங்கல். அரண்மனைக்குள் நுழையப் போகிருர். அந்தத் தருணத்திலே, முன்னமே நாம் பார்த்த அதே பாகவதர், தளர்ந்த நடையோடு, ஓடோடியும் வருகிருர்.]

பாகவதர்: என்ன கவிராயர்வாள், சௌக்கியந்தானே? தங்களைக் காணத்தான் இவ்வளவு வேகமாய் ஓடிவருகிறேன்! எங்கும் போய்த் தேடாமல் அரண்மனை வாயிலிலேயே பார்க்கக் கிடைத்தது எவ்வளவோ நல்லதாய்ப் போயிற்று.

கவிராயர்: யாரது?......தெரியவில்லையே!.........எனக்கு இப்போது கண்பார்வை கொஞ்சம் மங்கல். சற்று அருகில் வாருங்கள்.

பா: நான்தான், தங்கள் நண்பன், விருத்தகிரீசுவர பாகவதன். மறந்து போயிருக்க மாட்டீர்கள்.

க: பாகவதர்வாளா? நமஸ்காரம், நமஸ்காரம்: மறக்கவாவது? நன்ருய்ச்சொன்னீர்கள். தங்கள் பெண்ணும் மாப்பிள்ளையும் நலந்தானு? குழந்தை குட்டிகள் எல்லாம்......குடும்பம் பெருகியிருக்குமே!

பா: ஆமாம். வெகு காலமாயிற்று......தாங்கள் எனக்குச் செய்த பேருதவியை நான் மறக்க முடியுமா? நம்முடைய ராஜாவிடம் சொல்லி எனக்கு அளவற்ற பொருளுதவி செய்து என் புதல்வி கலியாணத்தையெல்லாம் சிறப்பாய் நடத்திவைத்த தங்கள் கருணைக்கு நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்!

க: நான் என்ன செய்துவிட்டேன்? என்னமோ அந்தக் காலம் அப்படி நடந்தது......அது ஒருகாலம், இது ஒருகாலம்.

பா: தாங்கள் அப்படிச் சொல்லலாமா? தங்களைப் போன்ற கல்வியும் அறிவும் கவித் திறமையும் பெற்ற வித்துவான்களால்தானே சமஸ்தானங்கள் நடைபெறுகின்றன. தாங்கள் மனம் வைத்தால் ஆகாததும் உண்டா? தாங்கள் அறியாத விஷயமா, நான் சொல்லவா வேண்டும்?

க: தாங்கள் சொல்வது என்னவென்று எனக்கு விளங்கவில்லையே! விவரமாகச் சொல்லுங்கள்.

நம்முடைய மகாராஜா இருக்கிரு ரல்லவா?

க: ஆம், இருக்கிறார். அவரைப் பார்க்கத்தான் நான் போகிறேன். வாருங்கள், போவோம்.

பா: இல்லை, இல்லை, இவரைச் சொல்லவில்லை. பெரிய மகாராஜா இருக்கிறாரல்லவா, குன்னரங்கர்......?

க: ஓ, அப்படியா சமாசாரம்? அதையெல்லாம் விட்டுத் தொலையுங்கள், ஐயா! மகாராஜாவிலே பெரியவரென்றும் சின்னவரென்றும் கிடையாது. இப்போது ஒரே மகாராஜாதான் உண்டு. அவர் ஒப்பிலா மழவராயர்.

பா: சரி, அப்படியே......... குன்னரங்க மகாராஜா தங்களைப் பார்க்க வேண்டுமென்று மிகவும் ஆசைப்படுகிறார்கள்......

க: என்ன காரியமாம்?

பா: எல்லாம் தங்களுக்குத் தெரிந்ததுதான்: இளைய மகாராஜாவிடம் சொல்லி எப்படியாவது சமாதானம் பண்ணி வைத்து, நாட்டில் ஒருபகுதியைக் கொடுத்தால் போதும் என்று எண்ணுகிறார்கள்.

க: நாடாவது, பகுதியாவது! அதெல்லாம் சிறிதும் நடவாத காரியம். மழவராயரா கொடுப்பார்?

பா: தாங்கள்தான் கருணை புரியவேண்டும். பெரிய மகாராஜாவிடம் தாங்கள் ஆஸ்தான வித்துவானயிருந்தவர்களாயிற்றே! தங்களுக்குத் தெரியாததை நான் என்ன சொல்லக் கூடும்? குன்னரங்கரும் தங்களுக்கு எவ்வளவோ வேண்டியவரல்லவா?

க: ஆமாமையா, எல்லாம் உண்மைதான். நான்தான் முன்னமே சொன்னேனே, அது ஒரு காலம், இது ஒரு காலம். மகாராஜா இரண்டு பேருக்கு இங்கே இடமில்லை. இளையவர் இப்படிப் பிடிவாதம் பிடிக்கும்போது, தகப்பனர் விட்டுக் கொடுக்க வேண்டியதுதான்.

பா: தாங்கள் பார்த்து எப்படிச் சொன்னாலும் சரிதான். சொல்லுங்கள். ஏதோ சில ஊர்களும் ஒரு கோட்டையும் கொடுத்தாலே போதுமென்று குன்னரங்கர் கேட்கச் சொன்னார்.

க: ஊரா? கோட்டையா? பேஷ்......சரி, நான் ஒரு நாட்டைக் காட்டுகிறேன். அங்கே போய் அரசாளச் சொல்லுங்கள். வயதான காலத்தில் இங்கே என் தொந்தரவு, பாவம்! என்ன? சம்மதந்தானே?

பா: தங்கள் அபிப்பிராயம். சம்மதம் இல்லாமலென்ன? நாடு எது சொல்லுங்கள், இப்படியே திரும்பிப் போய்ச் சொல்லுகிறேன்.

க: சொல்லுகிறேன், அமைதியாகக் கேளுங்கள்: (பாடுகிறார்)

எண்திசையும் புகழ்படைத்த
குன்னரங்க மகிபாலா!

பா: அடாடா! என்ன வாக்கு, என்ன வாக்கு! தெரியாமலா தங்களைக் குன்னரங்க மகாராஜா ஆஸ்தான வித்துவானுக்கினர்! பெரிய மகாராஜா மீது தங்களுக்கு உண்மையிலே எவ்வளவு விசுவாசம்!

க: கேளுமையா முழுவதையும்! (பாடுகிறார்)

எண்திசையும் புகழ்படைத்த
குன்னரங்க மகிபாலா!
இனிமேல் இந்த

மண்தலத்தை அரசாள
ஒப்பிலா நின்புதல்வன்
மழவன் போதும்!

பா: (இடைமறித்து) ஓகோ! இந்த அரியலூர் ராஜ்யம் வேண்டாமென்று சொல்கிறீர்களோ? அப்படியானால் வேறெதைக் கொடுப்பதாக இளைய மகாராஜாவுக்கு உத்தேசமோ? அதையும் விவரமாய்த் தெரிவியுங்கள்.

க: அதைத்தான் சொல்ல வருகிறேன். இன்னொரு நாடு இருக்கிறது. அங்கே அரசனில்லாமல் எல்லாம் அல்லோல கல்லோலமாகி, நண்டளந்த நாழியாகக் கிடக்கிறதாம். அங்கே போகச் சொல்லுமையா, உங்கள் குன்னரங்கரை.

பா: ஆ, அப்படியா! எங்கள் குன்னரங்கருக்கு ஒரு ராஜ்யமே கொடுக்கிறாரா இளைய மகாராஜா! அடடா, இவருடைய கருணையை என்னவென்று புகழ்வேன்!...... அந்த நாடு எது என்பதையும் தாங்களே தயைகூர்ந்து சொல்ல வேண்டும்.

க: மறுபடியும், சொல்லுகிறேன். கேட்டுவாரும். (பாடுகிறார்)

எண்திசையும் புகழ்படைத்த
குன்னரங்க மகிபாலா!
இனிமேல் இந்த
மண்தலத்தில் அரசாள
ஒப்பிலா நின்புதல்வன்
மழவன் போதும்!

தேவலோகத்தில் இந்திரன் இல்லையாம் கொஞ்ச நாளாக. குன்னரங்க மகாராஜா இந்தப் பூலோகத்தில் ஆண்டது போதும். இனிமேல் இங்கே ஒப்பிலா மழவராயர் ஆளட்டும். தேவலோகத்தில் கொஞ்சநாளாக இந்திரன் இல்லாமல் சொர்க்க லோகமே தலைகீழாக மாறி, எல்லாம் நண்டளந்த நாழியாய்ப் போய்விட்டது. ஆகவே, குன்னரங்கரை...

பா: என்ன சொர்க்க லோகமா?.........அப்படியானால், இறந்து போகும்படியா சொல்லுகிறீர்கள்? தேவலோகமென்றால் அப்படித்தானே ......?

க: ஆமாமையா, ஆமாம்: (பாடுகிறார்)

விண்தலத்தில் இந்திரனுக்கு
அரசுநிலை யில்லாமல்
வெகு நாளாக

நண்டளந்த நாழியாய்க்
கிடப்பதால் விண்ணாள
நடந்திடாயே!

என்று போய்ச் சொல்லுங்கள், ஐயா!

பா: விண்ணாளவா போகச் சொல்லுகிறீர்கள்! குன்னரங்க மகாராஜாவையா இப்படிச் சொல்லுகிறீர்கள்! அதுவும், அவருடைய ஆஸ்தான வித்துவானாயிருந்த கவிராயரா இப்படிச் சொல்கிறவர்? அடடா! (பாகவதர் அப்படியே மூர்ச்சையுற்றுக் கீழே விழுகிறார்.)

எதிலே அமைதி குலையும்?

தங்கள் நாட்டு ஜனங்களின் குணாதிசயங்களை, ஓர் ஆப்கன் சிற்றரசர், மிகச் சுருக்கமாக, மௌண்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் என்பவரிடம் தெரிவித்தார். சிற்றரசர் சொன்னது இதுதான்: "வேற்றுமைப் பிணக்குகள் எங்களுக்குள் உண்டு; அதற்கிடையே நாங்கள் அமைதியா யிருப்போம். எங்களிடம் பீதிகளைக் கிளப்புவார்கள்; அதற்கும் அமைதியாகவே இருப்போம். எங்கள் நடுவே ரத்தம் சிந்தும்; அதைக் கண்டும் அமைதியாகவே யிருப்போம். ஆனால், ஓர் எஜமானுக்குக் கீழே மட்டில் நாங்கள் ஒரு நாளும் அமைதியா யிருக்கமாட்டோம்."

—ஜே. எஸ். காட்டன்

பொம்மை மரணம்

மஞ்சேரி எஸ். ஈசுவரன்.

ஆஸ்பத்திரியிலுள்ள குழந்தைகள் வார்டில், இருபது படுக்கைகள் இருந்தன. இருபது சின்னஞ் சிறு இரும்புக் கட்டில்கள். குழந்தைகள் விழாதபடி இரு புறமும் கம்பியணைப்புகள், தலைமாட்டிலிருந்து பாதி தூரம் வரையில் அந்தக் கட்டில்களில் அமைந்திருந்தன. பத்து வயதுக்குக் குறைந்த ஆண் குழந்தைகளும் சரி, பெண் குழந்தைகளும் சரி, இந்த வார்டில் வைக்கப் படுவார்கள்.

என் பையனுக்கு வயது, கணக்காய் ஆறு வருஷம் ஏழு மாதம். அவனுடைய ஜாதகத்தில் கிரகங்கள் என்னவோ விபரீதமாய் வக்கரித்துக் கொண்டன. (அற்ப மானிடனான நான், தெய்விக சாஸ்திரமான ஜோதிஷத்தை எதிர்த்து, 'அதெல்லாம் அந்தப் பயலின் குறும்புத்தனமான விளையாட்டால் தான் விளைந்த வினை' என்று எப்படிச் சொல்ல முடியும்?) என் பையனின் வலது புஜத்தில், சரியாய் முழங்கைக்கு நேராய், எலும்பு முறிந்துவிட்டது. அவனைப் பரிசீலனை செய்த சர்ஜன், எலும்பு சத்திர சிகிச்சையில் நிபுணர் என்று கீர்த்தி பெற்றவர். பையனின் விபத்து எப்படிப்பட்டது என்ற ஆராய்ச்சி, அவருடைய அறைக்குள்ளே தான் நடந்தது. 'காரனுயிட் ப்ரோஸஸ்,' 'ஆஸ்ஸிபிகேஷன்,' 'கால்ஸிபிகேஷன்,' 'ஆஸ்டியோடாமி' என்று என்னென்னவோ தடபுடலான வைத்திய சாஸ்திர வார்த்தைகளையெல்லாம், அவரும் அவருடைய உதவி டாக்டரும், ஏதோ பாட்மின்டன் பந்தடிப்பது மாதிரி, ஒருவருக் கொருவர் பரிமாறிக் கொண்டதைக் கேட்டேன். இந்தச் சர்ச்சைகள் நடந்து கொண்டிருக்கும் போது, அவர்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று அறியும் ஆவல் ஒருபுறம்; அவர்கள் சொல்லுவது இன்னதென்றே புரியாத ஆச்சர்யம் மறுபுறம்—இந்த இரண்டு உணர்ச்சிகளும் சுந்தரத்தின் முகத்தில் மாறிமாறிப் பிரதிபலித்துக்கொண்டிருந்தன. கடைசியில், டாக்டர், சிறுவனின் கன்னத்தைத் தடவிக்கொடுத்து, "நீ ஆஸ்பத்திரியிலேயே கொஞ்ச நாள் இருக்கவேணும். இருந்தால், உன் கை, சரியாய்ப் போய்விடும்" என்று, பரிவோடு சொன்னார். அப்போதுதான், அவனுக்குத் தன்னுடைய நிர்க்கதியான நிலைமை புலப்பட்டது. அதுவரை

ஆஸ்பத்திரியிலே வேதனைப்படும் குழந்தை, அதை மறக்க, ஒரு பொம்மையை அதனிடம் கொடுக்கிறார்கள். அதன் சேவை, தன்னலமற்ற தல்லவா? அந்தப் பொம்மை உயிரற்றதுதான். ஆனால், குழந்தையின் உணர்ச்சியைப் பிரதிபலிக்கையில், அதற்கு ஜீவ களை உண்டாகி விடுகிறது. ஆகவே, அது வாழ்கிறது, தாழ்கிறது, சாகவும் சாகிறது. அது மனமயக்கமாயிருக்கலாம்; ஆனால், வாழ்வென்பதே அதுதானே?

யில் டாக்டரின் செயல்களையே ஆச்சரியத்தோடு கவனித்துக் கொண்டிருந்ததால் அவனுக்கு மறந்திருந்த வலியும், இப்போது திடீரென்று வரவர அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. அச்சமயம், குழந்தைகளின் வார்டில், ஒரு படுக்கைகூடக் காலியில்லை. ஏறக்குறையக் குணமாகியிருந்த யாரோ ஒரு குழந்தையை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அதன் மேல் தான் சுந்தரத்தை ஆஸ்பத்திரியில் சேர்த்துக்கொண்டார்கள். துளி அழுக்குமில்லாமல் வெள்ளை வெளேர் என்று சலவை செய்யப்பட்ட ஒரு புதிய தலையணை உறையையும் படுக்கை விரிப்பையும், நர்ஸ் கொண்டு வந்து, ஏழாம் நம்பர் படுக்கையைத் தயாரித்தாள். பின்பு, சிறுவனைப் பார்த்து, தாய்போல் புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டு, அவனைப் படுக்கையில் கொண்டு போய் விட்டாள்.

பெரும்பாலான குழந்தைகள், ஏழைத் தொழிலாளர்களின் குழந்தைகள் தான். அவர்களெல்லாம் ஆஸ்பத்திரி உடுப்பையே அணிந்தார்கள். சுந்தரம் மட்டில் தன் சொந்த உடுப்பை அணிந்து கொள்ளலாமென்று, அனுமதித்தார்கள். இதைக் கண்ட மற்றக் குழந்தைகள் அனைவரும், தங்களையெல்லாம் விட உயர்ந்தவனாக இவனை மதித்தார்கள். முதலில் சில நாட்கள் வரையில், சுந்தரத்துக்கு, அவர்களுடன் சேரக் கூச்சமாயிருந்தது. ஆனால், வெகு சீக்கிரத்திலேயே, அவனுக்கு அவர்களிடம் சகஜபாவம் ஏற்பட்டு விட்டது; அவர்களோடு தாராளமாய்க் கலந்து கொள்ளவும் தொடங்கி விட்டான். மனிதர்களை ஒருவரோடொருவர் சேர முடியாமல் பிரித்து வைக்கும் பிரம்மாண்டமான தடைச் சுவர்களையெல்லாம் தகர்த்தெறியும் வலிமை, குழந்தைகளின் சின்னஞ் சிறு கைகளுக்கு இருக்கிறது. ஏனெனில், அவர்களுடைய இயற்கையான அன்பு, தெய்விகமானது.

வார்டில் நோயால் வருந்திக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்குச் சந்தோஷ மூட்டுவதற்காக, சில சௌகரியங்கள் செய்திருந்தார்கள். விளையாடப் பொம்மைகளும், சவாரி செய்ய மூன்று சக்கர சைக்கில்களும், அவர்களுக்குக் கொடுத்தார்கள். மிகவும் கடுமையான ஸ்திதியில் உள்ள குழந்தைகள் பட்டில் தான், படுக்கையோடு அடைத்துக் கிடந்தார்கள். மற்றக் குழந்தைகள் அனைவரும்,குதூகலமாய் விளையாடிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளின் விளையாட்டே ஓர் அலாதி அழகு அல்லவா? வார்டு, ஒரு சமயம், மிருகக் காட்சிச்சாலைக் கூண்டுகளையெல்லாம் திறந்து விட்டமாதிரி, ஒரே அமக்களமாயிருக்கும்; பள்ளிக்கூட வாத்திச்சியைப்போல், நர்ஸ் வந்து, குழந்தைகளைக் கனகடுமையாய் அதட்டுவாள். மற்றொரு சமயம், மௌனப் பொம்மைகள் அடங்கிய, ஒரு கண்காட்சிச் சாலையைப் போல், வார்டு மாறி விடும்; ஆஸ்பத்திரி சர்ஜன் பார்வையிடுவதற்காக வருகிறார் என்றவுடனே, சிறுவர்களெல்லாம், படுக்கையிலே படுத்துப் போர்வையை இழுத்து மூடிக் கொண்டு கிடப்பார்கள்.

ஆப்பரேஷன் நடந்து, இரண்டு மூன்று வாரங்கள் ஆகிவிட்டன. சர்ஜனின் கத்தியை, சுந்தரம் தீரமாகவே பொறுத்துக் கொண்டான். படுக்கையிலே நிமிர்ந்தபடி படுத் திருந்தான்.

மாவு போட்டுக் கட்டுக்கட்டி யிருந்த அவன் கை, அவனது மார்பிலே பதிந்து கிடந்தது. அவன் உடம்பு வெளிறிட் டிருந் தது. இயற்கையிலேயே விசால மான அவனுடைய கண்கள், ரத்தச் சேதத்தினுல் உண் டான சோர்வினுலும் குளோர பார மயக்கத்தினுலும், மேலும் விசாலமாய்த் தென்பட்டன. மயக்க மருந்தின் வாசனை இன் னும் அவன் நாக்கைச் சுற்றிக் கொண்டே யிருந்ததாம். "இது ஏன்?" என்று அவன் என்னை விசாரித்தான். குழந்தைக்கு வீட்டு ஞாபகம் வந்துவிட்டது. "ஆஸ்பத்திரிலே யிருந்து, எப்ப என்னெ அழச்சுண்டு போவே?" என்று என்னைக் கேட்கத் தொடங்கிவிட்டான்.

"இன்னும் ஒரு வாரத்திலெ போகலாம். டாக்டரைக் கேட்க றேன்" என்று சொல்லி, அவ னைச் சமாதானம் செய்தேன்.

அந்த வாரமும் கழிந்தது. அவன் கைக்கு மீண்டும் புதிதாய் மாவு வைத்துக் கட்டுக் கட்டினுர் கள். ஒவ்வொரு நாள் மாலையி லும் நான் அவனை விட்டுப்புறப் புறப்படும்போது, அதே கேள்வி யைத் திரும்பத் திரும்ப, அவனும் கேட்டுக் கொண்டேயிருந்தான். நானும் அதே பதிலையே திரும் பத் திரும்பச் சொல்லிக் கொண் டிருந்தேன்.

"என்னடா கண்ணு, பினத் திண்டே யிருக்கே? உன் அந் தக் கை மாதிரி இந்தக் கையும் ஜோராய் ஆக வேண்டாமா, அப்பா?" என்றேன்.

அவன் புன்சிரிப்புடன், "ஆமாம். ஆனு, அதுக்கு ரொம்ப ரொம்ப நாள் ஆகுமோ?" என்று கேட் டான்.

"இல்லே; ரொம்ப நாள் ஆகாது."

நான் சொன்னது பொய் என்று எனக்கே தெரியும். என் ருலும், எலும்பு சத்திர சிகிச்சை யின் நுட்பங்களெல்லாம் தெரிந் தவனைப் போலவே, நான் பாசாங்கு செய்தேன். என் னுடைய அந்தப் பாசாங்கு, பால கனின் நிஷ்களங்கமான மன துக்கு நிம்மதியூட்டும் அருமருந் தாக உதவியது; இதனுல் அவன் இன்னு மோர் இருபத்தி நாலு மணிநேரம் அமைதியாய்த் தூங்கு வான் அல்லவா?

ஒருநாள் பிற்பகலில், நான் வழக் கம் போல் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தபோது, அங்கே, என்று மில்லாததொரு மௌனம் சூழ்ந் திருக்கக் கண்டேன். குழந்தை களின் விளையாட்டையோ, ஆர வாரத்தையோ காணும். அவர் கள் அனைவரும், தங்கள் தங்கள் கட்டிலிலே சேர்த்துக் கட்டி வைத்தாற் போல், அசையாது படுத்திருந்தார்கள். ஏதோ ஒரு விசேஷ சம்பவம் நடந்திருப்ப தாக, அந்த மௌனம் சுட்டிக் காட்டியது. எனக்குமே ஒரு பர பரப்பு ஏற்பட்டது. வார்டு முழு வதையும் சுற்றி, ஒரு கண்ணேட் டம் விட்டேன். அதோ அந்தக் கோடியிலே ஒரு மூலையில், தலைமை நர்ஸும் ஆஸ்பத்திரி ஸர் ஜனும் ஓர் ஆண் நர்ஸும் மற் ருெரு பெண் நர்ஸும், ஒரு படுக்கையைச் சூழ்ந்து நிற்கக் கண்டேன். ஸர்ஜன் குனிந்து, ஓர் உருவத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். கூடைபோல் கவிந்து, பனிபோல் மெல்லிய தாய், செக்கச் செவேல் என் றிருந்த ஒரு வலைக்குக் கீழே, அந்த உருவம் கிடந்தது. வலை யின் உட்புறத்தில், ஒரு சின்னஞ்

சிறு எலக்ட்ரிக் பல்பு, பளிச் சென்று அந்த உருவத்தின்மீது ஒளி வீசிக் கொண்டிருந்தது. இந்தக் காட்சி எனக்குப் புதியதும், புரியாத விந்தையுமா யிருந்தது. என் பையனைக் கேட்டால் ஏதாவது புலப்படுமா என்று கருதி, அவனை விசாரித்தேன்.

" அதுவா? அது புதுக்கேஸ், அப்பா" என்று சுருக்கமாகப் பதில் சொன்னான் சிறுவன்.

" அதை எப்ப கொண்டு வந்தா?"

" நர்ஸ் எனக்குப் பாலும் பிஸ்கோத்தும் கொடுப்பா பாரு; அப்ப கொண்டு வந்தா."

என் கடிகாரத்தைப் பார்த்தேன். பாலும் பிஸ்கோத்தும், மத்தியானம் பன்னிரண்டு மணிக்குக் கொடுப்பார்கள். இப்போது மணி மூன்றரை. புதிய கேஸ், மிக்க அபாயமானதாய்த்தான் இருக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டேன். பையனின் முகத்தை உற்று நோக்கினேன். முகம் கொஞ்சம் வாடியிருந்தது; கண்கள், காய்ச்சல் வரப்போகிறவனைப் போல் ஜொலித்தன. அவனது இடது கையை, என் கையால் பிடித்து, அவன் தலையைத் தடவிக் கொடுத்தேன்.

" உனக்குப் பயமா யிருக்கா?" என்று பரிவோடு கேட்டேன்.

" இல்லே."

" நான் டாக்டரைப் பார்த்தேன்."

" என்ன சொன்னர்?" என்று அவன் ஆவலோடு கேட்டான்.

" வர திங்கட்கிழமை, நீ என்னேடே வீட்டுக்கு வந்துடலாம்."

அவன் சந்தோஷமாய்ப் புன் முறுவல் செய்தான். நல்லவேளை! இனி என் பையனிடம் நான் பொய் சொல்லத் தேவையில்லை.

அடுத்த நிமிஷம், திடீரென்று, என்னை யறியாமலே, அதோ அந்த யாரோ ஊர் பேர் தெரியாத குழந்தைக்காக, பகவானை நான் பிரார்த்திக்கத் தொடங்கி விட்டேன். உலகத்திலே எத்தனையோ சோக சம்பவங்கள் நிகழ்கின்றன, ஆனல், அத்தனையிலும் மகா சோகமானது ஒரு குழந்தையின் மரணம்தான் என்று எனக்குத் தோன்றுகிறது. சாவு என்றாலே, எனக்கு வெறுப்பு. நரகத்திலே வேண்டுமானாலும் கிடந்துழன்று, துளித்துளியாக உடல் கரைந்து மறைந்தாலும், நான் சகித்துக் கொள்ளுவேன்; சாவை மாத்திரம் என்னல் சகிக்கமுடியாது. இதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ள, நான் வெட்கப்படவில்லை.

ஆகையால், யாரோ தெரியாத அந்த அந்நியக் குழந்தையின் உயிருக்காக, நான் பிரார்த்தித்தேன். பகவானே! மனமிரங்கு! ஐயோ! அந்தக் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை கொடு! கள்ளியும் முள்ளும் நிறைந்த காடு போன்ற இவ்வுலகத்தில், குழந்தைகள்தானே கண் குளிரும் வர்ணப் பூஞ்செடிகள் போல் விளங்குகிறர்கள்? மனிதர்களின் குரோத சமுத்திரத்திலே, இனிமை ஊட்டப் பிறந்த அமிர்தத் துளிகளும் அவர்களே யல்லவா? பகவானே! மனமிரங்கு! ஐயோ! அந்தக் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை கொடு! உன் சர்வவல்லமையைப் பயன் படுத்து. இப்படிப்பட்ட ஒவ்வொரு சாவும் அந்த வல்லமைக்

கன்றே இழுக்கு? உன்னிடம் மனிதனுக்குள்ள பக்தியையே அன்றே நலியச் செய்கிறது?

நான் இப்படி உருக்கமாய்ப் பிரார்த்திக்கையில், என்னை யறியாமலே, வாய்விட்டுப் புலம்பிவிட்டேன் போல் இருக்கிறது. சுந்தரம் என்னைக் கூர்ந்து இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். உள்ள வேதனைக்கு ஆறுதலாகவே உணர்ச்சிகள் பொங்குகின்றன; அவைகளை அடக்கிப் பயனில்லை. ஆகையால், மௌனமாகவே என் உள்ளத்தில் குமுறிய உணர்ச்சித் திரளை, அந்தக் கட்டிடமே, ஒலி பெருக்கிபோல் பேரொலி செய்திருந்தாலும் கூட, நான் வெட்கப்பட மாட்டேன். என் சிறுவன் மீது குனிந்து, அவன் கன்னத்தைச் சரேலென்று என் உதடுகளால் முத்தமிட்டுக் கொண்டேன். அவன் கண்கள், என்னை நூற்றுக் கணக்கான கேள்விகள் கேட்க விரும்பியதுபோல், ஒளி செய்தன.

"கண்ணு, தூங்கம்மா. குருட்டு யோசனை யெல்லாம் பண்ணிண்டிருக்காதே" என்று அன்பு கனியச் சொன்னேன்.

"என்னிக்கி, அப்பா, திங்கக் கிழமை?" என்று அவன் ஆவலாய் வினவினன்.

"இன்னிக்கித்தான்."

"இல்லே; இது இல்லே" என்று சொல்லி, மெதுவாக விரலை மடக்கி, வாரத்தின் நாட்களை அவன் எண்ணத் தொடங்கினன்: "நான் ஆத்துக்கு வர, இன்னும் ஆறு நாள் இருக்கு" என்று, சந்தோஷத்தோடு கூறினன்.

"ஆமாம். இப்ப தூங்கு" என்று மீண்டும் சொன்னேன்; என் கண்கள், வார்டின் அதோ அந்த மூலையை நோக்கி மறுபடியும் திரும்பின.

அங்கே அந்தச் செந்நிற வலைக்குக் கீழே கிடந்த தேகத்தைப் பார்த்துக் குனிந்தவண்ணம் தான், ஆஸ்பத்திரி சர்ஜன் இன்னமும் நின்று கொண்டிருந்தார். நர்ஸ் என்னைத் திரும்பிப் பார்த்தால் இதுபற்றி அவளைக் கேட்கலாம் என்று, சுமார் பத்து நிமிஷம் வரையில் காத்து நின்றேன். ஆனல், அவள் குனிந்தபடியே இருந்தாள். என்ன ஆச்சரியம்! இந்த வைத்தியத் தொழிலில் இருப்பவர்களே இப்படித்தான். பாக்கி சமயத்திலெல்லாம் நம்முடன் ரொம்ப சரளமாய்ப் பழகுகிருர்கள்; தங்கள் வேலையில் ஈடுபட்டிருக்கும் போதோ, எவ்வளவு அந்நியமாயும் கல்லு மாதிரியும் ஆகிவிடுகிருர்கள்!

பையனுக்குக் கடைசியாய் ஒன்றிரு வார்த்தைகள் ஆறுதல் கூறிவிட்டு, வார்டை விட்டு வெளியே நடந்தேன். அன்றிரவு அவன் சரியாகத் தூங்கமாட்டான் என்ற கவலை, என் மனதுக்குள்ளே உறுத்திக் கொண்டிருந்தது. அவன் அவ்வளவு உணர்ச்சிக் களஞ்சியம்.

ஆனல், யார் என்று தெரியாத அந்த அந்நியக் குழந்தையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று, கட்டுக்கடங்காத ஓர் ஆவல், எனக்கு உண்டாயிற்று. ஆஸ்பத்திரி வராந்தாவுக்கு வெளியே வந்ததும், சற்று நின்று, வாசல் காப்போனை விசாரித்தேன்:

"குழந்தைகள் வார்டில் கடுமையான கேஸ் ஒன்று வந்திருக்கிறுப் போல் இருக்கே. அதைப் பத்தி உனக்கு ஏதாவது தெரியுமா?"

"பதினேழாம் நம்பர்ப் படுக்கையா, ஸார்? ஆமாம். ரொம்ப டேஞ்சர் ஸார்."

"என்ன வியாதி?"

"வியாதி ஒண்ணு மில்லீங்க. ஒரு அபாயம் நேர்ந்திடிச்சு. ராயபுரம் மண்ணெண்ணெய் டாங்கி இருக்கு, பாருங்க; அதிலே, நேத்து மாலே, ஒரு துவாரம் விளுந்து, எண்ணெய் ஒளுக ஆரம்பிச்சிடிச்சு. பக்கத்திலே ஒரு சேரி இருக்குது. அந்தச் சேரியின் வளேக் குளந்தைங்கள் ளாம், ஆளுக்கொரு சீசாவோ தகர டப்பாவோ எடுத்துக்கிட்டு வந்து, எண்ணெ பிடிச்சுதுங்க. இந்த ஏளேங்களுக்கு இந்தப் பஞ்ச காலத்திலே, ஒரு பொட்டு மண்ணெண்ணெ யாரு எனுமாக் கொடுப்பா? அதுங்களுக்கு ஒரு பொட்டு எண்ணெ கெடச்சா அது பெரிய பொதையல் மாதிரி தானே, ஸார். அந்தக் குளந்தைங்கள்ளெ, பொட்டைக் குட்டிங்கள்தான் சாஸ்தி. இந்த மாதிரி கும்பலிலே, பொட்டைக் குட்டிங்க, போடற கூச்சலும் மோதி யிடிச்சுக்கிறதும் சொல்லணுமா? திடீர்னு, இந்தக் குளந்தைங்கள்ளாம் சேர்ந்தாப்பிலே பெருங் கூச்சல் போட்டுதுங்க. எவனே வேடிக்கை பாக்க வந்த புண்ணியவான், அசதி மறதியா, ஒரு தீக்குச்சியெக் கிளிச்சோ, ஒரு ஸிகரெட் துண்டையோ, எண்ணெ ஒளுக்கிலே போட்டிருக்கான். அது தீப்பத்திக் கிட்டு, எல்லாப் பசங்களேயும் குட்டிங்களேயும் பொசுக்கிப் போட்டுடுச்சு — நாகப் பாம்பு நாக்கெ நாக்கெ நீட்டிக்கிணு தீண்டுமே அந்தமாதிரி தீண்டிப் பிடிச்சு. பத்துப் பன்னண்டு, குளந்தைங்களே, இன்னிக் காலேயிலே ஆஸ்பத்திரிக்குக் கொணுந்து, மருந்து போட்டுக் கட்டி அனுப்பிச்சிட்டாங்க. ரெம்ப அபாயமான ஒரு குட்டியெ மாத்தரம் ஆஸ்பத்திரியிலேயே வெச்சிருக்காங்க. குளந்தை பேரைப் பதிஞ்சிக்கிறப்போ, உச்சி நேரம், ஒரு மணியிருக்கும். அந்தக் குட்டியின் தோல் பூராவும் வெள்ளரிப் பளம் மாதிரி உரிஞ்சு போச்சுதாம், ஸார். ஐயோ பாவம்!"

அடுத்த நாள், மத்தியானம் நான் ஆஸ்பத்திரிக்குப் போன போது, மறுபடியும் குழந்தைகள் வார்டு, மிக்க அமைதியாகவே இருந்தது. வியாதிகளின் வேதனையும், வறுமைத் துன்பமுமே ஒன்று திரண்டு உருப் பெற்று, இந்தப் பேய் அமைதியைப் படைத்தனவோ என்று தோன்றியது. நர்ஸ், தன் மேஜைக்கு முன்னே உட்கார்ந்து ஏதோ ஒரு ரெஜிஸ்டரைப் புரட்டிக் கொண்டிருந்தாள். நான் அவளேக் கடந்து செல்லுகையில், என் கண்கள் வெகு வேகமாக, வார்டின் கோடியை நோக்கிப் பாய்ந்தன. படுக்கையிலே கிடந்த உருவத்தைப் பார்த்தபோது, என் உள்ளத்தின் பரபரப்பு, சற்றுச் சமனம் அடைந்தது. அந்தப் படுக்கைமீது, கூடை போன்ற அந்த வலே, இப்போது கவிந்திருக்க வில்லே. அந்தக் குழந்தைக்கு மூச்சு மூட்டும் முயற்சி வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்று, நான் எண்ணினேன். தன் துன்பவேதனையைப் பொறுத்துக் கொள்ளும் சக்தியை, குழந்தைக்கு அவர்கள் தந்துவிட்டார்கள்!

என் பையனுக்கு வேண்டிய சௌகரியங்களேக் கவனித்து விட்டு, மெல்ல மெல்ல அந்தப் படுக்கையின் அருகே சென்றேன். கட்டிலுக்கு மேலே,

ஓர் ஆணியில், வியாதியின் விவரங்கள் அடங்கிய 'சார்ட்' தொங்கிக் கொண்டிருந்தது. அதை நான் படித்துப் பார்த்தேன். அதில் 'பொன்னி. வயது, எட்டு. வியாதி, கடுமையான தீக்காயம்' என்று எழுதியிருந்தது. அதற்குக் கீழே, மிக நுணுக்கமான கையெழுத்தில், விபத்தின் விவரம் விரிவாக எழுதப்பட்டிருந்தது. நான் அதைப் படிக்க, விரும்பவில்லை.

சிறுமியை நோக்கினேன். கழுத்துவரையில் ஒரு போர்வையால் மூடப்பட்டிருந்தாள். அவளுடைய சின்னஞ்சிறு முகம் கருமையாயிருந்தது. தலையிலே பரட்டை மயிர் அடர்ந்திருந்தது. கண்கள் உறக்கத்தால் மூடியிருந்தன. அவள் மார்பு, மெல்ல மெல்ல அலைபோல் மேலும் கீழும் அசைந்துகொண்டிருந்தது. எப்படியாயினும் சரி; அவளுடைய வேதனையை, உறக்கத்திலே, அவள் மறந்திருந்தாள். ஆனால், இந்த உறக்கத்தின் அமைதி எவ்வளவு நேரத்துக்கு நீடித்திருக்க முடியும்?

பின்பு, எனக்குத் தெரியாமலே, என் பார்வை, அவளருகே படுத்திருந்த ஒரு பொம்மையின் மீது சென்றது. பெரிய பொம்மை; ஒரு யூரேஷியப் பெண் பொம்மை. அது அங்கியும் பாவாடையும் கட்டி, நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வெல்வட் வர்ணமான பூட்ஸ் அதன் கால்களில் மாட்டியிருந்தது. பொம்மையின் கன்னங்கள் ரோஜா நிறத்துடன் பொலிந்தன; உதடுகளும் அதே நிறந்தான். ஆகாய நீலக் கற்களையே பதித்த கண்கள். தலைமயிர் சொர்ண நிறமாய்ச் சுருண்டிருந்தது. பொம்மையின் தலைமேல்

லட்சியத்தை அடைய வழி

நீ அடைய விரும்பும் லட்சியத்துக்குத் தகுந்த சாதனங்களைக் கைக்கொள்ளவேண்டும். 'பாலில் வெண்ணெய் இருக்கிறது' என்று தொண்டை கம்மிப் போகும்படி கத்தினால், வெண்ணெய் கிடைத்து விடாது. வெண்ணெயைப் பெற வேண்டுமானால், பாலைத் தயிராக்கி, பின்பு கடைந்து எடுக்கவேண்டும். அதே போல, ஈசுவரனைக் காண விரும்புவாயானால், அதற்கேற்ற சாதனங்களை நீ கடைப்பிடிக்க வேண்டும். 'ஈசுவரா! ஈசுவரா!' என்று வெறுமையே சொல்வதால் பிரயோசனமில்லை.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

ஒரு பெரிய ரிப்பன், அழகிய பட்டுப் பூச்சிபோல் முடிச்சுப் போடப்பட்டிருந்தது. குழி விழுந்த மிருதுவான தன் பொம்மைக் கைகளில், அது ஒரு பூனைக் குட்டியைத் தாங்கி, மார்போடு அணைத்துக்கொண்டிருந்தது. வேதனையால் துன்புறும் குழந்தை, தன் வலியை மறந்து சிறிது ஆறுதல் பெறுவதற்காக, பொம்மையை அதன் பக்கத்தில் கிடத்தியிருந்தார்கள். தனது தன்னலமற்ற சேவையினால் பூரிப்படைந்ததுபோல், பணிவோடும், கம்பீரமாகவும், குழந்தையின் அருகே கிடந்தது அந்தப் பொம்மை. பகவானே! இந்தச் சிறுமியை நீ தான் காப்பாற்ற வேணும்! என் உள்ளமுருகி, மீண்டும் மீண்டும் இவ்வாறு பிரார்த்தித்தேன்.

என் பையனை ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்க, இன்னும் இரண்டே நாட்கள்தான் இருந்தன. அந்த ஏழைப் பெண் பொன்னியும் குணமடைந்து வந்தாள். இந்த இரண்டு சந்தோஷத்தினாலும், எனக்கு என்

னவோ அளவு மீறிய உற்சாகம் உண்டாயிற்று. ஒரு பவுண்டு பெப்பர்மிண்டு வாங்கி, வார்டி லிருந்த குழந்தைகளுக்கெல்லாம் வழங்கினேன். அடுத்த நாள் சாயங்காலம் ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது, படுக்கை நம்பர் 17 காலியாயிருக்கக் கண்டு, ஆச்சரிய மடைந்தேன். சிறுமியைக் கட்டுக் கட்டுவதற்காக, மாடியி லுள்ள ஆப்பரேஷன் அறைக்கு ஒருவேளை, எடுத்துச் சென்றிருப் பார்களோ என்று எண்ணி னேன். என் மனதிலே ஓடிய யோசனையை, சுந்தரம் எப் படியோ ஊகித்து விட்டான். அமைதியும், தெளிவும், தன் வய துக்கு மிஞ்சிய அலட்சிய பாவ மும் கொண்ட குரலில், அவன் சொன்னான்:

"அவ இன்னிக்குக் காலமே செத்துப் போயிட்டா. அவ அம்மா வந்து, 'கோ'ன்னு அழுதா. இங்கே ஒண்ணும் சந் தடி பண்ணாதேன்னு, அவளை நர்ஸ் தடுத்துப்புட்டா."

"இன்னிக்குக் காலமே செத் துப் போயிட்டாளா!" என்று திகைப்புடன் கூவினேன். தீப் புண், ரணங்கண்டு அழுகிப் போய்விட்டதாக்கும்! மேலும், தொடர்ந்து, "ஆமாம்; செத்துப் போறதுன்னு, என்னடா கண்ணு? உனக்குத் தெரியுமா?" என்று என் பையனைக் கேட் டேன்.

சுந்தரம் சிறிது நேரம் மௌன மாயிருந்து விட்டு, பிறகு சொன் னான்: "ஓ! நன்னாத் தெரியுமே. பாட்டி செத்துப்போனா. நீங்கள் ளாம் அழுதக இல்லியா? அதுக் கப்பறம் அவளெ எங்கெயோ எடுத்துண்டு போனக......"

என் தாயாரின் மரணத்தைப் பற்றியே, அவன் பிரஸ்தாபித் தான். எனக்கு அதைத் தாங்க முடியவில்லை. நான் கேட்டேன்: "உனக்குப் பயமா யில்லையா?"

"இல்லே; ஆனா, அதோ அந் தப் பொம்மை எனக்குப் பிடிக் கவே யில்லே" என்று, மிக்க அழுத்தமான குரலில் சொன் னான்.

"எந்தப் பொம்மை?" என்று நான் கேட்டேன்.

"அதா? அது அன்னிக்கி நர்ஸ் குடுத்தா பாரு, செத்துப்போன பொண்ணுகிட்ட, அந்தப் பொம்மைதான்."

"அந்தப் பொம்மைக் கென்ன வந்தது?"

"ரெண்டு மூணு நாளைக்கு முன்னாலே ஒரு நா, நீ வரத்துக்கு முந்தி, அந்தப் பொம்மையெ, நர்ஸ் எனக்கு விளையாடக் குடுத்தா. வாண்டான்னுட் டேன். அவ விடமாட்டேன்னு அதெ என் பக்கத்திலே படுக்கப் போட்டு, என்னெக் கேலி பண்ணி, சிரிச்சா. நான் அதெ எட்டி விட்டெறிஞ்சுட்டேன்.... எனக்குப் பொம்மனாட்டிப் பொம்மையே பிடிக்கல்லே." அவன் முகத்திலே, சிறிது அரு வருப்புக் குறி, நிழல்போல் ஓடி யது.

சுந்தரத்தை ஆஸ்பத்திரியி லிருந்து விடுவிக்கப் போகிற அன்று சாயங்காலம். வார்டு ரெஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டுவிட்டு, அட்மிஷன் டிக் கட்டை, நர்ஸிடமிருந்து திரும்பி வாங்கிக்கொண்டு வருகிறேன். அப்போது, நர்ஸ் உட்கார்ந் திருந்த இடத்தில் சுவர் அருகே இருந்த கண்ணாடி பீரோவை, தற்செயலாக நோக்கினேன். மனமுருக்கும் துர்ப்பாக்கிய

நிலைமையிலே நான் கண்டதும் நன்ருய் அறிந்ததுமான அந்த பூரேஷியப் பொம்மைமீது, என் கண்கள் ஆழப் பதிந்துவிட்டன. அதையே நான் கண்கொட்டா மல் பார்த்துக்கொண் டிருந்த போது, என் உடம்பிலே ஒரு நடுக்கம் ஏற்பட்டது. பொம்மை யின் சொர்ண நிறச் சுருள் மயி ரும், அதன் தலைமீது பட்டுப் பூச்சிபோல் அமர்ந்திருந்த ரிப் பன் முடிச்சும் விழுந்துவிட்டன; எண்ணெய் காணுத பரட்டை மயிர், தலை முழுதும் சூழ்ந்தது. ரோஜா நிறக் கன்னங்கள், பொலிவிழந்து, கோரமாய்க் கறுத்துப் போயின. அங்கியும் பாவாடையும் வெல்வட் வர்ண பூட்ஸூம், மாயமாய் மறைந்தன. ஆகாய நீலநிறக் கற்கள் பதித்த கண்கள், வெறுங் குழிகளாய்ப் போயின. அதன் பொம்மைக் கைகளில் இருந்த பூனைக்குட்டி, எங்கோ குதித்தோடிப் போய் விட்டது. பொம்மை இதோ பீரோவிலே வெறுங் கட்டை போல் அலங்காரமிழந்து அம் மணமாய்க் கிடந்தது; அதன் உடம்பெல்லாம் காயம்பட்டுக் கீற்று விழுந்து நிறம் குலைந்து பயங்கரமாயிருந்தது.

தன்னுணர்வற்று, என் கண் கள் தாமாக மூடிக்கொண்டன. என் பையனின் சின்னஞ்சிறு கையிலே என் கையைக் கெட்டி யாய்க் கோத்துப் பிடித்துக் கொண்டு, ஆஸ்பத்திரியின் அந் தக் குழந்தைகள் வார்டை விட்டு, வெளியேறி வந்துவிட்டேன்.

✲

ரகஸ்யம்

தொடையிலே ஒரு பிடிலை வைத்துக்கொண்டு, ஒரு கையால் விறு விறு என்று வில்லால் ஒரே ஒரு கம்பியை மட்டிலுமே மீட்டி, மறு கையின் ஒரே விரலால் அந்தத் தந்தியின் ஒரே ஸ்தானத்தை இடைவிடாமல் பல மணி நேரம் நாள்தோறும் அமுக்கிக்கொண்டிருந் தான் ஒரு மனிதன். அதனுல் உண்டாகும் ஒரே நாதம், கேட்பவரின் காதைப் பிளந்து தள்ளிவிடும். இந்த ஓசையை, அவனுடைய மனைவி ஐந்தாறு மாதகாலம் வரையில் சகித்து வந்தாள். கடைசியில், அவ ளுக்கே சகிக்காமல், காது புளித்துப் போயிற்று. புருஷன் ஒரு நாள் இந்தக் கோலத்தில் இருக்கும்போது அவனிடம் வந்தாள்.

"ஆமாம், நானும் எத்தனையோ பேர் பிடில் வாசிப்பதைக் கேட் டிருக்கிறேன். பிடிலில் நான்கு கம்பிகள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் மீட்டி, பல இடங்களில் பல விரல்களால், பிறரெல்லாம் அழுத்துவதை நான் பார்த்திருக்கிறேன். நீங்களோ ஒரே தந்தியில் ஒரே இடத்தையே எப்போதும் அமுக்கிக் கொண்டிருக்கிறீர்களே? ஏன் இப்படி?" என்று கேட்டாள்.

புருஷன், வாத்திய கோஷத்தைச் சற்று நிறுத்தினுன். 'ஜம்' என்று கம்பீரமாய்த் தலையை நிமிர்த்தினுன். மனைவியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். சொன்னுன்: "என்ன இருந்தாலும், நீ ஒரு பெண் பிள்ளை. உனக்கு என்ன தெரியும்? உன் கூந்தல்தான் நீளமா யிருக்கிறது; புத்தி கட்டை. பிறரெல்லாம் நாலு கம்பிகளையும் பல விரல்களால் மேலும் கீழும் தொட்டுத் தொட்டுத் தடவிக்கொண்டே யிருப்பதன் காரணம் என்ன தெரியுமா? இடம் எது என்று அவர் கள் தேடிக்கொண்டேயிருக்கிருர்கள். நான் கண்டுபிடித்துவிட்டேன்."

எழுத்தாளன் ஆனந்தம்

வின்ஸ்டன் சர்ச்சில்

'எழுத்தாளன்' என்ற சொல்லுக்குச் சரியான பொருள் என்னவோ, எனக்குத் தெரி தெரியாது. அவன் எழுதவேண்டும் என்பது நிச்சயம். யாரும் இதற்குமுன் எழுதாத முறையில், ஏதாவது ஒன்றை அவன் எழுத வேண்டும். அவன் எழுதியது ஒரு புத்தகத்தில் வெளியாக வேண்டும். எல்லாவற்றையும்விட முக்கியமாக, அவன் எழுதிய விஷயத்துக்குப் பணம் கிடைக்க வேண்டும். 'ஒரு முழு முட்டாளைத் தவிர வேறு எவனும் பணம் வாங்காமல் எழுதமாட்டான்' என்று டாக்டர் ஜான்ஸன் கூறியது மிகவும் பொருத்தம். சொந்தமாக எழுதிய விஷயத்தைப் புத்தக வடிவில் பிரசுரித்து, அதன் வருவாயால் வாழ்பவனே எழுத்தாளன் என்பது என் கருத்து. இதை நீங்கள் ஒப்புக்கொண்டால், இன்னொரு விஷயமும் நான் சொல்ல முடியும்: அதாவது, மொத்தத்தில் இந்த எழுத்தாளர் அனைவரும் மிக்க அதிர்ஷ்டசாலிகள். மனித குலத்தில் பெரும் பகுதியினர், வேலையிலே பொழுதைப் போக்குகிறார்கள். வயலிலோ, ஆலையிலோ, காரியாலயத்திலோ வேலை முடிந்த பிறகே, விளையாட அவர்களுக்கு நேரம் இருக்கிறது. மனதுக்குப் பிடிக்காததும் சலிப்புத் தட்டக் கூடியதுமான வேலை என்ற கொடுமைக்கு, ஒவ்வொரு நாளும் பல மணி நேரத்தை அவர்கள் பலிகொடுக்க வேண்டியதாய் இருக்கிறது. அதற்கு மிஞ்சித்தான், பொழுதுபோக்குக்கோ, களியாட்டத்துக்கோ அவர்களுக்கு நேரம் கிடைக்கிறது. மனித குலத்துக்கு என்று அமைந்த பொது நியதி இது. உலகத்தில் அதிர்ஷ்டசாலிகள் — உண்மையிலேயே மிக்க அதிர்ஷ்டசாலிகள் — யாரென்று என்னைக் கேட்டால், வேலையே இன்பமாயிருக்கப் பெற்றவர்கள்தான் என்று நான் சொல்லுவேன். அப்படிப் பட்டவர்களின் தொகை, பலர் சொல்லுவது போல, அவ்வளவு அதிகமானதல்ல. எழுத்தாளர்களே அதில் பெரும் பகுதியாய் இருக்கிறார்கள்.

நம்முடைய வேலையையே நமக்கு ஓர் இன்பமாகச் செய்துகொள்வதைப் போன்ற சிறந்த முயற்சி வேறு எதுவும் இருப்ப

இன்று பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருக்கிறாரே சர்ச்சில், அவர் வெறும் அரசியல்வாதி மட்டில் அல்ல; சிறந்த எழுத்தாளருமாவார். மின்வெட்டுப் போன்ற இந்தப் பிரசங்கம், முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன், லண்டன் எழுத்தாளர் சங்கத்தில், அவர் புரிந்ததாகும். எழுத்துத் தொழிலைக் குறித்து, அற்புதமான கருத்துக்களை அவர் தெரிவிக்கிறார்.

தாக, எனக்குத் தோன்றவில்லை. ஆகையால், ஆனந்த மயமான கற்பனைகளின் மூலம் வருவாய் தேடும் இத்தகைய அதிர்ஷ்ட சாலிகளைப் பார்த்து, மற்றவர்கள் பொறாமைப் படுகிறார்கள் என்றால், அதைக் கண்டு எனக்கு அதிசயம் உண்டாகவில்லை. எழுத்தாளர்களுக்கு, ஒவ்வொரு மணி நேர வேலையும், ஒவ்வொரு நேர இன்பப் பொழுதுபோக்கைப்போல் இருக்கும். ஓய்வு எடுத்துக்கொள்வதுதான் அவர்களுக்குக் கஷ்டமா யிருக்கும். விடுமுறை நாள் கூட, ஏதோ நஷ்டமாகவே தோன்றும். ஓர் ஆசிரியன் நன்றாக எழுதினாலும் சரி, மோசமாக எழுதினாலும் சரி, கொஞ்சமாக எழுதினாலும் சரி, அதிகமாக எழுதினாலும் சரி—எழுதும் ஆசைமட்டிலும் அவனுக்கிருக்குமானால், எழுத்து வேலையில் அவனுக்கு இன்பமே உண்டாகும். நான்கு மணி நேரம் வரையில் யாரும் நடுவில் குறுக்கிடமாட்டார்கள் என்ற நிச்சயத்துடன், ஏராளமான வெள்ளைக் கடுதாசிகளையும் அழகிய பேனாவையும் முன்னால் வைத்துக் கொண்டு, மனோகரமான காலை நேரத்தில் நம் மேஜையருகே உட்காருவது என்றால், அதுவே உண்மையான இன்பம்.

மனதுக்குப் பிடித்தமான ஒரு தொழிலிலே, சிந்தனை முழுவதையும் செலுத்துவதைக் காட்டிலும், வேறு எதை நாம் விரும்பப் போகிறோம்? வெளியுலகில் என்ன நடந்தாலும் அதைப்பற்றி நமக்கு என்ன கவலை? காமன்ஸ் சபை, என்ன செய்தா லென்ன? பிரபுக்கள் சபை எதைச் செய்தால் நமக்கென்ன? உலகெங்கும் அஞ்ஞானம் பரவினா லென்ன? அமெரிக்க வியாபாரம் நாசமானா லென்ன? சர்க்கார் பத்திரங்கள் விழுந்தால் என்ன? பெண்ணுரிமைப் புரட்சி எழுந்தா லென்ன? எதிலும் நமக்குக் கவலை இல்லை. குழப்பம் மிகுந்த இந்த உலகத்திலிருந்து நான்கு மணி நேரம் விடுதலை பெற்று, கற்பனை என்ற சாவியைக் கொண்டு, அகண்ட இயற்கையின் உத்தமப்பொருளையெல்லாம் குவித்திருக்கும் ரகஸ்ய பொக்கிஷத்தை நாம் திறந்து பார்க்கிறோம்.

சுதந்தரத்தைப் பற்றிப் பேசப் போனால், எழுத்தாளனின் சுதந்தரம் வேறு யாருக்கு உண்டு? அவனுடைய தொழிலுக்கு வேண்டிய கருவிகள் சர்வசாதாரணமானவை, மலிவானவை, இலவசமாய்க்கூடப் பெறக் கூடியவை. அவனுக்குக் குவியல் குவியலாக மூலப்பொருள்கள் தேவை இல்லை; பெரும்பெரும் கருவிகள் வேண்டியதில்லை; ஒத்தாசைக்கு ஆளோ, விலங்குகளோ அவசியம் இல்லை. அந்தத் தொழிலை நடத்த, தன்னைத் தவிர வேறு யாரையும் அவன் எதிர்பார்க்க வேண்டியதில்லை. அவனுக்குப் புறம்பான விஷயத்தைப்பற்றி, அவன் கவலைப்படுவதே இல்லை. அவன் ஒரு சாம்ராஜ்யத்துக்கு அரசன். அந்தச் சாம்ராஜ்யத்தில், சுய தேவைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் நிறைந்திருக்கின்றன. அங்கே, மற்றவர்களின் உதவியன்னியில் காலங்கழிக்கத் தக்க வசதிகளும் இருக்கின்றன. அவனது சொத்தைப் பறிக்க, யாராலும் முடியாது. தன்னுடைய சக்தியைத் தனக்கு எதிராக உபயோகிக்கும்படி அவனைக் கட்டாயப் படுத்தவோ, அவன் விரும்பும் முறையில் அதை உபயோகிப்பதைத் தடுக்கவோ, எவராலும் இயலாது. பேனாவே மக்களையும் தேசங்களையும் விடுவிக்கும் சுதந்தர வீரன். தன்னிச்

யான முறையில் சொந்தக் கருத்தை ஓர் எழுத்தாளன் எழுதுவதைத் தடுக்க, தளைகளாலோ பட்டினியாலோ முடியாது. தான் எழுதும் விஷயம் நன்ருய் இருந்தாலும் சரி, மோசமாய் இருந்தாலும் சரி, தன்னல் முடிந்ததை எழுதிக்கொண்டே இருக்கும் வரையில், அவன் சந்தோஷமாகவே வாழ்கிருன்.

அரசியல் வாழ்க்கையிலே அநிச்சய நிலைமைகளும் சங்கடங்களும் ஏற்படுகின்றன. அப்போதெல்லாம், ஓடித் தஞ்சம் புக, செழிப்பும் அமைதியும் மிக்க ஓர் உலகம் எனக்கிருக்கிறது என்று என்னையே நான் உற்சாகப்படுத்திக்கொள்வதுண்டு. அந்த 'உலக'த்துக்குள் நான் நுழைந்து விட்டால், அங்கே ஒரு பயலும் என்னைப் பின்தொடர்ந்து வரமுடியாது. அங்கே மந்தமாகவோ சோம்பேறித்தனமாகவோ இருக்கவேண்டியதும் இல்லை. அப்போதுதான், எழுத்து வேலையில் ஆசையுள்ளவனுய் நான் பிறந்ததற்கு மகிழ்கிறேன். அப்போதுதான், எழுத்துச் சுதந்தரத்துக்காக ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலத்திலும் தோன்றிப் போராடிய உதார குணம் மிக்க வீரர்களுக்கு, நான் நன்றி செலுத்துகிறேன்.

அதிலும், இந்த ஆங்கில பாஷை இருக்கிறதே, அது எவ்வளவு சிறந்த சாதனமாக விளங்குகிறது! ஒரே ஒரு பக்கம் எழுதினுலும் போதும்; நம் தாய் மொழியின் வளர்ச்சிச் செழிப்பையும், விதம் விதமான சொல்லமைப்புகளையும் வளைந்து கொடுக்கும் தன்மையையும் ஆழ்ந்த கருத்தழகையும், அனுபவித்து ஆனந்திப்போம். ஓர் ஆங்கில எழுத்தாளன், தான் நினைப்பதை ஆங்கிலத்தில் — எளிய ஆங்கிலத்தில் — சொல்ல முடியாவிட்டால், அது சொல்வதற்கே தகுதியற்ற பொருளாகத் தான் இருக்கும் என்று நம்புங்கள். எல்லோருமே ஆங்கிலத்தைச் சிறப்பாய்க் கற்கா திருக்கிருர்களே, என்ன பரிதாபம்! புராண இலக்கியச் செல்வங்களைக் கற்கக் கூடாதென்று நான் சொல்லவில்லை. ஓரளவு இலக்கியச் சுவை உள்ளவர்கள் கூட, கிரேக்கரோம இதிகாசங்களின் மோகன சக்தியில் வசீகர மாகாமல் இருக்க முடியாதுதான். ஆனுலும், தற்போதைய கல்விமுறை, என் மனதில் பல கடும் சந்தேகங்களை உண்டாக்கி யிருக்கிறது என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். விசேஷ சக்தி வாய்ந்த ஒருசிலர் மட்டிலுமே பாராட்டிச் சுவைக்கக் கூடிய இலக்கியச் செல்வத்தை, ஒன்றும் புரியாத,விருப்பமில்லாத கோடிக் கணக்கான எளிய மக்கள் மீது திணிக்கும் கல்விமுறையை, சிறந்த தென்று என்னல் நம்பமுடியவில்லை. நம் கலாசாலைகளில் கல்வி பயின்றுவரும் பெரும்பாலான மாணவர்களுக்கு, புராதன இலக்கியக் கல்வி, அர்த்தமற்ற, பயனில்லாப் பிதற்றலாகவே தோன்றுகிறது. ஆங்கிலம் கற்பதற்குப் புராதன இலக்கியங்கள் பூர்வாங்க சாதனம் என்று கூறுவார்களே யானல், அந்தப் பூர்வாங்கம் முடிவடைவதற் குள்ளேயே, பெரும்பாலான மாணவர்கள் படிப்பை முடித்துக் கொள்ளுகிருர்களே; அவர்களுக்கு என்ன பயன்? புராதன இலக்கியம் என்ற உன்னத மலைமேல் ஒருவர் ஏறத் தொடங்கினல், பல வருஷகாலம் கஷ்டப் பட்டு உழைத்தும் யாதொரு பலனும் அடையாமல், வழியிலுள்ள

இலக்கணச் சுழல்களான பாலே வனங்களைக் கடக்க முடியாமல், இருபது பேர் களைத்து விழுகிறார்கள். பெரும்புலமை இல்லாத சிலர், புராதன இலக்கியங்களில் ஓரளவு பரிசயம் ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். அதிலிருந்து, அவர்கள் இலக்கியச் சுவையைக் கரைகண்டுவிட்டதாகச் சொல்லி விட முடியுமா? நம்முடைய சர்வ கலாசாலைகளிலும் இதர கலாசாலைகளிலும் கல்வி பயின்று வரும் இளங் கனவான்கள், புராதன ரோமானியர்களும் திகைத்துப் போகும்படி லாகவமாகவா லத்தீன் கவிதையைக் கையாளப் போகிறார்கள்? அதுகூட வேண்டாம். தெளிவாயும், குற்றமில்லாமலும் சில வாக்கியங்களையாவது அந்த பாஷையில் எழுத, அவர்களில் எத்தனை பேரால் முடியும்? எனக்குக் கிரேக்கர்களிடம் மிக்க அபிமானம் உண்டு. நம்முடைய கல்வி அதிகாரிகள், அதமபட்சம், கல்வி முறையிலாவது கிரேக்க உதாரணத்தைப் பின்பற்றவேண்டும் என்பதே என் விருப்பம். கிரேக்கர்கள், தங்கள் தாய் மொழியை அவ்வளவு லளிதமாக எவ்வாறு பண்படுத்தினார்கள்? கிரேக்க மொழிக்கு முன்னே இருந்த பாஷைகளை எல்லாம் கற்பதில் அவர்கள் காலங் கழித்தார்களா? சோர்வோ, அயற்சியோ இல்லாமல், புராதன மூல மொழிகளை ஆராய்ந்தார்களா? அல்ல, அல்ல. அவர்கள் கிரேக்க மொழியையே பயின்றார்கள்; தாய் மொழியைக் கற்றார்கள். அதன் மீது அன்பு சொரிந்தார்கள். அதை ஆசையாய் வளர்த்தார்கள்; அலங்கரித்தார்கள்; விரிவுபடுத்தினார்கள். கிரேக்க மொழி, பிற்கால சந்ததிகளுக்கு ஓர் உதாரணமாகவும் இன்பமாவும் விளங்குவதற்குக் காரணம் இதுவே. ஏற்கெனவே இந்த நவீன உலகத்தின் பெரும் பகுதியிலே ஆட்சி செலுத்தும் ஒரு பாஷையைப் பெற்றிருக்கும் நாம், புராதன கிரேக்கர்களிடம் பாடங் கற்றுக் கொள்ளவேண்டும்; மனித வர்க்கத்தின் எதிர்கால முன்னேற்றத்திலேயே ஒரு சிறப்பான ஸ்தானம் வகிக்கப்போகும் நமது பாஷையைக் கற்பதில், சிறிதளவாவது கவனம் செலுத்தவேண்டும்.

ஆங்கிலச் சிறுவர்களுக்கு முதல் முதலில் ஆங்கிலமே கற்றுக் கொடுக்கவேண்டும். அவர்கள் ஆங்கிலத்திலேயே எழுதவும் பேசவும் வேண்டும். கவிதைகளையும் வசனத்தையும் மனப்பாடமாக ஒப்புவிக்க வேண்டும். ஓரளவு ஆங்கில இலக்கிய வரலாற்றையும் கற்க வேண்டும். அதன் பிறப்பு, பலம், சரித்திரம் முதலியவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையான இலக்கிய ஆர்வமும் சிந்தனை சக்தியும் படைத்தவர்களுக்கு மாத்திரமே, புராதன இலக்கிய உலகைத் திறந்து காட்டவேண்டும்.

மற்றொரு விஷயத்தையும் நான் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். கலை, பல தோற்றங்கள் உடையது. பல் வேறு கோணங்களிலிருந்தும் பார்க்கும் போதுதான், சத்தியத்தை நாம் காணமுடியும். நாம் அதைத் தேடுகிறோமா? அதற்குச் சேவை புரிகிறோமா? நம்மால் இயன்றதை யெல்லாம் செய்கிறோமா? எழுத்தாளன் தன்னால் இயன்ற மட்டில் சிறந்த சேவை புரியலாம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அவன் சாக்குப் போக்குச் சொல்லுவதற்கு எதுவும் இல்லை. எப்போதும் அரு

மையாய்க் கிரிக்கட் பந்து ஆடக் கூடிய ஒருவன் ஒரு நாள் தவறிப் போகலாம். யுத்தத்தின் முடிவை நிர்ணயிக்கும் நாளில், சேனைபதிக்குப் பல்வலி உண்டாகலாம்; அல்லது அவருடைய சேனை முரண்டு செய்யலாம்.

ஆனால், எழுத்தாளனின் விஷயம் அப்படி அல்ல. தான் எழுதும் விஷயத்தை நன்ருகத் தயாரித்துக் கொள்ளும் வரையில், அவன் வெளி உலகத்தில் தோன்ற வேண்டிய அவசியமே இல்லை. தன்னிடம் இருக்கும் விஷயத்தை மிகச் சிறப்பான முறையில் வெளியிட, அவனால் என்றும் முடியும். ஒரே ஒரு நாள் உண்டாகும் உற்சாக நேரத்தை மட்டிலும் அவன் சார்ந் திருக்கவேண்டியதில்லை. இருபது நாட்களில் உண்டாகும் உற்சாக நேரங்களையெல்லாம் அவன் ஒன்று குவித்துப் பயன் காணமுடியும். தன்னால் முடிந்த மட்டில் சிறப்பாக அவன் எழுதவில்லையானால், அவன் சாக்குப் போக்குச் சொல்ல வழியே இல்லை. அவனுக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் மகத்தானது; அவனுடைய பொறுப்பும் மகத்தானதே.

"வார்த்தைகள் மாத்திரமே நீடூழி காலம் நிலைத்து நிற்கக் கூடியன" என்று யரோ சொல்லி இருக்கிருர்கள். இது ஓர் அற்புதமான கருத்து என்று நான் எண்ணுகிறேன். மனிதன் தன் வலிமையால் கட்டிமுடித்த கருங்கல் கட்டிடம் மண்ணோடு மண்ணாகிறது. ஆனால், போகிற போக்கிலே அவசர அவசரமாகச் சொல்லிய வார்த்தைகளோ, இன்று புதிதாய்ச் சொன்னவை போல் சக்தியும் ஜீவனும் பெற்றுவிடுகின்றன; சில சமயம், சொன்னபோதைக் காட்டிலுங் கூட அதிகமான வலுவைப் பெற்று, இடையில் கழிந்த மூவாயிரம் வருஷங்களைத் தாண்டிக் குதித்து வந்து, இன்றைய உலகத்துக்கு ஒளி அளிக்கின்றன.

✲

'ஏன் எழுதுகிறேன்?'

ஓர் ஆசிரியன் ஏன் எழுதுகிருன் என்று வாசகர்களுக்குச் சில சமயம் ஆச்சர்யம் உண்டாகும். ஏன் ஆசிரியத் தொழிலில் அவன் புகுந்தான் என்ற ஆச்சர்யத்தை நான் சொல்லவில்லை. தாம் இதோ படித்துக் கொண்டிருக்கும் கட்டுரையை எழுதும்படி ஆசிரியனைத் தூண்டியது என்ன என்று வாசகர் கொள்ளக்கூடிய சந்தேகத்தையே குறிப்பிடுகிறேன். இந்தத் தொழில் ரகஸ்யங்களைச் சொல்லிவிடுவது சரியல்ல. என்ருலும், சொல்கிறேன். இந்தக் கட்டுரை சம்பந்தப் பட்டமட்டில், என்னை எழுதத் தூண்டியது ஒரே சங்கதிதான். என் ஸ்நானத் தொட்டியை அடகு வைத்திருக்கிறேன். அதை மீட்கப் பணம் வேண்டும். அந்தத் தேவைதான், இதை எழுத என்னைத் தூண்டியது.

— எ. எ. மில்னி

உலகத்துக்கு எது க்ஷேமம்?

ஒரு பத்திரிகை நிருபர், பிரபல ஆசிரியர் பெர்னட் ஷாவை ஒரு கேள்வி கேட்டார். "ஜெர்மானிய குலமே அழிந்து தொலைவதுதானே உலகத்துக்கு க்ஷேமம்?"

ஷா அளித்த பதில்: "இருக்கலாம், மனிதகுலமே அழிந்து போவது கூட உலகத்துக்கு க்ஷேமம் தான். ஆனல், அப்படிப்பட்ட புத்திசாலித்தனமான காரியத்தை அவைகள் செய்யுமென்று தோன்றவில்லை. எனவே, இது வீண் கேள்வி."

மழை டாக்டர்

பே. ந. குணசந்திரன்

"ஸார்! நீங்கள் எந்த ஊருக்கு டிக்கட் வாங்குகிறீர்கள்?" என்று கேட்டார் டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டன்.

"உஜ்ஜிக்கு" என்ருர், அருகிலிருந்த நீக்ரோ கனவான்.

"எனக்கும் ஒன்று வாங்குங்கள்" என்று சொல்லிக்கொண்டே, பணத்தை நீக்ரோவிடம் கொடுத்தார் டாக்டர் லிவிங்ஸ்டன்.

இருவரும் டிக்கட்டுகளை வாங்கிக்கொண்டு போய், ரயிலில் ஏறிஞர்கள்.

"நீங்கள் யார், ரொம்ப ஆடம்பரமாய் இருக்கிறீர்களே?" என்ருர் ஆங்கில டாக்டர்.

"நீங்கள் யார், பெட்டியும் கிட்டியும் வைத்துக் கொண்டு, தடபுடலாய் இருக்கிறீர்களே?" என்று கேட்டார் நீக்ரோ கனவான்.

லிவிங்ஸ்டன்: நான் ஓர் ஆங்கில வைத்தியன்.

நீக்ரோ: நான் ஒரு மழை வைத்தியன்.

லிவி: மழை வைத்தியன் என்ருல்.........?

தென்னுப்பிரிக்காவுக்குச் சென்று, ஆராய்ச்சி செய்த பிரபல பாதிரியார் டேவிட் லிவிங்ஸ்டன். கி. பி. 1811 முதல் 1873 வரை வாழ்ந்தவர். அவர் உஜ்ஜி என்னுமிடத்துக்கு ரயில் பிரயாணம் செய்கையில் நடந்தது இந்த ருசிகரமான சம்பாஷணை.

நீக்: நான், என்னுடைய மருந்துகளால் மழையை வரவழைப்பவன்.

லிவி: நீர் என்னென்ன மருந்துகள் வைத்துக் கொண்டிருக்கிறீர்?

நீக்: மழையை வரவழைப்பதற்குத் தேவையான சகல மருந்துகளும் இருக்கின்றன. அவை எப்போதும் என்னிடம் கட்டாயமாய் இருக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில், என்ஞல் உண்டாக்கப்படும் மழைக்காக இந்தத் தேசம் முழுதும், காத்துக்கொண்டிருக்கிறது.

லிவி: உமக்கு மேகங்கள் கீழ்ப்படியும் என்று நம்புகிறீரா? அவை கடவுளுக்கு மாத்திரம் தான் படியும் என்று நான் நினைக்கிறேன்.

நீக்: நாம் இருவருமே அப்படித்தான் நினைக்கிரேம். கடவுள் மழையை உண்டாக்குகிருர். ஆனல், நான் என் மருந்துகளைக் கொண்டு—அதாவது உயிர்ப் பிராணிகளைப் பலியிட்டுக் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தி—கடவுளைத் தொழுவதால், மழை வருகிறது. நான் ஷாக்குயேனியாவிலிருந்த பொழுது, என்னுடைய அறிவின் திறமையால் பல வருஷங்களாகப்பலமிருகங்களைப்பலியிட்டேன்; அதன்மேல் கடவுள் கொடுத்த மழையால், பயிர்கள் நன்ருய் விளைந்தன. அவைகளைப் புசித்ததனல், அந்நாட்டுப் பெண்கள், வளமும் வசீகரமும் பெற்ருர்கள். அதெல்லாம் என் காரியம்

தான். அவர்களையே கேளுங்கள்; நான் சொன்னது போலவே, அவர்களும் சொல்லுவார்கள்.

லிவி: நம்மைக் காப்பாற்றும் கடவுளால் தான், இதெல்லாம் நடக்கிறது; உம்முடைய மருந்துகளால் அல்ல!

நீக்: அது சரியல்ல. கடவுள் நம்மை வெவ்வேறு விதமாகப் படைத்திருக்கிறார். கறுப்பு மனிதர்களை முதலில் உண்டாக்கினார்; வெள்ளை மனிதர்களைப்போல், எங்களை அவர் நேசிக்கவில்லை. உங்களை அழகாக உற்பத்தி செய்தார். துப்பாக்கிகள், துப்பாக்கி மருந்து, குதிரைகள், பல வகையான வண்டிகள், இன்னும் எவ்வளவோ பொருள்களை உங்களுக்குக் கொடுத்தார். எங்களுக்குக் கறுப்புத் தோலையும், மாடுகளையும், மழை உண்டாக்கும் வேலையையும் மாத்திரம் கொடுத்திருக்கிறார்; ஆனால், உங்களைப் போல் உள்ளங்களைக் கொடுக்கவில்லை. நாங்கள் எங்களுக்குள்ளேயே ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாருக்கும் தீங்கு செய்து கொள்கிறோம். கடவுள், உங்களுக்குத் தெரியாத ஒன்றை எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்; அது தான், மழை மருந்து. நாங்கள் படிப்பில்லாதவர்களாய் இருந்தாலும், உங்களிடமுள்ள பொருள்களை அசட்டை செய்ய மாட்டோம். உங்கள் புத்தகங்களைப் பற்றி எங்களால் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும், அவைகளை நாங்கள் இகழ்வதில்லை. எங்கள் அறிவைத்தெரிந்து கொள்ள நீங்கள் திறமை யற்றவர்களாய் இருந்தாலும், அதை நீங்கள் நிந்திக்கக்கூடாது.

லிவி: என்னால் தெரிந்து கொள்ள முடியாததை, நான் இகழப் போவதில்லை. மருந்துகள் மழையை ஆட்சி செய்கின்றன என்று நீங்கள் தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்; இது என் அபிப்பிராயம்.

நீக்: அறிவில்லாத ஜனங்களைப் போல நீங்களும் பேசலாமா? அவர்கள் தான் இப்படிப் பேசுவார்கள். நாங்கள் பிறப்பதற்கு முன்னேயே, எங்களுடைய முன்னோர்கள், மந்திரத்தின் மூலமாய் மழையை வரவழைத்து வந்திருக்கிறார்கள்; அவர்களைத்தான் நாங்களும் பின்பற்றினோம். நீங்கள் தானியங்களைக் கொண்டுவரவும் தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சவும், உங்களுடைய தேவதைகள் உங்களுக்கு உதவி செய்கின்றன; அதைப்போல், நாங்களும் காலத்தைத் தள்ள முடியுமா? எங்களுக்கு மழை இல்லா விட்டால், மாடுகளுக்குப் புல் வெளிகள் இருக்கமாட்டா; பசுக்கள் பால் கொடுக்கமாட்டா; எங்கள் குழந்தைகள் இளைத்துப்போய் இறந்து விடும்; எங்கள் மனைவிமார், மழை மருந்துகளை வைத்துக் கொண்டிருக்கும் கூட்டத்தாரிடம் ஓடிப் போய் விடுவார்கள். எங்கள் கூட்டம் முழுதும் இப்படியாகச் சிதறி, கடைசியில் எங்களுடைய வம்சமே அற்றுப்போய்விடும்.

லிவி: மழையின் அவசியத்தைப் பற்றி நீர் சொன்னதையெல்லாம், ஒப்புக்கொள்ளுகிறேன்; ஆனால், மேகங்களை உம்முடைய மருந்துகளால், நீர் மாற்ற முடியாது. (மேகங்களை நோக்கியபடி) அந்த மேகங்கள் நேராக வரும் வரை பார்த்துக் கொண்டிரும்; பிறகு, உம்முடைய மருந்துகளை உபயோகித்து, கடவுளின் பொறுப்பை நீர் ஏற்றுக்கொள்ளும் பார்க்கலாம்.

நீக்: நான் என்னுடைய மருந்துகளை உபயோகப் படுத்துகி

றேன்; நீங்கள் உங்களுடைய மருந்துகளை உபயோகிக்கிறீர்கள். நாம் இருவரும் எவரையும் ஏமாற்றும் வைத்தியர்களல்ல. நீங்கள் ஒரு நோயாளிக்கு மருந்து கொடுக்கிறீர்கள். சில சமயங்களில் கடவுள், உங்களுடைய மருந்தினால் அவன் குணப்படும்படி செய்கிறார்; சில சமயங்களில் அப்படிச் செய்வதில்லை— அவன் இறந்து விடுகிறான். அவன் காப்பாற்றப் பட்டால், கடவுளுடைய பொறுப்பை, நீங்கள் ஏற்றுக்கொள்ளுகிறீர்கள். நானும் அதையேதான் செய்கிறேன். சிலசமயங்களில் கடவுள் நமக்கு மழையைக் கொடுக்கிறார்; சில சமயங்களில் கொடுப்பதில்லை. அவர் கொடுத்தால், அவர் அருளின் பொறுப்பை, நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். ஒரு நோயாளி இறந்தால், நீங்கள் உங்களுடைய மருந்தின் மேலுள்ள நம்பிக்கையை இழக்கமாட்டீர்கள்; நானும், இதைப்போலவேதான் மழை வரத் தவறினால், என்னுடைய நம்பிக்கையை இழக்க மாட்டேன். நீங்கள் என்னுடைய மருந்துகளை விட்டு விடும்படி விரும்பினீர்களானால், நீங்களும் உங்களுடைய மருந்துகளை விட்டு விடுகிறீர்களா?

லிவி: நான் என் அருகாமையிலுள்ள ஜீவப் பிராணிகளுக்கே மருந்து கொடுக்கிறேன். நோய் குணமாகா விட்டாலும், அந்த நோயின் குணகுணங்களை ஆராய்கிறேன். நீரோ உம்முடைய மருந்துகள் போய்சேர முடியாத, எவ்வளவோ தொலைவிலுள்ள 'மேகங்களை வசியம் செய்கிறேன்' என்று நடிக்கிறீரே? சாதாரணமாக, மேகங்கள் ஒரு பக்கம் படுத்துக் கொண்டிருக்கும்; உம்முடைய (மந்திரத்தின்) புகை மற்றொரு பக்கம் போகிறது. கடவுள் ஒருவர்தான் மேகங்களுக்கு உத்தரவு கொடுக்கமுடியும். பொறுமையாய் இரும். கடவுள் உம்முடைய மருந்துகளின் உதவியின்றியே, நமக்கு மழையைக் கொடுப்பார்.

நீக்: மஹாலா-மா-காபா-ஆ-ஆ! இன்று வரை வெள்ளைக்காரர்கள், அபார அறிவுடையோர் என்றே நான் நினைத்துக் கொண்டிருந்தேன். யாராவது பசியைச் சோதனைசெய்யவேண்டுமென்று நினைப்பார்களா? அப்படியானால், சாவு சந்தோஷமானதா?

லிவி: நீர் ஓர் இடத்தில் மழையைப் பெய்யச் செய்து, மற்றோரிடத்தில் இல்லாமலிருக்கச் செய்வீரா?

நீக்: அதைப்போல் செய்ய, எனக்கு மனம் வராது. தேசம் முழுதும் பச்சையாய் இருக்க வேண்டும்; எல்லா மக்களும் சந்தோஷப்பட வேண்டும்; பெண்கள் களிப்போடு கைகளைத் தட்டிக்கொண்டே, எனக்கு விலையுயர்ந்த பொருள்களை, நன்கொடை செலுத்திக் குதூகலிக்கவேண்டும்; நான் ஆனந்த மடைய வேண்டும்.

லிவி: நீர் அவர்களையும், உம்மையும் ஏமாற்றிக் கொள்ளுகிறீரென்று தெரிகிறது.

நீக்: சரி, இப்பொழுது நாம் இருவருமே அந்த இனத்தின் — ஏமாற்றும் ஜாதியில் — ஒரு ஜோடியாகி விட்டோம்.

லிவி: போதும்! நான் பத்திரிகை படிக்கவேண்டும்.

நீக்: நல்லது! எனக்கும் தூக்கம் வருகிறது.

இந்திரா

மாஸ்தி வேங்கடேச ஐயங்கார், எம். ஏ.

நாராயண மூர்த்திக்கு வாழ்க்கையில் சுகமில்லை. வீட்டிலுமில்லை, வெளியிலுமில்லை. இந்நாட்களில் அநேக காரணங்களினால் அவர் துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார். அன்று கச்சேரியிலிருந்து திரும்பியதும், இரண்டு கவளம் அன்னத்தை வாயில் போட்டுக் கொண்டு, படுக்கை யறையில் போய் உட்கார்ந்தார். மனைவி வீட்டு வேலைகளில் முனைந்திருந்தாள். "எல்லா வேலைகளையுந் தனியே செய்கிறாள். பாவம், உதவி செய்ய ஒருவருமில்லை!" என்று சிந்திக்கலானார். பின்னர், தனக்குள்ளேயே, "இந்திரா! அவளும் எப்பொழுதும் சிரித்த முகத்துடனேயே இருப்பாள். ஆனால், அவளுக்கு இத்தனை குழந்தை குட்டிகளைப் பராமரிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. குழந்தைகள்! ஐயோ, குழந்தைகளே! குழந்தை யில்லாதவர்கள், தங்களுக்குச் சந்தான சுகமில்லையே என்று மிகவும் வருந்துகிறார்கள். ஆ! அந்தப் பையன்! வீட்டில் மெத்தையின் மீது படுத்துறங்கும் இந்தக் குழந்தைகளைப் போல், ஆஸ்பத்திரியில் கிடக்கும் அவனும் என்னுடைய பையன் தானே? ஆனால், சாவித்திரி இந்தக் குழந்தைகளைப் போல் அவனையும் மதிக்கிறாளா? இந்திராவும் இப்படித்தான் செய்திருப்பாளோ? யார் கண்டது?" என்று சொல்லிக் கொண்டார்.

இவ்விதம் யோசித்துக் கொண்டிருக்கும் போதே, அவருக்குத் தூக்கம் வருவது போல் தோன்றியது. துக்கம் நிரம்பிய உள்ளம், களைப்புற்ற உடம்பு, இவ்விரண்டுக்கும் ஓய்வு வேண்டியிருந்தது. இங்ஙனம் நினைத்துக் கொண்டிருக்கையில், அங்கே இந்திரா வந்தாள்.

ஆம், இந்திரா வந்து விட்டாள். அவள் எப்பேர்ப்பட்டவள் என்பதை நீங்கள் அறியும் வரைக்கும், இதனுடைய முழு அர்த்தத்தையும் உங்களால் புரிந்து கொள்ள முடியாது. இந்திரா மிக்க அழகானவள். நீண்ட முகத்திலுள்ள அவளது அழகிய நெற்றி, பால் போல் வெண்மை நிறமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அவளுடைய முகத் தாமரையில் கருவண்டுகள் சிக்கிக் கொண்டு, தப்ப வழியில்லாது, தவிப்பனபோல் தோன்றின. "இதோ விட்டுவிட்டேன்! ஐயோ! மாட்டேன்!" என்று அக் கருவண்டுகளுக்குக் கண்ணிமைகள் ஆசை காட்டிக் கொண்டிருந்தன. நீண்ட அழகிய மூக்கு, பாதி மலர்ந்த ரோஜா

கன்னடத்தில் அற்புதமான கதை எழுதுபவர் என்று கீர்த்தி வாய்ந்தவர் **ஸ்ரீ ஐயங்கார்.** மாற்றாந் தாயின் கொடுமையைப்பற்றி எத்தனையோ கதைகளை நாம் படித்திருக்கிறோம். அதே பொருள் தான் இங்கே எவ்வளவு புதுமையான கற்பனை பெற்றிருக்கிறது. இது சு. குருசாமியின் மொழி பெயர்ப்பு,

வைப்போன்ற உதடுகள், வெண்மையான, மெல்லிய அரிசி போன்ற பற்கள், நெற்றியில் இரண்டு புருவங்களுக்கும் மத்தியில் சற்று உயரத்தில் சிறிய அழகான குங்குமப் பொட்டு......... உண்மையிலேயே அவளுடைய முகத்தில் அழகு பொங்கியது. பார்ப்பதற்கு அவள் சாதாரணப் பெண்ணாகத்தா னிருந்தாள். ஆனால், எத்தகைய சுந்தரி!

அவளைப் பார்த்தாலே போதும். மனதில் சந்தோஷம் ஏற்படும்; எத்தகைய துக்கமும் மறைந்து விடும். நம்முடைய கஷ்டங்களையும், துக்கங்களையும் போக்க வல்லவர்களின் வரவினால், நமக்குச் சந்தோஷம் ஏற்படுவதில்லை. ஏனென்றால், அவர்கள் நம்மவர்கள் தானே? ஆகையினால், இந்திராவைப் பார்த்துங் கூட, நாராயணமூர்த்தி பேசாம லிருந்தார்.

இந்திரா அவர் பக்கத்தில் வந்து, அவருடைய முகத்தைத் தூக்கிப் பிடித்துச் சிரித்துக் கொண்டே, "அதற்குள்ளே தூக்கம் வந்து விட்டதா? ஏன், பேச மாட்டீர்களா? சரி, அதற்கு இதுதான் மருந்து" என்று சொல்லி, அவருடைய மடியில் உட்கார்ந்தாள்.

எதில் அதிக வித்தியாச மிருக்கிறது, தங்கத்துக்கும் பித்தளைக்குமா அல்லது அன்புக்கும் அன்பின்மைக்குமா? பித்தளையிலிருந்து தங்கம் உண்டாகாது. ஆனால், அன்போ சத்துருவை மித்திரனாகவும், துக்கத்தைச் சந்தோஷமாகவும் மாற்ற வல்லது.

நாராயணமூர்த்தியின் மடிமீது இந்திரா உட்கார்ந்ததும், அவர் மனதிலிருந்த துயரம், துக்கம், கஷ்டம் எல்லாம் நீங்கிவிட்டன. அவளை மார்போடணைத்து

"இந்திரா!" என்றார் நாராயணமூர்த்தி.

"நான் உங்களோடு பேசிய போது, நீங்கள் பேசவில்லை. ஆகையால், நானும் பேசமாட்டேன். 'இந்திரா!' 'இந்திரா!' என்று நீங்கள் நூறு தடவை கூப்பிட்டாலும் சரி, நான் வாயைத் திறக்கவே மாட்டேன்."

"இந்திரா!"

"நான் வாயைத் திறக்கமாட்டேன் என்றுதான் சொல்லி விட்டேனே!"

"அப்படியானால், வாயைத் திறவாமல்தான் இத்தனை வார்த்தைகளும் பேசிக் கொண்டிருக்கிறாயா?"

"இன்னொரு முறை நீங்கள் என்னைப் பெயர் சொல்லி அழைக்கட்டும் என்றுதான் அப்படிச் சொன்னேன்."

"எதற்காக?"

"ஏனென்றால், நீங்கள் என் பெயரைச் சொல்லி யழைக்கும் போதெல்லாம், எனக்கு அளவு கடந்த இன்பம் உண்டாகிறது."

"உண்மையாகவா?"

"உண்மையில்லாமல் என்ன?"

நாராயணமூர்த்தியின் தோளின்மீது இந்திரா தன்னுடைய முகத்தை வைத்தாள். தனது கழுத்தின் மீது அவளுடைய சுவாசத்தின் வெப்பத்தை நாராயணமூர்த்தி உணர்ந்து, திரும்பிப் பார்த்தார். அழகிய, மனோகரமான முகம், கண்களில் எல்லையற்ற அன்பு, கரையற்ற காதல்! அவர் இந்திராவைத் தம் மார்போடு அணைத்துக் கொண்டார்.

"நான் இந்திரா என்று அழைக்கும்போது உனக்கு ஏன் இவ்வளவு ஆனந்தம் உண்டாகிறது?"

"எனக்குத் தெரியாது."

"அதெப்படித் தெரியாமலிருக்கும். உண்மையைச் சொல்."

"நீங்கள் கற்றுக் கொடுங்கள், நான் சொல்கிறேன்."

"சொல்லிக் கொடுத்தால், சொல்வதற்கு உன்னைப் போன்ற புத்திசாலியா வேண்டும்?"

"நான் வீணை வாசிப்பது உங்களுக்குப் பிடிக்கிறதா?"

"அதைக் கேட்டுத்தான் வெகு நாளாய் விட்டதே. உண்மையில் அதைக் கேட்பதில் எனக்கு அபார ஆனந்தம்."

"ஏன்?"

"அதனுடைய ஸ்வரம் மதுரமாயிருப்பதனால்."

"என் வீணையின் ஸ்வரமா? உம். நீங்கள் இந்திரா என்று சொல்லும்போது, என்னுடைய உள்ளத்திலும் ஒரு வீணை ஒலி கேட்கிறது. அதனுடைய மதுரமான கானம் எனக்கு மட்டுந்தான் கேட்கும். அதனாலேயே, நான் இன்பமடைகிறேன்."

நாராயணமூர்த்தி மௌனமாயிருந்தார். இந்திராவும் மௌனமாயிருந்தாள். காதலர்கள் சந்திக்கும் பொழுது, அவர்களுடைய சம்பாஷணையில் எவ்வளவு இன்பமிருக்கிறதோ, அவ்வளவு இன்பம் அவர்களுடைய மௌனத்திலுமிருக்கிறது. சிறிது நேரத்துக்குப் பின், நாராயணமூர்த்தி, "இந்திரா!" என்றார்.

"என்ன?"

"நீ என்னை எவ்வளவு தூரம் காதலிக்கிறாய்?"

தன் பத்தினி தன்னை மிகவுங் காதலிப்பதாகச் சொல்ல வேண்டுமென்று நாராயணமூர்த்தி நினைத்தார். எந்தக் கணவன் தான் அங்ஙனம் விரும்புவதில்லை?

"நான் உங்களைச் சிறிதேனுங் காதலிக்கவில்லை!"

"காதலிக்கவில்லையா?...... ஏன்?......"—நாராயணமூர்த்திக்குச் சிறிது வருத்தம். அவர் விரும்பிய விதம் அவருக்குப் பதில் கிடைக்கவில்லை.

"எனக்கு உங்களிடம் எள்ளளவும் அன்பு கிடையாது. ஆனால், நீங்கள் என்னைப் பைத்தியக்காரி ஆக்கி விட்டீர்கள்!" என்று சிரித்துக் கொண்டே, இந்திரா தன்னுடைய தலையை அவருடைய தலையின்மீது வைத்தாள். நாராயணமூர்த்தி சந்தோஷமடைந்தார். "இந்திராவுக்கு என் மேல் எத்தகைய அன்பு! இவள் எனக்காகத் தன் உயிரையுங் கொடுப்பதற்குத் தயாராயிருக்கிறாள்!" என்று நினைத்துத் தனக்குள்ளேயே, "இந்திரா—இந்திரா!" என்று அன்பு கனிந்த கோமளமான குரலில் மெதுவாய்க் கூறிக்கொண்டார்.

'ஓம்' என்ற மொழிக்கு வித்வான்கள் பல விதமான அர்த்தங்கள் சொல்கிறார்கள். அதேபோல் நாராயணமூர்த்தியின் நாவினின்றும் வந்த 'இந்திரா' என்ற சப்தத்தில் எல்லையற்ற அன்பு, அளவுகடந்த ஆசை, முடிவற்ற மோகம் இத்தனையும் தென்பட்டன.

மனைவி கணவனுடைய தோளின்மீது தலையை வைத்து, அவர் பக்கம் நோக்கலானாள். நாராயணமூர்த்தி அவளைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டார். எவ்வளவு நேரம் அவர்கள் இப்படி உட்கார்ந்திருந்தார்களோ தெரியாது.

அந்தச் சுகத்தைச் சிறிது நேரம் அனுபவித்த பின்பு, நாராயணமூர்த்தி பழைய விஷயங்களைப் பற்றி ஆலோசிக்க ஆரம்பித்தார். அதற்கு முன்னால் நடந்தனவெல்லாம், நாராயண மூர்த்திக்கு மறந்து போய்விட்டன. விஷயம் மறந்துவிட்ட போதிலும், அவருடைய உள்ளங் துடிக்க ஆரம்பித்தது. அச்சமயம் இந்திரா அவருடனிருந்தாள். ஆனால், அதற்கு முன்னால், அங்கே வருவதற்கு முன்னால்............ யோசிக்க யோசிக்கக் கொஞ்சங் கொஞ்சமாய், எல்லாம் ஞாபகம் வர ஆரம்பித்தது. ஆனால், ஒன்றுந் தெளிவாயில்லை. சிறிது நேரத்தில் விஷயம் மறந்து விட்டது போல் தோன்றிற்று. கொஞ்ச நேரத்துக்குப்பின் திடீரென்று எல்லாம் ஞாபகம் வந்தது. 'இதற்கு முன்னால்! ஏ பகவான்! ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் அந்தப் பையன்... வீட்டிலிருக்கும் இச்சிறு குழந்தைகள்......இவைகளின் தாய்... ...அந்தப் பையனுடைய தாயார்' ......அதற்கப்புறம் ஒன்றும் ஞாபகம் வரவில்லை. "இந்திரா!" என்று அவர் கூப்பிட்டார்.

"ஏன்?"

"இந்திரா, நீ எப்பொழுது வந்தாய்?"

"அரைமணி ஆகியிருக்கலாம்."

"இந்த அறைக்குள் வந்தா அரைமணியிருக்கும்?"

"ஆம்!"

"நீ எங்கேயிருந்து வருகிறாய்?"

"இதென்ன? ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?"

"நீ எங்கே சென்றிருந்தாய்?"

"நான் எங்கே சென்றிருந்தேனா? எங்கேயும் செல்லவில்லையே!"

"அப்படியானால் உன்னைப் பார்த்து வெகுநாளானது போல் ஏன் தோன்றுகிறது?"

"வேடிக்கைதான்!"

"இரு. கொஞ்சங் கொஞ்சம் ஞாபகம் வருகிறது. ஆம், எல்லாம் ஞாபகம் வந்துவிட்டது" என்று சொல்லி, நாராயணமூர்த்தி உடம்பை ஒரு முறை குலுக்கினார். இந்திராவினுடைய தேகத்தின்மீது கையை வைத்துப் பார்த்து, "இந்திரா, உண்மையிலேயே நீ இங்கேஇருக்கிறாயா?" என்று கேட்டார்.

"நன்றாயிருக்கிறது! என்ன பேசுகிறீர்கள் நீங்கள்? நான் இங்கே இல்லாவிட்டால், நீங்கள் யாருடன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?"

"அப்படியானால் எனக்கு ஞாபகம் வரும் விஷயங்களை எல்லாம் சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள்."

"நம்முடைய விவாகம், அதற்குப் பின் நாம் இல்லறம் நடத்தியது, தாய் தந்தையருடன் வசித்தது, எல்லாம் ஞாபகமிருக்கிறதா?"

"ஆம்."

"அதன்பின், முதலில் தாயும், பின்னால் தந்தையும் இவ்வுலக

வாழ்க்கையி னின்றும் நீங்கியது.........தந்தையின் அந்திய காலத்தில் தன் பக்கத்தில் வந்து உன்னை உட்காரச் சொன்னது.........''

"ஆம், எல்லாம் ஞாபகமிருக்கிறது.''

"'குழந்தையை நன்ருய்க் கவனித்துக் கொள்ள வேண்டும்' என்று நம்மிருவரையும் அழைத்து, அவர் கடைசியாகக் கூறினர் அல்லவா?''

"ஆம்.''

"நீ மிகுந்த அன்புடன் அவனை வளர்த்தாய். நானவது சிற்சில சமயங்களில் அவனைக் கண்டித்திருக்கிறேன். ஆனல், நீ ஒரு போதும் அவனைக் கண்டித்ததுமில்லை, அடித்ததுமில்லை.''

"கண்டித்ததில் என்ன குற்றம்? அவனுடைய நன்மைக்காகத்தானே செய்தீர்கள்?''

"அதற்காகச் சொல்லவில்லை. நீ அவனை எவ்வளவு அன்புடன் வளர்த்தாய் என்பதற்காகச் சொல்கிறேன். இப்படியிருக்கையில், ஒருநாள் நீ காய்ச்சலாய்ப் படுத்தாய்.''

"ஆம்.''

"நீ சுகமடைவதற்காக, நான் வைத்தியம் பார்த்தேன். இந்திரா, ஜுரத்தின் வேகத்தினல் நீ எப்படி நாளுக்கு நாள் இளைத்தாயோ, அதேபோல் நானும் நாளுக்கு நாள் உள்ளமுடைந்தேன். ஒருநாள்......அது நிஜமா, கனவா, இந்திரா?''

"எது?"

நாராயணமூர்த்தி இந்திராவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, "ஒருநாள் நீ எங்கேயோ......சென்று.........விட்டாய்'' என்றார்.

"இதென்ன, உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?''

"குழந்தையைக் கவனிப்பவர் ஒருவரு மில்லை. அநேக நாட்கள் நான் மிகவுங் கஷ்டப்பட்டேன். இந்திரா, நான் எத்தனை நாள் இரவு பலாக அழுது கொண்டிருந்திருக்கிறேன், தெரியுமா? நான் அழுத அழுகைக்கும், துடித்த துடிப்புக்கும் அளவே கிடையாது.''

"ஐயோ!''

"ஒன்றும் செய்யத் தோன்ருமல், பைத்தியம் பிடித்தவன் போல் உட்கார்ந்திருப்பேன்.''

சிறிது நேரம் நாராயணமூர்த்தி மௌனமாய் உட்கார்ந்திருந்தார். இப்பொழுதும் அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது போலவே இருந்தது. அவர் யோசிக்கலானர்: "இந்திரா இப்பொழுது பக்கத்தில் உட்கார்ந்திருக்கிருள். நான் அவளுடன் பேசிக் கொண்டிருக்கிறேன். இதெல்லாம் சரிதான். ஆனல், அன்று அவள் போய்விட்டாள். எங்கேயோ போய்விட்டாள் அல்லவா? எங்கே போயிருந்தாள்? அன்று எங்கே போய்விட்டாள்?''

'அவள் போய் விட்டாள்', 'அவள் போய் விட்டாள்' என்று அவருடைய மனம் மீண்டும், மீண்டும் கூறியது. ஆனல், எங்கே சென்றிருந்தாள்? என்ன நடந்தது? இந்தக் கேள்விகளுக்கு எந்தவிதமான பதிலுங் கிடைக்கவில்லை.

பாதித் தூக்கத்தில், மனிதனுடைய மனது அநேக இடங்களில் அலைகிறது. அதே போல்,

நாராயணமூர்த்தியின் மனதும் அலைந்தது. பாதித் தூக்கத்தில் மனதின் ஒரு பகுதி விழித்திருக்கிறது, ஒரு பகுதி தூங்குகிறது. இந்திரியங்களின் மூலமாக நாம் தினந்தோறும் அறியும் விஷயங்களெல்லாம், அவைகளுக்குரிய பாகங்களில் சேகரமாகியிருக்கின்றன. அரைத் தூக்கத்தில், அப்பொழுது விழித்திருக்கும் பாகங்களின் விஷயங்கள் சுலபமாக ஞாபகத்துக்கு வருகின்றன. ஆனால், தூங்கும் பாகங்களின் விஷயங்கள் அப்படி ஞாபகத்துக்கு வருவதில்லை. நாராயணமூர்த்தியும் அப்பொழுது அந்த நிலைமையில் தான் இருந்தார். வெகு நாளையப் பழக்கத்தினால் ஆழமாய்ப் பதிந்திருந்தவை சுலபமாய் ஞாபகம் வந்துவிட்டன. ஆனால், துக்க சம்பவத்தின் நினைவு ஆழமாய்ப் பதியாததால், அது ஞாபகம் வரவில்லை. இந்திராவுக்கு என்ன நேர்ந்தது? அது அவருக்குத் தெரியவில்லை. ஒரு துக்ககரமான அனுபவம் மட்டுமே அவருக்கு ஞாபகமிருந்தது.

"அதற்கப்புறம் ஒரு தடவை மத்தியான நேரம் பையனுக்குச் சாப்பாடு இல்லை. ஏனென்றால், வீட்டுக் காரியங்களை மேல் பார்ப்பதற்கு ஒருவருங் கிடையாது. நான் கச்சேரியிலிருந்து திரும்பி வந்தபோது, அவன் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். எனக்குத் துக்கம் சகிக்க முடியவில்லை."

"உம்!"

"அவனைக் கவனிப்பதற்கு ஒருவருமில்லை. வீட்டில் யாராவது இருந்தால், கவனித்துக் கொள்வார்கள். ஆனால், இப்பொழுது அதற்கு என்ன செய்வது? ஒரு நாள் சித்தப்பா என்னிடம் வந்து, 'கலியாண வயதடைந்த ஒரு பெண்ணிருக்கிறது, நீ விவாகம் செய்துகொள்' என்று கூறினார். ஏனோ எனக்குக் கலியாணம் செய்து கொள்ளவே இஷ்டமில்லை. ஆனால், சித்தப்பா அடிக்கடி வந்து பெண் நல்லவள், அழகானவள் என்றெல்லாம் சொல்லித் தொந்தரவு செய்ய ஆரம்பித்தார். பெண்ணைக் காண்பித்தார்கள். அவள்தான் இந்த சாவித்திரி. அவள் வெகு அழகாய்த்தான் இருந்தாள். ஆனால், அவளைக் கலியாணம் செய்து கொள்ள, எனக்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை."

"உம்!"

"என்ன செய்வதென்று தெரியவில்லை. ஏகாந்த வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு ஏற்படடது. நீ......நீயும் இல்லை. அந்தச் சமயத்தில் சித்தப்பா வந்து உனக்காக வேண்டாம்; ஆனால் பையனைப் பார். அவனைக் கவனிப்பதற்கு ஒருவருமில்லையே? நீ அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டால், அவள் அவனைப் பார்த்துக்கொள்வாள்; அத்துடன் உன்னையும் கவனித்துக் கொள்வாள்" என்று சொன்னார்.

"சரி!"

"நான் சம்மதித்தேன்!"

"உம்!"

"சாவித்திரி வீட்டுக்கு வந்தாள். சில தினங்கள் வரைக்கும் அவள் உன்னைப் போலவே தோன்றினாள். ஆனால், அதற்கப்புறம் எல்லாம் மாறிவிட்டது. அவளுக்குக் குழந்தை பிறந்தவுடன், பையனைக் கொஞ்சமேனுங் கவனிக்கவில்லை. இது சம்பந்தமாக, நான் அவளுக்குக் கொஞ்சம் புத்திமதியும் சொன்

னேன். அவளுக்குக் கோபந் தான் வந்தது. அன்றிருந்து எங்கள் வாழ்க்கையின் அமைதி தொலைந்து விட்டது.''

இந்திரா பேசாமலிருந்தாள். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது போல், நாராயண மூர்த்திக்குத் தோன்றியது.

''அந்தப் பையனையும், அவளுடைய குழந்தையையும் நான் சமமாகவே பாவித்தேன். ஆனல், அவள் வேற்றுமையாக நினைக்க ஆரம்பித்தாள். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஏனென்றால், சாதம் போடுபவளும், சதா வீட்டில் இருப்பவளும் அவள். நான் என்ன செய்ய முடியும்? அவள் என்ன செய்தாலும், ஒன்றும் சொல்லாமல் பேசாதிருந்தேன்.''

இந்திரா மௌனமாயிருந்தாள்.

''அவனுடைய நன்மைக்காக நான் விவாகம் செய்து கொண்டேன். ஆனல், அவனுக்கு அதனால் சுகங் கிடைக்கவில்லை. எப்படியாவது பெரியவனாகி விட்டால், அப்புறம் எல்லாம் சரியாய் விடுமென்று நான் நினைத்தேன். ஆனல், அதுவுங்கூட முடியவில்லை.''

இந்திரா மௌனம் சாதித்தாள்.

''நேற்று முன் தினம் அவன் எங்கேயிருந்தோ காய்ச்சலுடன் வந்து சேர்ந்தான். நான் டாக்டரை அழைத்து வந்தேன். அது 'டைபாயிட்' என்று அவர் சொன்னர். அவனை வீட்டில் வைத்திருப்பதால், மற்றவர்களுக்கும் அந்நோய் பரவலாம். ஆஸ்பத்திரிக்கு அனுப்பினலோ, அவனைக் கவனிப்பதற்கு ஒருவருமில்லை. நான் அவனைக் கவனிக்கட்டுமா? இந்தக் குழந்தைகளைக் கவனிக்கட்டுமா? இங்ஙனம் என் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு சாவித்திரி கூறினள்.''

''சரி!''

''அவனை ஆஸ்பத்திரியில் விட்டு வந்தேன். சித்தப்பா அவனுடனிருக்கிறர். என்னைச் சாவித்திரி அங்கே இருக்க விடமாட்டேன் என்கிறள். நான் அங்கே இருக்கக் கூடாதாம். அவளுடைய நெஞ்சு மிகக் கடினமானது. அது கல்தானே என்னவோ!''

இந்திரா அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

''இன்று சாயந்திரம் நான் அவனைப் பார்த்துவிட்டு வந்தேன். பையன் துடியாய்த் துடிக்கிறன். அதை என்னல் பார்த்துக் கொண்டிருக்கச் சகிக்கவில்லை. பாவம், 'அம்மா! அம்மா!' என்று அவன் அரற்றிக் கொண்டிருக்கிறன். அம்மா எங்கே? ஐயோ, அவன் எப்படித் துடியாய்த் துடிக்கிறன்?''

கிராமவாசிகள் யுக்தி

பிரீஸ்லாந்து என்ற தேசத்தைச் சேர்ந்த ஒரு கிராம வாசிகள், தங்கள் ஊர்த் தபால்காரப் பெண்ணை விரட்டிவிட விரும்பினர்கள்.

அதன் மேல், உள்ளூரிலிருந்தே ஒருவருக்கொருவர் ஏராளமான செங்கல்லுகளைப் பார்ஸல் அனுப்பினர்கள்.

அந்தப் பார்ஸல் சுமையைத் தாங்க முடியாத தபால்காரி, தன் உத்தியோகத்தை ராஜீநாமாச் செய்துவிட்டுக் கிளம்பினள்!

"அவன் இப்பொழுது நன்ருயிருக்கிருன். நீங்கள் கவலைப்படவேண்டாம்" என்று இந்திரா கூறினுள்.

"என்னைச் சமாதானப் படுத்துவதற்குத் தான் இப்படிச் சொல்கிருய். சாயந்திரம் அப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவன், இவ்வளவு சீக்கிரம் எப்படிச் சௌகரியம் அடைந்து விடுவான்? நல்ல வேளை, நீ வந்தது மிகவும் நல்லதாய்ப் போயிற்று. நீ அவனைக் கவனித்துக் கொள்வா யல்லவா?"

"அவசியம்!"

"எனக்கு இனிக் கொஞ்சமேனும் கவலையில்லை. இதோ பார், உன்னைக் கண்டதும் என் துக்கம் எல்லாம் எங்கோ பறந்து விட்டது" என்று சொல்லி, நாராயணமூர்த்தி இந்திராவை மார்போடு அணைத்துக் கொண்டார். அவர் மீண்டும், "பையனுக்குக் குணமாகி விட்டதா?" என்று கேட்டார்.

"ஆம், குணமடைந்து விட்டான்."

"நீ அவனைப் பார்த்தாயா?"

"ஆம், நீங்கள் அவனைப் பார்க்க விரும்புகிறீர்களா?"

"ஆம், எங்கே?"

"அதோ, பாருங்கள்!" என்று சொல்லி, வாசலை நோக்கி, இந்திரா தன் விரலினுல் சுட்டிக் காட்டினுள். நாராயண மூர்த்தி அந்தத் திசையில் நோக்கினுர். கோபால் நின்று கொண்டிருந்தான். அவன் பூரண சுக மடைந்திருந்தான். நாராயணமூர்த்தி அடைந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. மிகுந்த ஆனந்தத்துடன் இந்திராவைப் பார்ப்பதற்காகத் திரும்பினுர். அவளுடைய உருவம் மறைந்து கொண் டிருந்தது. "இந்திரா!" என்று கூறி, அவளைப் பிடிப்பதற்கு முயற்சித்தார். மலைச் சிகரத்தின்மீது நின்று கொண்டு மேகங்களைப் பிடிப்பதற்கு முயற்சிக்கும் சிறுவனுக்கு எங்ஙனம் அவை அகப்படுவதில்லையோ, அதேபோல் இந்திராவும் நாராயணமூர்த்தியின் பிடிக்கு அகப்படவில்லை.

"இந்திரா!" என்று கூறி, நாராயணமூர்த்தி விழித்தார்.

இந்திரா சொர்க்கலோகப் பதவியடைந்து பத்து வருடங்கள் ஆகியிருந்தன.

இன்றைக்கு அதே இந்திரா தான் கனவில் வந்து இனிமையான வார்த்தைகள் பேசி மறைந்து விட்டாள். தன் மனைவி இறந்த துக்கத்தை இன்று அவர் இரண்டாம் முறை அனுபவித்தார்.

நாராயணமூர்த்தி ஜன்னல் வழியாக வெளியில் எட்டிப் பார்த்தார். மௌன இரவு. ஒளி பொருந்திய சந்திரன். நிர்மலமான ஆகாயத்தில் சந்திரன் தன் காதலிகளான நக்ஷத்திரங்களுடன் யாத்திரை சென்று கொண்டிருந்தான். அதனுடைய குளிர்ந்த கிரணங்கள், உலகம் முழுவதையும் ஸ்நானம் செய்வித்தன. எத்தகைய அமைதி!

நிலவொளி வீசும் நிர்மலமான அவ்விரவில் கோபாலனும், தன் தாயாரைப் போலவே, அளவு கடந்த அமைதியின் மடியில் சரணமடைந்து விட்டான் என்பதை நாராயண மூர்த்தி அறிந்து கொண்டார்!

✲

நாளைக்கே நேரிடலாம்!

தங்கம், வெள்ளி, நகைகள், வீடு வாசல்கள், விற்பனைச் சரக்குகள் முதலியவற்றின் விலைவாசிகள் சிறிது காலத்துக்குமுன் வெகுவாக உயர்ந்தன. ஆனால் அந்த அநியாய விலைகள் இறங்க ஆரம்பித்து விட்டன. வெற்றியில் நம்பிக்கை வளர வளர இந்த விலைவாசிகள் இறங்கி வந்து, யுத்தம் முடிந்தவுடன் சாதாரண நிலைமைக்கு வந்துவிடுமென்பது விஷயமறிந்த எவருக்கும் தெரியும். ஆகையால் மேற்கண்ட பொருள்களில் முதலிட்ட பணம் மாயமாக மறைந்து விடுவது நிச்சயம். உங்கள் பணமும் அப்படிப் போக விரும்புவீர்களா?

பணத்தைச் சேமிக்க சிக்கனஞ்செய்து விட்டு, அதை இழக்கும் முட்டாள்த்தனமான வேலைகளைச் செய்யாதீர்கள். விஷயமறிந்தவர்கள் தாங்கள் சேமித்த பணத்தை மிகுந்த பத்திரமுள்ளதும், லாபகரமானதுமான நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளில் முதலிடுகிறார்கள். யுத்தகாலத்தில் இந்த சர்ட்டிபிகேட்டுகள் மிகச் சிறந்த முதலீடுகள் என்பதில் சந்தேகமே வேண்டாம். இன்று ரூபாய் 10-க்கு வாங்கிய சர்ட்டிபிகேட், 12 வருஷங்களுக்குப் பிறகு, உத்திரவாதமாக ரூபாய் 15 பெறும்.

முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் இந்த நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளைப் பணமாக மாற்றிக்கொள்ளலாம். இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமானவ கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5,000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

உங்கள் சேமிப்பைக் கொண்டு

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

வாங்குங்கள். பணம் பத்திரமென்ற உறுதியுண்டு.

இன்றே தொடங்குங்கள்!

பதிவு செய்தல் - ஒரு நல்ல முன்னேற்பாடு.

அஸாம், வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை மாகாண வாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கிய மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விபரங்களை இலவசமாகப் பதிவு செய்து கொள்ளலாம். இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணாமற் போனாலுஞ் சரி, அழிந்து விட்டாலுஞ் சரி, தங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விபரங்களையும் உங்களூர் தபாலாபீசில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

சேவிங்ஸ் பாங்கி உள்ள எந்தத் தபாலாபீசிலும்

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

C.P.U. 417.

தேயிலையின் சரிதம்—4



தேயிலை சுருட்டும் இயந்திரத்தில் கொடுக்கப்படுதல்

தோட்டத்திலிருந்து கிளம்பி

புதியதாய் பறிக்கப்பட்ட தேயிலை தொழிற்சாலையில் பலவிதமாய் பக்குவப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் ஜாஸ்தியான தண்ணீரை இலையிலிருந்து வெளியாக்கப்படுகிறது. உஷ்ணமான இடத்தில் பலகையில் சமனய் பரப்பப் படுவதால் இது சாத்யமாகிறது.

வேண்டிய அளவு சரகுகளானவுடன் தேயிலைகள் சுற்றும் இயந்திரங்களில் (Rolling Machine) கொடுக்கப்படுகின்றன. இதனல் இலைகள் முறுக்கப்பட்டு பிழியப்படுகின்றன.

இதன் பிறகு புளிக்கவைத்தல்.

வெகு சீக்கிரம் நாம் சாதாரணமாய் உபயோகிக்கும், கரகர வென்ற கருத்த வாஸனையுள்ள தேயிலையாக மாறிவிடுகிறது.

ப்ரூக் பாண்ட்

சூரியன்

வெ. இராமசாமி

சந்திர சூரியர்களை நினைக்கும் பொழுதெல்லாம், அடாடா, ராவணனுடைய அந்தப் புஷ்பக விமானம் இப்போது இல்லாது போய்விட்டதே என்று வருத்தமாயிருக்கிறது. அது மட்டும் நம்மிடம் இருந்தால், சூரிய சந்திர உலகங்களுக்குப் போய் அப்படியே ஒரு சுற்றுச் சுற்றி விட்டு வரலாமல்லவா? ராவணனுக்குப் பிறகு, அந்த விமானம் விபீஷணன் கைக்கு மாறியதாகவும், விபீஷணன் இலங்கையில் சிரஞ்சீவியாக ராஜ்யபாரம் வகிக்கிறான் என்றும் ராமாயணத்தில் படிக்கிறோம். ஆனால், இலங்கைக்குப் போய் வருபவர்கள் அங்கே அரிசி, மிளகாய் முதலிய சாமான்கள் விலையேறியிருக்கும் அற்புதத்தைப் பற்றிப் பேசுகிறார்களேயல்லாமல், விபீஷணனைப் பற்றியோ, மேலே சொன்ன விமானத்தைப் பற்றியோ ஒன்றும் சொல்லுவதாகத் தெரியவில்லை. ஒரு வேளை அப்படியிருக்கும்படி விபீஷணனுடைய உத்தரவோ என்னவோ? எப்படியும், சூரிய சந்திர உலகங்களுக்குப் போவதற்கு, அந்த விமானத்தை நம்பியிருப்பதில் பயனில்லை என்றாகிறது.

சூரிய - சந்திரர் என்று நாம் வெகு எளிதாய்ச் சேர்த்துச் சொல்வது வழக்கம். ஆனால், சூரியன் எங்கே, சந்திரன் எங்கே? சூரியன் ஒரு ஜோதிப் பிழம்பு. சந்திரனோ பூமியை விடக் குளிர்ந்துவிட்ட ஒரு பளிங்கு மாளிகை. சூரியனின் அமைப்பையும் அளவையும் இயல்பையும் இங்கே இவர் வர்ணிப்பதைப் படிக்கும்போது, நம் உள்ளம் வியப்பும் விம்மிதமும் அடையாமலிருக்க முடியுமா?

நமக்கோ, எப்படியும் அந்த உலகங்களுக்குப் போய்வர ஆசைதான். பாக்கியவசமாக, சயன்ஸ் நமக்கு உதவிசெய்கிறது. பெரிய தொலைநோக்கிகள் (டெலஸ்கோப்) அந்த உலகங்களைச் சமீபத்தில் கொண்டுவந்து நமக்குக் காட்டுகின்றன. இந்தக் கண்ணாடிகள் மூலமாக, பரந்து விரிந்து கிடக்கும் வானவெளியில் நாம் உலாவித் திரிய முடிகிறது. இவைகளின் மூலமாக, பேரண்டம் முழுவதையுமே பார்த்து விட முடியும் என்பதல்ல. இதற்கு உதவியாகக் கணித ஆராய்ச்சிகளின் மூலம், நாம் பெரிய உண்மைகளை அறிகிறோம். சமீப காலத்தில் நட்சத்திரங்களின் உட்புற அமைப்புகளைப் பற்றிக் கணித நூல் நிபுணர்கள் ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். எனவே, தொலைநோக்கியும், கணிதநூலுமே இன்று நமக்குப் புஷ்பக விமானமாக இருந்து உதவி செய்கின்றன.

இந்தப் புதிய விஞ்ஞான விமானத்தில் ஏறிக்கொண்டு, சூரிய உலகத்தைப் பார்க்கச் செல்லுவோம். சந்திர உலகத்

தைப்பற்றி எழுதும்போது, பூமியின் ஆகர்ஷண சக்தியைப் பற்றிச் சொன்னது ஞாபகம் இருக்கலாம். விநாடிக்கு 7 மைல் வேகம் சென்றால், பூமிக்கு வெளியே செல்லமுடியும் என்று சொன்னோம். எனவே, நமது விமானத்தின் விசையை விநாடிக்கு 7 மைல் வேகம் போகும் படி முடுக்குவோம். இந்த வேகத்தில் சென்றால், சில விநாடிகளில் நாம் பூமிக்கு மேலே சென்று விடுகிறோம். அதன் மேல், நமது விமானம் வான வெளியில் சென்று கொண்டிருக்கிறது. இப்படியே சுமார் 70 நாட்கள் பிரயாணம் செய்தபின், அது சூரியனுடைய ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டுச் சூரிய லோகத்துக்குள் செல்லுகிறது.

இந்தப் பிரயாணம், இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் போவதைப் போல இருக்கும் என்று எண்ணலாகாது. பிரயாணம் செய்ய ஆரம்பித்த சில விநாடிகளிலேயே, விபரீதமான மாற்றங்கள் ஏற்படுவதைக் காண்கிறோம். பேரண்டத்தின் நிற அமைப்பு முற்றிலும் மாறிவிடுகிறது. வானம் திடீரென்று இருண்டு விடுகிறது. இந்த நள்ளிருட்டில், நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்றன. ஆனால், அவை இப்போது வெறும் கண் சிமிட்டும் நட்சத்திரங்களாக இல்லை. அவைகளின் ஒளிக் கதிர்கள் தொடர்ந்து பிரகாசிப்பதோடு, ஊசிகள் போன்று உடம்பைத் துளைக்கும்படியாக அவ்வளவு உறுதியாகவும் கடுமையாகவும் இருக்கின்றன. சூரியனது ஒளி உருக்கினால் செய்தது போலக் கெட்டியாக இருக்கிறது. இயற்கையின் அழகு என்று சொல்வதெல்லாம் எங்கோ சென்றுவிடுகிறது. இங்கே இயற்கை அன்னை தன்னுடைய மென்மையையெல்லாம் விட்டு, கோர ரூபத்தில் காட்சி யளிக்கிறாள். இதற்கெல்லாம் காரணம் என்ன? நாம் பூமியைத் தாண்டி அப்பால் வந்ததுதான். இயற்கையின் கோர தாண்டவத்தைக் காணும்போதுதான், அன்னை பூமிதேவி நம்மை எவ்வளவு போற்றி வளர்க்கிறாள் என்பது தெரிகிறது.

பூமியிலிருந்து சூரியனுக்குச் செல்லும் பாதையில் முதன் முதலில் நாம் பார்க்கும் உலகம் சந்திர உலகமாகும். அதைத் தாண்டி அப்பால் சென்றால், புதன், சுக்கிரன் ஆகிய இரண்டு கிரகங்களையும் காண்கிறோம். இந்தக் கிரகங்களிடம் க்ஷேமம் விசாரித்து விட்டு மேலே செல்கிறோம். கொஞ்சநேரத்தில் சூரிய உலகம் நமக்குத் தோற்றம் அளிக்கிறது.

சுக்கிரனுடைய உலகத்துக்கு வந்தவுடன், சூரியனைப் பார்த்தால் அது பூமியிலிருந்து தெரிவதைப்போல ஏழு மடங்கு பெரிதாக இருக்கிறது. நாம் அதை நெருங்க நெருங்க, அது பெரிதாகிக் கொண்டே வருகிறது. ரொம்ப நெருங்கியதும், வான வெளி முழுவதுமே அதுவாகத் தெரிய ஆரம்பிக்கிறது. ஆம், இப்போது அதன் மேல்பரப்புக்குச் சமீபத்தில் வந்துவிட்டோம். சந்திர உலகத்தைப் பார்த்தோம். அங்கே உயிர் என்பதே இல்லையென்பதைக் கண்டோம்; ஒரே அமைதி நிலவிக்கொண்டிருந்தது – சர்வத்தையும் நாசம் செய்தபிறகு போர்க் களத்தில் காணப்படுகிற அமைதியைப் போல. சுக்கிரனுடைய உலகமும் சந்திரனைப்போலவே உயிரற்றதாய் இருந்தது. சூரிய உலகத்திலோ என்றால், யாவும் அவற்றிற்கு நேர்மாறாக இருக்கின்

றன. இங்கே அமைதி, ஓய்வு என்ற வார்த்தைகளுக்குப் பொருளே இல்லை. எல்லாம் பயங்கரமான வேகத்தில் சென்று கொண்டிருக்கின்றன. சூரியனுடைய மேல்பரப்பு, சதா கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. அதில் சில பகுதிகள் வேகம் தாங்கமாட்டாமல் உடைத்துக் கொள்ளுகின்றன. இப்படி அது கொந்தளிப்பதற்கும், உடைத்துக்கொள்ளுவதற்கும் காரணம் என்ன?

சூரியனது உட்புறம், மின்சார சக்தியை உற்பத்தி செய்கிற ஒரு மகத்தான இயந்திரம்போல வேலை செய்துகொண்டிருக்கிறது. அங்கே உற்பத்தியாகிற சக்தி, சூரியனது உட்புறத்தை எண்ண முடியாத அளவு சூடுபடுத்தி விடுகிறது. உண்டாகிற சூடு முழுவதையும் உட்புறத்திலேயே சிறைப்படுத்தி வைக்க முடியாதபடியால், அது வெளியே தள்ளப்பட்டு மேல்பரப்புக்கு வருகிறது. மேல்பரப்பிலிருந்து ஒளியாகவும் ஒளிக்கதிர்களாகவும் அது வெளிப்படுகிறது. ஓர் அரிசி மூட்டையை அளந்து அதில் எத்தனை படி அரிசி இருக்கிறதென்று சொல்லுகிறோம். அதே மாதிரி சக்தியை அளக்க, ஓர் அளவுகோல் வேண்டுமல்லவா? ஒரு குதிரை இழுக்கும் சக்தியை ஓர் எண்ணிக்கையாகக் கொண்டு, விஞ்ஞானிகள் சக்தியை அளந்துவிடுகிறார்கள். சூரியனது மேல்பரப்பின் ஒவ்வோர் அங்குலத்துக்கும் இம்மாதிரி 50 குதிரைச் சக்தி வந்து சேருகிறது. இந்தச் சக்தியையெல்லாம் வெளிப்படுத்தித்தானே ஆகவேண்டும். அதனாலேதான் அங்கே ஒரே கொந்தளிப்பும் கும்மாளமுமாய் இருக்கிறது.

இப்படி உள்ளிருந்து தள்ளப்பட்டு வரும் உஷ்ணத்தின் வேகத்தைத் தாங்கமாட்டாமல், சூரியனது மேல்பரப்பு உடைப்பு எடுத்துக்கொள்ளுகிறதென்று கண்டோம். பீச்சாங்குழாயின் மூலம் நீரைப் பீச்சுவதுபோல், உள்ளிருந்து உந்தும் சக்தி நெருப்புச் சுவாலையை இந்த உடைப்புக்களின் வழியாக வெளியே வீசுகிறது. இவ்வண்ணம் வெளிப்படும் நெருப்புச் சுவாலை பல ரூபங்களில் தோன்றி மறைகின்றன. சிங்கம் போலவும் முதலை போலவும், இன்னும் நவநவமான ரூபங்களில் தோன்றுகின்றன. சிவப்பு நிறமுள்ள இந்த நெருப்புச் சுவாலை மனோகரமான காட்சி என்பதில் சந்தேகமில்லை. இப்படித் தோன்றும் ரூபங்களில் சில, சூரியனது உடலோடு ஒட்டியதுபோலச் சலனமில்லாமல் அப்படியே நிற்கின்றன. சில, ஆயிரக் கணக்கான மைல் சூரியனை விட்டு மேலே தாவி மறைந்துவிடுகின்றன. இவற்றின் ரூபங்கள் ஒவ்வொரு விநாடியும் நவநவமாக மாறிக் கொண்டேயிருக்கின்றன. 1919-ஆம் வருஷம் ஏற்பட்ட கிரகணத்தின்போது, இந்தமாதிரியான ஒரு தோற்றம் சூரியனுடைய மேல்பரப்பில் காணப்பட்டது. எறும்புகளைத் தின்கிற ஒரு பிரம்மாண்டமான பிராணி போல (எறும்புகளைப் பிடித்துத் தின்கிற பிராணி ஆப்பிரிக்காவில் அதிகம் என்று சொல்லுவார்கள்) அதனுடைய தோற்றம் இருந்தது. அதன் நீளம் 3,50,000 மைல். ஒரு மாத்திரையை விழுங்குவது போல, அந்தப் பிராணி நமது பூமியை விழுங்கிவிட முடியுமல்லவா? அந்தத் தோற்றத்தை வான சாஸ்திரிகள் அப்படியே படம் பிடித்தார்கள். படம்

பிடித்த பிறகு, அந்த ஜந்து தலையையும் வாலையும் மேலே தூக்க ஆரம்பித்தது. அதன் பிறகு, தன் கால்களை அதிகப்படுத்திக் கொண்டு, அது சூரியனது மேல் பரப்பிலிருந்து 4,75,000 மைல் உயரத்துக்கு மேல் நோக்கித் தாவியது. சூரியன் அஸ்தமித்து விட்டபடியால், அதற்குப் பிறகு அது செய்த வேடிக்கைகளைப் பார்க்க முடியாமல் போயிற்று.

சூரியனுடைய மேல் பரப்பில் அங்குமிங்குமாக இருண்ட குகைபோன்ற தோற்றங்களைப் பார்க்கிறோம். நெருப்பைக் கக்கிக்கொண்டிருக்கும் இவை, பூமியிலுள்ள நமக்குச் சாமானியப் புள்ளிகளைப் போலத் தோன்றுகின்றன. அதனால் இவைகளை நாம் சூரியனின் புள்ளிகள் என்று சொல்லுகிறோம். ஆனால் இவைகள் புள்ளிகள் அல்ல. ஒவ்வொன்றும் பூமியைவிட எத்தனையோ மடங்கு பெரியது. ஒரு பள்ளத்தாக்கில் எலுமிச்சம் பழம் ஒன்றைப் போட்டால் எப்படியோ அப்படித்தான் இந்தப் புள்ளியில் பூமியைத் தூக்கிப் போட்டால்!

இந்த விநோதங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, நமது புஷ்பக விமானம் சூரிய உலகத்துக்குள் பிரவேசித்து விடுகிறது. நமது விமானத்தைச் சுற்றி, மேலும், கீழும், பக்கங்களிலும் ஒரே நெருப்பு மயம். சூரியனது சூழ்நிலை இது. இதற்கும் பூமியின் சூழ்நிலைக்கும் எவ்வளவு வித்தியாசம்! பூமியின் சூழ்நிலையிலுள்ள வாயுக்கள் இதிலும் இருக்கின்றனவென்பது உண்மைதான். ஆனால், அத்தோடு, பிளாட்டினம் வெள்ளி, ஈயம் போன்ற உலோகங்களும் காற்று ரூபத்தில் சூரியனது சூழ்நிலையில் கலந்திருக்கின்றன. ஏனெனில், சூரிய மண்டலத்தில் எந்த வஸ்துவும் கெட்டியான நிலையிலோ, திரவ நிலையிலோ இருக்க முடியாது. ஆவி ரூபத்திலே தான், யாவும் இருக்க முடியும்.

சூரிய உலகத்துக்குள் இப்போது போய்க் கொண்டிருக்கிறோம், நூறு, ஆயிரம், பத்தாயிரம், லட்சம் மைல்கள் என்று. ஏதாவது மலை, மேடு போன்ற வஸ்து நமது விமானத்தைத் தடைப்படுத்தும் என்று ஒவ்வொரு விநாடியும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், எந்த எதிர்ப்பையும் காணமுடியவில்லை. விஷயம் இப்போதுதான் நமக்கு விளங்குகிறது. சூரிய உலகத்தில், எல்லாம் ஆவி மயமாக இருக்கிறது. சூரியனது மேல் பரப்பிலேயே கெட்டியான பதார்த்தத்தையோ திரவ பதார்த்தத்தையோ நம்மால் பார்க்க முடியவில்லை. அதைவிட எண்ணற்ற மடங்கு சூடாக இருக்கும் அதன் உட்புறத்தில் அந்த நிலையை எதிர்பார்க்கவா முடியும்? பூமியில் ஆவி ரூபத்திலுள்ள சூழ்நிலை, கெட்டியான பதார்த்தமாக மாறுவதை நாம் கண்டிருக்கிறோம். மற்றக் கிரகங்களிலும் இப்படித்தான் என்று வானசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனால், சூரிய மண்டலத்தில் இவ்வளவு பெரிய மாற்றத்தைப் பார்க்கமுடியாது. காரணம் என்னவெனில், சூரியன் எதனால் ஆக்கப்பட்டிருக்கிறதோ அதுவும் சூரியனது சூழ்நிலையும் ஒரே பொருளாயிருக்கின்றன. ஆதலால், இவை இரண்டும் ஒன்றோடொன்று இரண்டறக் கலந்து விடுகின்றன. எல்லா நட்சத்திரங்களிலும் இதே நிலையைத் தான் காணமுடியும்.

இப்போது, நாம் சூரிய மண்டலத்தின் நடுமத்தியில் இருக்கி

ரேம். சூரிய உலகத்தில் நுழையும் போது, ஏழாயிரம் எண்ணுயிரம் டிகிரி சூடு இருந்ததைக் கண்டோம். கொஞ்சம் உள்ளே சென்றதும், அது பதினயிரம் டிகிரி யாயிற்று. இப்படியாகச் சூடு அதிகப்பட்டுக் கொண்டே வந்து, இப்போது—நடுமத்தியில்—400 லட்சம் டிகிரிக்கு வந்திருக்கிறது. சூடு கோடிக்கணக்கான டிகிரி என்று சொல்லும் போது, அதைத் தெரிந்து கொள்வது கஷ்டமான காரியம்தான். அது எப்படியிருக்கும்? அரை ரூபாய் நாணயம் ஒன்றை, சூரியனது மத்திய பாகம் எவ்வளவு சூடாயிருக்கிறதோ அவ்வளவுக்குச் சூடாக்கினல், அந்த நாணயத்தைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான மைல்கள் வரையிலுள்ள எல்லாப் பொருள்களும் — தரை உள்பட — பஸ்மீகரமாகப் போய் விடும் என்ருல், அந்த உஷ்ணத்தின் கொடுமையை ஒருவாறு தெரிந்து கொள்ளலா மல்லவா!

சூரியனது மத்திய பாகத்தில்

சூடு அபாரமாயிருப்பதுபோல, காற்றின் அழுத்தமும் அபாரமாயிருக்கிறது. பூமியில் காற்றின் அழுத்தம் ஒரு சதுர அங்குலத்துக்கு 15 பவுண்டு என்று கணக்கிட்டிருக்கிருர்கள். பூமியின் சூழ்நிலேயின் கனத்தைத் தாங்க, இந்த அழுத்தம் வேண்டியிருக்கிறது. ரயில் எஞ்ஜின் ஓடும்போது, அதற்குள் இருக்கும் நீராவியின் அழுத்தம் இதைப் போல 20 மடங்கு — 300 பவுண்டு — ஆகும். ஆனல், சூரியனது மத்திய பாகத்தில் இந்த அழுத்தம் 400 லட்சம் மடங்கு அதிகமா யிருக்கிறது. சூரியனது சூழ்நிலேயின் கனத்தைத் தாங்க ஒரு சதுர அங்குலத்துக்கு 6000 லட்சம் பவுண்டு அழுத்தம் வேண்டியிருக்கிறது.

சூடு ஒரு வஸ்துவை விரியச் செய்கிறது; அழுத்தம் அதைச் சுருங்கச் செய்கிறது. சூரியனது மத்திய பாகம் 400 லட்சம் டிகிரி சூட்டில் இருப்பதால், அந்தப் பாகம் விரிய எத்தனிக்கிறது. அங்கே யிருக்கிற 6000 லட்சம் பவுண்டு அழுத்தத்தால் அந்தப் பாகம் சுருங்க எத்தனிக்கிறது. இப்படி, விரியச் செய்கிற சக்திக்கும், சுருங்கச் செய்கிற சக்திக்கும் பெரும் போர் நடக்கிறது. இறுதியில், சூட்டை அழுத்தம் ஓர் இம்மி வென்று விடுகிறது. அதன் விளைவாக, காற்று ரூபத்திலுள்ள வஸ்துக்களில் கொஞ்சம் அதிகமான செறிவு ஏற்படுகிறது. அதற்கு மேல் அதிகமான செறிவு ஏற்பட, சூடு தடையாக இருக்கிறது. "வெண்குள்ளேயர்கள்" என்ற நட்சத்திரங்கள் ஒரு ரகத்தைச் சேர்ந்தவை. இவைகளில் வஸ்துவின் செறிவு ரொம்ப அதிகமாயிருக்கிறது; பிளாட்டினத்தைப் போல 2000 மடங்கு செறிவும், அதனல் 2000 மடங்கு கனமும் அதிகமா யிருக்கிறதென்று கணக்கிட்டிருக்கிருர்கள். இந்த நட்சத்திரங்களிலுள்ள வஸ்துவை ஒரு நெருப்புப் பெட்டி கொள்ளுகிற அளவு எடுத்துக் கொண்டால், அது ஒரு டன் நிறையிருக்குமாம். இந்த "வெண்குள்ளேயர்"களை வைத்துப் பார்க்கும்போது, சூரிய மண்டலத்தில் வஸ்துவின் செறிவு அவ்வளவு அதிகமில்லே யென்று சொல்ல வேண்டும். ஆயினும், நாம் பூமியில் காணுகிற செறிவைவிட எத்தனையோ மடங்கு அதிகமா யிருக்கிறது சூரிய உலகத்தில் வஸ்துவின் செறிவு.

சூரியனது மேல்பரப்பிலுள்ள உஷ்ணமே வஸ்துக்களை யெல்லாம் ஆவியாக மாற்றுகிறதென்

பதை நாம் பார்த்தோம். பனிக் கட்டியைத் தண்ணீராகவும், தண்ணீரை நீராவியாகவும் மாற்றுவதோடு, அது அந்த நீராவியையும் அணு அணுவாகப் பிரித்து விடுகிறது. அணு என்றால், என்ன என்பதைக் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம்.

அணுக் கூட்டங்களாலாகியதே வஸ்து. பல அணுக்கள் செறிந்து நிற்கும்போது, அவைகளைத் தனித்தனியாகப் பிரிப்பதற்குச் சக்தி அதிகம் வேண்டும். அணுக்கள் யாவும் சமமான கனமுடையவை என்று சொல்ல முடியாது. உதாரணமாக, இரும்பின் அணு பிராணவாயுவின் அணுவை விடக் கனமானது. அதே போன்று, தங்கத்தின் அணு இரும்பின் அணுவைவிடக் கனமானது. வஸ்து அணுக் கூட்டங்களால் ஆகியதைப்போல, அணு எதனால் ஆகியது என்ற கேள்வி எழுகிறது. பல பரமாணுக்கள் சேர்ந்தது ஓர் அணுவாகிறது. ஒவ்வோர் அணுவுக்கும் நடுவில் ஒரு பரமாணு இருக்கிறது. அதைச் சுற்றிலும் அதைவிடச் சிறிய பல பரமாணுக்கள் இருக்கின்றன. இவைகளை மின்னணுக்கள் என்று கூறலாம்.

எனவே, ஓர் அணுவில் நடுவிலுள்ள பரமாணு ஒன்றும், பல மின்னணுக்களும் இருக்கின்றன. எத்தனை மின்னணுக்கள் ஓர் அணுவில் இருக்கின்றன வென்பது அந்தந்த அணுவைப் பொறுத்திருக்கிறது. பிராணவாயுவின் அணுவாயிருந்தால், 8 மின்னணுக்களும், தங்கத்தின் அணுவாயிருந்தால் 79 மின்னணுக்களும், என்று, இப்படி அவற்றின் எண்ணிக்கை அணுவின் ரகத்தைப் பொறுத்து மாறுகிறது.

அணுக்களைத் தனித்தனியாகப் பிரிப்பதற்கு, அதிக சக்தி வேண்டும் என்றோம். அணுவிலுள்ள மின்னணுக்களைத் தனித்தனியாகப் பிரிக்க, அபாரமான சக்தி வேண்டும். இந்த அபார சக்தி சூரிய உலகத்தில் ஏராளமாகக் கிடைக்கிறது. சூரியனது மேல்பரப்பிலேயே அணுக்கள் தங்கள் மின்னணுக்களில் இரண்டொன்றைச் சிந்த ஆரம்பிக்கின்றன. மத்திய பாகத்துக்குச் செல்லும்போது, பெரும்பாலான அணுக்கள் மின்னணுக்களும் பரமாணுக்களுமாகப் பிரிக்கப்பட்டு விடுகின்றன. சில அணுக்கள் மாத்திரம், இந்த உஷ்ணத்திலும் இரண்டு மூன்று மின்னணுக்களை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கின்றன! இப்படியாக உருப்படியான முழு அணுக்களுக்குப் பதிலாக இரண்டு மூன்று மின்னணுக்களோடு விடப்பட்ட அணுக்களையும் பரமாணுக்களையும் மின்னணுக்களையுமே, நாம் இங்கே பார்க்கிறோம். இவைகள் கடுமையான வேகத்தில் அங்குமிங்கும் பறந்து கொண்டும், ஒன்றோடொன்று மோதிக்கொண்டும் திரிகின்றன. மின்னணுக்கள் விநாடிக்கு 30,000 மைல் வேகத்தில் செல்லுகின்றன—துப்பாக்கிக் குண்டின் வேகத்தைப்போல ஒரு லட்சம் மடங்கு வேகம்! சூரியனது அபாரமான சூட்டில்—400 லட்சம் டிகிரி—அணுக்கள் அக்கக்காகப் பிரிக்கப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

சூரியனது மத்திய பாகத்திலுள்ள சூட்டில் எக்ஸ் ஒளிக் கதிர்கள் (எக்ஸ்—ரே) உண்டாகின்றன. குறுகிய இக் கதிர்கள் விநாடிக்கு 1,86,000 மைல் வேகத்தில் பிரயாணம் செய்கின்றன. பிரிந்துபோன மின்னணுக்கள் திரும்பவும் ஒன்றுசேர

முயற்சிக்கும்போது, அவைகளின் மீது இக்கதிர்கள் மோதி அவற்றின் முயற்சியை வீணுக்குகின்றன. மின்னணுக்களும் பதிலுக்குப் பதில் செய்யாமல் விடவில்லை. இக் கதிர்கள் தாராளமாகப் பிரயாணம் செய்ய முடியாதபடி அவை தடுக்கின்றன. அவைகளின் தடையில்லாவிட்டால், லட்சக் கணக்கான வருஷங்களில் உண்டான எக்ஸ் கதிர்களெல்லாம் ஒரு விநாடியில் சூரியனுக்கு வெளியே சென்று விடும். இந்தக் கதிர்கள், நாலா பக்கமும் பறந்துகொண்டு திரியும் அணுக்கள், மின்னணுக்களின் வழியாக வெளியே செல்ல நேரும்போது, இவற்றின் ஒரு பகுதியை அவை இழுத்துக் கொண்டுவிடுகின்றன. எஞ்சிய கதிர்கள் வெளிப்பட்டு, அதற்கு மேலுள்ள அணுக்கூட்டங்களில் சிக்கிக்கொள்ளுகின்றன. இப்படியாக இக் கதிர்கள் பிரயாணம் செய்யும்போது, இவற்றின் ஒரு சிறு பகுதியே சூரியனது மேல் பரப்புக்கு வருகின்றன. அங்கே வரும்போது, இக் கதிர்கள் நீண்ட கதிர்களாகி, பிறகு நாம் பார்க்கிற ஒளியாக மாறி விடுகின்றன. காரணம் என்னவென்றால், சூரியனது மத்திய பாகம் அதிகச் சூடாயிருக்கிறது. மத்திய பாகத்திலிருந்து மேல் பரப்பை நோக்கிச் செல்லும் போது, சூடு குறைந்துகொண்டே வருகிறது. சூடு குறையக் குறைய ஒளிக் கதிர்கள் சிறிது சிறிதாக நீள ஆரம்பிக்கின்றன. இதன் காரணமாக, மேல் பரப்பிலிருந்து வெளியே வடியும் சூரிய தேஜஸின் ஒளியையே நாம்காண்கிறோம். அந்த ஒளியில் அதி நீலக் கதிர்களும் சிவப்புக் கதிர்களும் கொஞ்சம் கலந்திருக்கின்றன.

சூரிய உலகத்தைப் பார்த்த பிறகு, நமது விமானம் பூமிக்குத் திரும்புகிறது. பூமியை வந்து அடைந்ததும், நமக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது! சூரிய உலகத்தில் வெம்பி வெதும்பியது எங்கே, 'ஜில்'லென்று வீசிக் கொண்டிருக்கும் மந்த மாருதத்தை அநுபவிப்பது எங்கே!

✲

அசாத்திய உயரம்!

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், ஒரு சமயம், ஒரு கோயில் முன்னேயிருந்த பூக்கடைக்குச் சென்றார். ஒரு கொத்துப் பூக்களை வாங்கிக்கொண்டார். இருபது டாலர் (சுமார் 100 ரூபாய்) நோட்டு ஒன்றைப் பூக்காரியிடம் நீட்டினார்.

" வந்தனம், ஜனாதிபதி அவர்களே " என்றாள் பூக்காரி. ஆனால், சில்லறை ஒன்றும் திருப்பிக் கொடுக்கக் காணோம்.

கொஞ்ச நேரம் வரையில் காத்துப் பார்த்தார் லிங்கன். பிறகு, உன்னதமான தம் உடம்பை வளைத்து, அந்தப் பெண்ணின் மணிக் கட்டைத் தொட்டு, " இது என்ன, அம்மா ?" என்று கேட்டார்.

" ஏன், பிரபுவே? இது என் மணிக்கட்டு" என்றாள் பெண்.

" ஓ அப்படியா! சரிதான். அது உன் கணுக்காலாயிருக்குமோ என்று நான் சந்தேகப்பட்டேன். ஏனென்றால், இங்கே எல்லாம் அவ்வளவு உயரத்தில் இருக்கிறது " என்று இழுத்தார்.

நிபுணர்கள் புராணம்

பி. இ.

ஒரு நாள் ஒரு சீன மன்னர் வெளியே உலாவப் போயிருந்தார். நாலாபுறமும் வயல்களும் சோலைகளும் சூழ்ந்திருந்தன. அவர் ஓரிடத்தில் நின்று இயற்கைக் காட்சியை அனுபவித்துக் கொண்டிருந்தார். உழவர்கள் வேலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். சக்கரவர்த்தி, தற்செயலாக அந்த உழவர்களில் ஒருவனை நோக்கினார். அவன் அழுதுகொண்டே போனான்.

சக்கரவர்த்தி அவனைத் தம் அருகே அழைத்து, "நீ அழுவதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார்.

அவன் கைகளைப் பிசைந்து கொண்டு, "மகாராஜா, நான் ஏழை. நாலைந்து கோழிகளை வளர்த்து அவற்றின் முட்டைகளை விற்றுப் பிழைக்கிறேன். இதுவே என் ஜீவனம். என் கெட்டகாலம் பாருங்கள், முட்டைகள் வரவரச் சின்னதாகி வருகின்றன. யாரும் வாங்க மறுக்கிறார்கள்" என்றான்.

சக்கரவர்த்தி மாளிகைக்குத் திரும்பிவந்து பிரதம மந்திரியிடம் ஆலோசனை கேட்டார். மந்திரிக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் குடியானவனை நோக்கி, யாராவது "சர்க்கார் அதிகாரி வந்து உன் வீட்டைப் பார்த்தாரா?" என்று வினவினார். குடியானவன் கண்ணில் நீர் வடித்துக் கொண்டே, "பஞ்சம், நோய் முதல் குருட்டுப் பிச்சைக்காரர்கள் வரை எல்லாவிதமான துர்ப்பாக்கியங்களும் என் வீட்டுக்கு வந்துவிட்டுப் போயிருக்கின்றன. ஆனால், சர்க்கார் அதிகாரிகள் மாத்திரம் வந்ததில்லை" என்றான்.

மந்திரி துள்ளிக் குதித்தார். அவருடைய முகத்தில் குதூகலம் ததும்பியது. அவர் சக்கரவர்த்தியை நோக்கி, "மகாராஜா, இப்பொழுதல்லவா விஷயம் தெரிகிறது! பொழுது விடிந்ததும் விவசாய இலாகாவிடம் தெரிவித்து, இதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிக்கச் சொல்லுகிறேன்" என்றார்.

சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் சக்கரவர்த்திக்குப் பழைய விஷயம் நினைவுக்கு வந்தது. உடனே பிரதம மந்திரியை அழைத்து, "அந்தக் கோழி முட்டை விஷயம் என்ன வாயிற்று?" என விசாரித்தார்.

"அதற்காக ஒரு கோவில் கட்டியிருக்கிறேன். அந்தக் கோவிலுக்கு மகாநாடு என்று பெயர். அங்கே சர்க்கார் அதி

எதற்கெடுத்தாலும் நிபுணர்கள் கிளம்பி விடுகிறார்கள்; நிபுணர் கமிட்டிகள் முளைத்து விடுகின்றன. அதற்குமேல் வாதப் பிரதிவாதங்கள் ஓயாமல் நடக்கின்றன. காரியம் மட்டில் நிறைவேறுவதில்லை. இந்த விசித்திரத்தை விளக்கும் இந்த உவமைக் கதை, ஆங்கிலப் பத்திரிகையொன்றில் வெளியாகியிருக்கிறது.

எதிர்பாருங்கள்

பக்ஷிராஜா பிலிம்ஸ்

ஜகதலப்ரதாபன்

சின்னப்பா

ஸரோஜினி · ஜீவரத்தனம் · வரலக்ஷ்மி.

ஸந்தானலக்ஷ்மி · கிருஷ்ணன் · மதுரம்

Directed by S.M.SRIRAMULU NAIDU

NARAYANAN Co.

P.S.M.Co.

JT2A

சக்தி வெளியீடுகள்

கார்ல் மார்க்ஸ் வெ. சாமிநாத சர்மா	3	0	0
ரூஸ்ஸோ (சரித்திரம்) ,,	1	12	0
காந்தியும் ஜவஹரும் ,,	0	8	0
ருஷ்யக் கதைகள் எம். எல். சபரிராஜன்	4	0	0
போரும் காதலும் (நாவல்) டால்ஸ்டாய் முதல் பாகம்	3	0	0
சமுதாய ஒப்பந்தம் (ரூஸ்ஸோ)	3	4	0
சத்திய வேட்கை (கதை)	0	8	0
நிழல்கள் (நாடகம்) அ. சீனிவாசராகவன்	1	8	0
கூளப்ப நாயக்கன் காதல்	1	4	0
திருமலை முருகன் பள்ளு	2	0	0
ஆறடி நிலம் (கதைகள்)	0	6	0
அபேதவாதம் ராஜாஜி	0	8	0
கீதா போதனை	0	4	0

ஆங்கில வெளியீடுகள்

Strange Journey, Harindranath Chattopadhyaya (Poems)	2	8	0
Five Plays, ,, (Plays)	1	4	0
Lyric Festoons, V. RM. Chettiar	1	0	0
Talk for Food, S. Gopal & V. Abdulla	0	10	0
Angry Dust, Manjeri S. Isvaran	2	0	0
The Essentials of Gandhism V. Swaminatha Sarma	0	12	0

காரிகள் பலர் கூடி, இரவுபகலாக விவாதித்து வருகிறார்கள்.''

"என்? எதற்காக விவாதிக்கிறார்கள்?''

"முட்டை முதலில் தோன்றியதா, கோழி முதலில் தோன்றியதா என்று தெரியவேண்டுமாம். இந்த மாதிரியான பெரிய ஆராய்ச்சிக்குப் பூர்வாங்க விஷயங்கள்தான் இன்றியமையாதனவாம். ஆஹா, அவர்கள் என்ன அழகாகப் பேசுகிறார்கள் என்று நினைக்கிறீர்கள்! இத்தனை நாளாக இரவு பகல் விவாதம் செய்து, 'கோழிமுட்டை ஆராய்ச்சிக்கு முன்னுரை' என்ற பெயரில் பன்னிரண்டு புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். அதை ஒவ்வொரு வீடாக எடுத்துக் கொண்டு போய், அதிலுள்ள சில பகுதிகளைக் குடியானவர்களுக்கு வாசித்துக் காட்டுகிறார்கள்.''

"சரி, வாரும்—அந்தக் குடியானவன் வீட்டுக்குப் போய், அவன் கவலை தீர்ந்ததா என்று கேட்போம்.''

இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள். குடியானவன் வீட்டுக்கு முன் பெருங் கூட்டம் கூடியிருந்தது. அதிகாரிகள் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்கள். சக்கரவர்த்தி, குடியானவனை நோக்கி, "என்னப்பா, இப்போது உன் கோழிமுட்டைகள், பெரிதாக இருக்கின்றனவா?'' என்று கேட்டார்.

அவன் முன்போலவே கைகளைப் பிசைந்துகொண்டு, "இல்லை மகாராஜா, இப்போது என் கோழிகள் முட்டையே இடுவதில்லை'' என்று ஏங்கினான்.

"இதென்ன அதிசயம்! ஏன்?'' என்று கேட்டார் அரசர்.

"அரசே! தங்கள் அதிகாரிகள் என் வீடு முழுதும் கூடி நிறைந்து விட்டதால், கோழிகள் தங்கியிருந்து முட்டையிடுவதற்கு இடமேயில்லையே'' என்றான் குடியானவன்.

✲

வித்தியாசம் இதுதான்

ருஷியாவில், ராஜாங்கமே பசுவைக் கறந்து பாலை வழங்குகிறது. ஜெர்மனியில் பால்காரர்கள் பசுவைக் கறக்கிறார்கள்; ராஜாங்கம் அந்தப் பாலையெல்லாம் பலவந்தமாய்க் கைப்பற்றி, அதைக் கொண்டு பீரங்கிகளை வாங்குகிறது. பலன் என்ன? இரண்டிலும் வேலையில்லாத் திண்டாட்டமில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிளவைதான், ஜன நாயக நாடுகளை அரிக்கும் சனியனாய் முளைத்திருக்கிறது. காரணம் தெரியுமா? ஜனநாயக நாடுகளில், பால்காரர்களே பாலைக் கறப்பதோடல்லாமல் அதை வழங்கவும் செய்கிறார்கள். ஆனால், பால் பெரும்பாலும் குழந்தைகளுக்குக் கிடைப்பதில்லை; பிரபுக்களே அதை ஏகபோகமாய்ப் பெற்று அனுபவிக்கிறார்கள். ஆகையால், குழந்தைகள் சாகின்றன; பிரபுக்கள் வழுக்கை மண்டையோடு சிரித்து மினுக்குகிறார்கள். பிரபுக்கள் எல்லாப் பாலையும் குடிக்க முடியாது. சில சமயம் பால் மிஞ்சி விடுகிறது. பால்காரனுக்குக் கிராக்கி குறைகிறது. பால்காரன், வேலையில்லாமல் தவிக்கத் தொடங்குகிறான்.

—'போரம்'

பூனைக்குட்டி

ராமானுஜம்

பூனைக்குட்டி! பூனைக்குட்டி!
பொன்சாம்பல் வர்ணக்குட்டி!
உன்னைத்தானே கூப்பிடுறேன்;
ஓடிவாராய் பூனைக்குட்டி!

பாலும்சோறும் வெண்ணெய் கொண்டு,
பலவிதப் பலகாரம் கொண்டு,
காலைமாலை கூவி நின்றேன்.
காணவில்லை; எங்கே போனாய்?

எலி பிடிக்கப் போயிருந்தேன்,
வலி எடுத்த துடம்பெல்லாம்.
கூலி சிறிதும் கிடைக்கவில்லை;
கொண்டு வாராய் பாலையெல்லாம்.



சப்தரிஷி மண்டலம்

'பரதன்'

வெகு காலத்துக்கு முன்னால் ஒரு பஞ்சம் வந்தது. எல்லா நதிகளும் வறண்டு போய்விட்டன. கிணறுகளில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. மரங்கள் உலர்ந்து கருகின. தண்ணீர் கிடைக்காததால், பல மிருகங்களும், மனிதர்களும் இறந்துபோனார்கள்.

அப்போது, ஓர் ஊரில் ஓர் ஏழைப் பெண் வசித்து வந்தாள். அவளுக்கு ஜுரம் உண்டாயிற்று. இரண்டு மூன்று நாளாய், தண்ணீருக்காகத் தவியாய்த் தவித்தாள். மூன்றாவது நாள், மகளை அனுப்பி, எங்கேயிருந்தாவது கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரும்படி சொன்னாள்.

அவளுக்கு வயது ஒன்பது அல்லது பத்து இருக்கலாம். சின்னஞ் சிறுமி. ஒரு சிறு குடத்தைத் தூக்கிக்கொண்டு போனாள்; தண்ணீருக்காக வெகுதூரம் அலைந்து பார்த்தாள். ஆனால், எங்கேயும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கிடைக்கவில்லை. அலைச்சல் மிகுதியால் களைப்பு உண்டாயிற்று. கீழே, புல்லில் படுத்தாள். தூங்கிப் போய்விட்டாள்.

விழித்ததும், குடத்தைக் கையில் எடுத்தாள். குடம் நிறையத் தண்ணீர் இருந்தது! அவளுக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. தாகமாய் இருந்தது. அவ்வளவு தண்ணீரையும் ஒரே வாயில் குடித்துவிடலாம் போல இருந்தது. ஆனால், தாயார் நினைவு வந்தது. குடத்தைத் தூக்கிக்கொண்டு வேகமாய் வீட்டுக்கு ஓடினாள். வழியில் ஒரு நாய் படுத்திருந்தது. அவள் அதைக் கவனிக்கவில்லை. நாயின்மேல் இடறி விழுந்தாள். ஆனால், என்ன அதிசயம்! குடம் கவிழவில்லை; அதிலிருந்து ஒரு துளித்

வானத்திலே ஓர் அகப்பை போன்ற உருவத்தில் ஏழு நட்சத்திரங்களைத் தினந்தோறும் காணலாம். அவை தான் சப்த ரிஷிகள். அவைகளைப் பற்றி டால்ஸ்டாய் எழுதிய ஒரு கதை இது. சிறுவர் மட்டிலும் அல்ல; பெரியவரும் படிக்கத்தக்கது.

தண்ணீர் கூடக் கீழே சிந்தவில்லை.

நாய் குடத்திலிருந்த தண்ணீரைப் பார்த்ததும் வாலை ஆட்டியது. அதனுடைய கண்கள் சிறுமியை ஆவலாக நோக்கின. சிறுமிக்கு இரக்கம் உண்டாயிற்று. உள்ளங் கையில் கொஞ்சம் தண்ணீர் விட்டு, அதை நாய் முன் நீட்டினாள். நாய் அதைக் குடித்து விட்டு நிம்மதியாகப் படுத்துக் கொண்டது. குடம் திடீரென்று வெள்ளியாக மாறியது. அவள் குடத்தைத் தூக்கிக் கொண்டு போய்த் தன் தாயிடம் கொடுத்தாள்.

அவள் தண்ணீர் குடிக்க மறுத்து, "இனி நான் தண்ணீர் குடிப்பதும் ஒன்றுதான், குடிக்காமல் இருப்பதும் ஒன்றுதான். எப்படியும் செத்துப் போய் விடுவேன். நீயாவது குடித்துப் பிழைத்துக்கொள்" என்றாள். இவ்வாறு சொன்ன அவள், குடத்தை மகளிடம் கொடுத்து விட்டாள். உடனே, குடம் தங்கமாக மாறியது.

சிறுமிக்கு அதற்கு மேல் தாகம் தாங்க முடியவில்லை. தண்ணீர் குடிப்பதற்காகக் குடத்தை வாயருகே கொண்டு போனாள். அப்போது ஒரு பரதேசி அங்கே வந்தான். "உயிர் போகிறது. கொஞ்சம் தண்ணீர் இருந்தால் கொடேன்" என்று அவன் கெஞ்சினான். சிறுமி மனங் கசிந்து, குடத்தை அவனிடம் கொடுத்து விட்டாள். மறுகணம், குடத்துக்குள்ளே இருந்து, ஏழு வைரங்கள் கிளம்பின. அதிலிருந்து தண்ணீரும் பெருகி வழிந்தது. வைரங்கள் உயர எழும்பிச் சென்று, நட்சத்திரங்களாக மாறி நின்றன. அதையே, இன்று நாம் சப்தரிஷி மண்டலம் என்று அழைக்கிறோம்.

ஒத்துழைப்பு !

பிரான்ஸில் ஜெர்மானியர் புகுந்து ஒத்துழைக்கும்படி ஜனங்களை வற்புறுத்துகிறார்கள் அல்லவா; இதுபற்றி, பாரிஸில் ஒரு விகடத் துணுக்கு வழங்குகிறது. பாரிஸ் ஜனங்கள் பேசிக்கொள்வதாவது: "நாம் இருவரும் ஒத்துழைப்போம். உன் கைக் கடியாரத்தை என்னிடம் தா; நான் உனக்கு மணி சொல்லுகிறேன்."

புத்தக உலகம்

கம்பராமாயணம் : ஆரணிய காண்டம் : பதிப்பாசிரியர் : டி. கே. சிதம்பரநாத முதலியார். வெளியிட்டோர் : புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை : ரூ. 5—0—0.

'கம்பன்' என்ருல், 'இந்த வம்பு நமக்கேன் ?' என்று நினைத்துக் கொண்டிருந்த பெரும்பாலான மக்களை, கம்பன் மோகம் கொள்ளச் செய்த ரசிகர் டி. கே. சி. கம்பராமாயணத்தில் சிதைவெனத் தாம் கண்டு, அவர் தள்ளிவிட்ட பாடல்களும் செய்துள்ள திருத்தங்களும் பல உண்டு. இது, ஒரு கோஷ்டியாருக்குப் பிடிப்பதில்லை. ஆயினும், அவருடைய திருத்தங்களைக் கொண்ட பதிப்பு வந்தால் தான், கம்பனைப் படிப்பது என்ற விரதம் பூண்ட மற்றெரு கோஷ்டியாரும் இருக்கிருர்கள். அவர்களுக்கு இந்த இரண்டாவது பகுதி, பெரு மகிழ்ச்சி தரும். ஒரு குழந்தையின் எளிமையுடனும் சுவை நிறைவோடும், தாம் அனுபவிக்கும் இலக்கிய இன்பத்தைப் பிறருக்கும் பகிர்ந்தளிக்கும் பாணியில், அவருடைய குறிப்புக்களும் விளக்கங்களும் அமைந்திருக்கின்றன. முதல் பகுதியைப் போலவே வனப்பு மிக்க வர்ணச் சித்திரங்களோடு, நேர்த்தியான முறையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சோவியத் கொரில்லாப் போர்: ஆசிரியர் ; வெ. ராமசாமி. வெளியிட்டோர் : சக்தி காரியாலயம், சென்னை. விலை : ரூ. 0—8—0

'ஒரு பொது ஒழுங்கின்றிச் சுதந்தரமான சிறு சிறு கூட்டங்களாக மறைமுகமாக இருந்து கொண்டு எதிரியைத் தாக்கும் போர் முறைக்குக் கொரில்லாப் போர் என்று பெயர்.' இந்தப் போர் முறையை, ருஷ்யர்கள் நன்ருக அனுஷ்டித்து வருவதனலேயே, சென்ற மூன்று வருஷகாலமாக ஜெர்மானியரின் பெரும் படைப் பலத்தை எதிர்த்துப் போராடி அதிகமான சேதங்களை உண்டு பண்ணி வருகிருர்கள். இந்தக் கொரில்லாப் படையின் அமைப்பு, இந்தப் படையில் சேர்ந்துள்ள இளைஞர் முதல் வயோதிகர் வரை, ஆண்களும் பெண்களுமாக என்னென்ன அற்புதமான காரியங்களைச் செய்கிருர்கள் என்ற விவரங்களை ஆசிரியர் இந்தச் சிறிய நூலில் தெளிவாகச் சொல்கிருர். ஒரு ஜாதிக்குச் சுதந்தர உணர்ச்சி மட்டும் மங்காமல் இருந்து கொண்டிருக்குமானல், அது, தன்னுடைய சுதந்தரத்தைக் காப்பாற்றிக் கொள்ள என்னென்ன துணிச்சலான காரியங்களைச் செய்கிற தென்பதற்கு, இந்த நூல் நல்ல உதாரணம்.

சினிமா...? : ஆசிரியர்: பி. எஸ். ராமய்யா. வெளியிட்டோர் : ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி. விலை ரூ. 3—8—0.

எல்லா வகையிலும் சிறந்த ஒரு நல்ல சினிமாப்படம் இதுவரையில் தமிழில் வரவில்லை ; ஆனல், சினிமாவைப்பற்றிய ஒரு நல்ல புத்தகம் இதோ வந்திருக்கிறது என்று சொல்லலாம். இதற்கு முன் ஒன்றிரு சினிமாப் புத்தகங்கள் வந்த துண்டு. ஆனல், சினிமாக் கலை, தொழில் இரண்டின் நுட்பங்களையும் விட, அவைகளுக்குப் புறம்பான விஷயங்களையே அவற்றில் நாம் கண்டோம். இந்தப் புத்தகத்தில், சினிமாக் கலை, தொழில் இரண்டின் சூட்சுமங்களையும் கூடியமட்டில் விரிவாகவும், அழகாகவும் விளக்கியிருக்கிருர் இதன் ஆசிரியர். அவர் சினிமாத் தொழிலில் புகுமுன், சிறந்த எழுத்தாளராக இருந்திருக்கிருர். ஆகவே, அருவியோட்டம் போல் தெளிந்த தமிழ் நடையில், பற்பல இந்தியப் படங்களையே அங்கங்கே உதாரணம் காட்டி, சினிமாவின் பற்பல அம்சங்களையும் விவரித்து எழுதியிருக்கிருர். சினிமாத் தொழிலிலும் கலையிலும் ஈடுபட்டவர்கள் மட்டிலுமல்ல, சினிமாப் பார்க்கும் விருப்பமுள்ள பொது ஜனங்களுமே படிக்கவேண்டிய புத்தகம். அமைப்பும் பதிப்பும் முதல் தரம்.

சந்திரா: பதிப்பாசிரியர்: தி. நா. சுப்பிரமணியன். ஆலோசனையாளர்கள்: ஆர். வேங்கட ராஜுலு, ரா. நாராயணன். வெளியிடுவோர்: சந்திரா பப்ளிகேஷன்ஸ் லிமிடெட், திருவல்லிக்கேணி. விலை: ரூ 1—0—0.

புதிய புதிய கதை, கவி, கட்டுரைகளைத் தொகுத்து மாதம் ஒரு புத்தகமாக வெளியிடும் ஒரு முயற்சி இது. இதில் கவிஞர் பாரதியின் அருமையான பழைய பாடல் ஒன்று முதலிலும், 'சுரபி'யின் கம்பீரமான புதுப் பாடலொன்று கடைசிலும் அமைந்து இன்ப மூட்டுகின்றன. 'விடுதலை வேண்டும்' என்ற அழகான கட்டுரையில், தமிழ் வளர்ச்சிக்கு, திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள் கூறும் யோசனைகளை, ஒரு புறம் தூய தமிழ்ப் பண்டிதர்களும், மறுபுறம் இலக்கணத்தைச் சிதைக்கும் நவயுக எழுத்தாளர்களும் கட்டாயம் படிக்க வேண்டும். சுத்தானந்தர், கி. வா. ஜகந்நாதன், ஆர். வேங்கட ராஜுலு, ரா. நாராயணன், வி. வி. சடகோபன் முதலிய இன்னும் பலர் எழுதியுள்ள கதை, கட்டுரைகள் பொருள் செறிந்தவை. அழகான அமைப்பும், தெளிவான பதிப்பும் கொண்ட வெளியீடு.

மகாகவி சூத்ரகரின் நன்மொழிகள்: வெளியிட்டோர்: ஸம்ஸ்க்ருத ஸேவாஸமிதி, சென்னை. விலை: ரூ. 0—4—0.

"வறுமை, மரணம் இந்த இரண்டிலும் மரணமே எனக்குப் பிடிக்கிறது; வறுமை எனக்குப் பிடிக்கவில்லை. மரணம் சிறிதே துன்பம் தருகிறது; வறுமையோ முடிவில்லாத் துன்பமாகும்" என்கிறார், மிருச்சகடி என்ற பிரபல நாடகத்தின் ஆசிரியரான சூத்ரகர். இம்மாதிரி பொருள் பொதிந்த 64 சுலோகங்களையும் அவைகளின் நேருக்கு நேரான தமிழ்மொழி பெயர்ப்பையும் சேர்த்து, இந்தச் சிறு பிரசுரம் தயாராகியிருக்கிறது. அத்தனையும் அனுபவ ஞானம் நிறைந்த பொன்னுரைகளாகும்.

கம்பராமாயணம்: யுத்த காண்டம்: முதல் மூன்று படலங்கள்: பதிப்பாசிரியர்: எஸ். வையாபுரி பிள்ளை, தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ், லிம்டி கார்டன்ஸ், ராயப்பேட்டை, சென்னை. விலை ரூ 0—6—0.

கம்பராமாயணம் என்ற மகா காவியம், கிடைத்தற்கரிய ஓர் இலக்கிய பொக்கிஷமாகும். இம்மாதிரி பாக்கியத்தை, உலகத்திலே எல்லா நாடுகளும் எல்லா மொழிகளும் அடைந்திருக்கவில்லை. வாராது வந்த இந்த இலக்கியச் செல்வம், சரித்திர நிலைமைகளாலும், காலப் போக்கினாலும், பாடச் சிதைவுகளும் இடைச் செருகல்களும் பெற்றிருப்பது சகஜம். ஆராய்ச்சித் திறமை மிக்கவர்கள், விருப்பு வெறுப்பின்றி, விரிவாகப் பல பிரதிகளையும் பரிசீலனை செய்து, கம்பராமாயணத்துக்கு, ஒரு திருத்தமான பதிப்பைக் கொண்டு வருவது மிக்க அவசியமாகும். திரு. பிள்ளையவர்களைப் போன்றோர், அந்தக் காரியத்துக்குப் பெரிதும் தகுதியுடையவர்கள். மாதிரிக்காகச் சில படலங்களே இந்தப் புத்தகத்தில் தரப்பட்டிருக்கின்றன. ஏராளமான பல பிரதிகளைச் சோதித்து, பல பாட பேதங்களையும் திரு. பிள்ளை தந்திருக்கிறார். இதே போல, கம்பராமாயணம் பூராவுக்கும் ஒரு பதிப்பை அவர் கொண்டுவருவதற்கு, தமிழ் நாடு அவருக்கு ஊக்கமும் ஆதரவும் நல்கவேண்டும்.

ஜடாதரன்: (சிறு கதைகள்) ஆசிரியர்: கா. சி. வேங்கடரமணி. மொழி பெயர்த்தவர்: த. நா. குமாரசுவாமி. வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை சாதா ரூ 1—12—0; அட்டை ரூ 2—4—0.

'இவை சிறு கதைகள் என்பதைவிட வாழ்க்கைச் சித்திரங்கள் என்றே சொல்லவேண்டும்' என்கிறார் ஆசிரியர். உண்மை; உயர்ந்த லட்சிய வாழ்க்கையைச் சுட்டிக் காட்டும் வாழ்க்கைச் சித்திரங்கள். மொத்தம் ஒன்பது கதைகள் இருக்கின்றன. தான் காதலித்த பெண்ணை அடையாத ஜடாதரன், 'ஆசிரியருக்கும் மாணவருக்கும் நிகழும் பெருமணத்'தின் நாயகனாகிறான். தேவாங்கைப்பற்றி வேடன் சொல்லும் கற்பனை அடங்கிய

'வெற்றிக்கு வழி' ஒரு கலைச் சித்திர மாகும். 'ரெயில் விபத்'தின் பலனாக ராமானுஜ-லட்சுமி தம்பதிகள் பெறும் இன்ப வாழ்க்கை, நம்மை மனம் பூரிக்கச் செய்கிறது. இன்னும், 'இந்துமதி' 'ஞானோதயம்' என்ற கதைகளும் உணர்ச்சியைக் கிளரச் செய்யும் இன்பமான சித்திரங்களே. வாழ்க்கையின் துயரங்களை வர்ணிக்கும் 'விதி,' 'பட்டுவின் கல்யாணம்' என்ற கதைகள் கூட, மிகவும் நயமான முறையிலேயே அமைந்திருக்கின்றன. வர்ணமும் ஒளியும் ஜீவனும் நிறைந்த கதைகள்.

கருகிய மொட்டு: ஆசிரியர்: வி. ஸ. காண்டேகர். மொழி பெயர்த்தவர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர். விலை ரூ 3—8—0.

'உயர்ந்த காதல் என்பது சுக்கில பட்சத்துப் பூர்ணச் சந்திரனல்ல; அது கிருஷ்ண பட்சத்துத் தேய்பிறையாகும்.' ஒரு தம்பதிகளின் இல்லறத் தொடக்கத்திலே உண்மைக் காதல் ஏற்பட்டு விடாது. பதினைந்து இருபது வருஷங்கள் இணையாக வாழ்ந்து, பல இன்ப துன்பங்களை அனுபவித்த பிறகுதான், அது சித்திக்கும் – இந்த நேர்த்தியான சித்தாந்தத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டே, இந்தக் கற்பனையை ஆசிரியர் புனைந்திருக்கிறார். ஆனால், எத்தனை வருஷங்கள் ஆனபிறகும் அது ஏற்படாது, தேக இச்சைதான் மேலோங்கி நிற்கும் என்று ஸ்தாபிப்பது போலவே, இதிலுள்ள பெரும்பாலான பாத்திரங்களின் வரலாறு இயன்றிருக்கிறது. நூதனமான ஒரு முறையை லாகவமாய்க் கையாண்டு, இந்தக் கற்பனை சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. குஸுமா என்ற பெண்ணின் பரிதாப வரலாறுதான், முக்கியமான கதை. பிறகு அந்தக் கதையைப் பற்றி அபிப்பிராயம் சொல்லுபவர்களை ஆசிரியர் சந்திப்பது போல், பின்னும் பல பாத்திரங்களின் வாழ்க்கையைச் சித்தரித்துள்ளார். படிப்பதற்கு மிக்க இனிமையான முறையில், கதைகளும் சரி, மொழிபெயர்ப்பு நடையும் சரி, அமைந்திருக்கின்றன.

தியாகம்: ஆசிரியர்: நிகோலை டி கோனவ். மொழிபெயர்த்தவர்: எம். எஸ். விசுவநாதன். வெளியிட்டோர்: ஜன சக்தி பிரசுராலயம், ஜி.டி., சென்னை. விலை ரூ. 0—6—0.

போர் விமானக் குண்டுகள் விழுவதையும், பீரங்கிக் குண்டால் பிளந்த கப்பல் அமிழ்வதையும், ராணுவப் படைகள் போரிட்டுப் பாய்வதையும், யுத்தப் பிராந்தியத்தில் அகப்பட்ட நகரங்கள் நாசமாவதையும் பகைப் புலனைக் கொண்டு, கதைகள் சிருஷ்டிப்ப தென்றால், இன்று ருஷ்யர்களை விடச் சிறப்பாக யாரும் அதைச்செய்ய முடியாது. லெனின்கிராட் கதைகள் என்பதன் மொழி பெயர்ப்பான இந்தப் புத்தகம், போர் முனையிலுள்ள அந்த வீர ருஷிய மக்களின் வாழ்வு தாழ்வுகளையும் தியாகங்களையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. தெள்ளத் தெளிந்த தமிழில், மிக இயற்கையாக, மொழி பெயர்ப்பு அமைந்திருக்கிறது.

ஸோவியத் யூனியன்: ஆசிரியர்: ஏ. ஜி. வெங்கடாச்சாரி. வெளியிட்டோர்: கமலா பிரசுராலயம், 157, பிராட்வே, சென்னை. விலை ரூ 1–8–0.

'இதோ போய்விடப் போகிறது ருஷியா' என்று இரண்டு வருஷங்களுக்கு முன் சொல்லிக் கொண்டிருந்தவர்க ளெல்லாம் தலை கவிழும்படி நிமிர்ந்து நின்று போர் செய்து வரும் அந்த நாட்டின் புது நாகரிக வாழ்வை, உலகமெல்லாம் நன்கறிய வேண்டியது அவசியமாகும். ஏனெனில், அதன் புதிய சமுதாய அமைப்பே, அதற்கு இந்தப் பலத்தைத் தந்திருக்கிறது. ஸோவியத் புரட்சியிலிருந்துதொடங்கி, இந்த யுத்தத்தில் ருஷியா சிக்கிய விவரமுள்பட, இன்று வரையுள்ள வரலாற்றைச் சுருக்கமாக இந்த நூலிலே காணலாம்.

இராணி மங்கம்மாள்: (நாடகம்) ஆசிரியர்: யோகி சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: அன்பு நிலையம், இராமசச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை: ரூ 0—12—0.

பாண்டி நாட்டை ஆண்ட வீர அரசியான மங்கம்மாளின் சரித்திரத்தை,

இந்தச் செந்தமிழ் நாடகமாக ஆக்கித் தந்திருக்கிறுர் ஆசிரியர். மங்கம்மாள் உத்தமமான முறையில் அரசாளுகிருள். உள்நாட்டு மந்திரியும், ராணியின் பேரனும் சேர்ந்து சதிசெய்து, அவளைச் சிறையி லிடுகிருர்கள். அவள் சாகிருள். இதுவே கதை. சம்பாஷணை யெல்லாம் நம் நாடகமேடைக்கு ஏற்ற முறையில் அமைந்திருக்கின்றன. ஆனல், கதையமைப்பு அவ்வளவா யில்லை. சின்னதாகவும் இருக்கிறது. மேடையில் எப்படியோ? படிக்க ருசியாகவே யிருக்கிறது.

வங்காளப் பஞ்சம்: ஆசிரியர்: 'சாவி' வெளியிட்டோர்: தமிழ்ப் பண்ணை, தியாகராய நகர். விலை: ரூ. 0—8—0.

தேச முழுவதையும் ஒரு கலக்குக் கலக்கி அதிரச் செய்த பிரச்னை வங்கப் பஞ்சம். அது நாட்டின் இதர பாகங்களுக் கெல்லாம் ஓர் எச்சரிக்கையு மாகும். வங்கப் பஞ்சம் வந்த காரணங்களும் அதுமாதிரி இதர இடங்களில் வராதிருக்கக் கைக்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகளும், எளிய நடையில் சுருக்கமாக இதில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

The Dream of Ravan (ராவணன் கனவு: ஆங்கிலம்): வெளியிட்டோர்: இன்டர்நேஷனல் புக் ஹவுஸ், ஆஷ் லேன், மகாத்மா காந்தி ரோடு, பம்பாய். விலை: ரூ. 2-8-0.

ஓர் அபூர்வமான புஸ்தகம். ஆசிரியர் தமது பெயரை வெளியிடவில்லை. டப்ளின் சர்வ கலாசாலைப் பத்திரிகையில் பல வருஷங்களுக்கு முன் வந்த கட்டுரை, கவிதைகளின் தொகுப்பு இது. ஆரண்ய காண்டத்தில் காணப்படும் ஒரு சிறு சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு, ராவணனின் கனவைக் கற்பனை செய்கிருர் ஆசிரியர். கனவைப் பாட்டு உருவத்திலும் அதன் வியாக்கியானத்தை வசன நடையிலும் எழுதியிருக்கிருர். சந்தேகம், அஞ்ஞானம் என்ற மேக படலங்களை விரட்டி, தன் இயற்கையான தேஜோமய நிலையை அடைவதே மனித வாழ்வின் உண்மை லட்சியம் என்பதை, இந்த நூல் அழகாக விளக்குகிறது. மேல் நாட்டின் உலகாயத பந்தத்திலே சிக்கித் தவிக்கும் ஒருவருக்கு, இந்திய வேதாந்தம் காட்டிய விடுதலை மார்க்கமாக விளங்குகிறது இந்த நூல். மனிதனின் ஆத்மீக வாழ்வே இறுதியில் வெற்றி பெறும் என்பதற்கு ஒரு சாட்சியம் போலவும் இது விளங்குகிறது.

Citizen Tom Paine (டாம் பெயின் வரலாறு: ஆங்கிலம்): ஆசிரியர்: ஹொவார்டு பாஸ்டு. வெளியிட்டோர்: இன்டர்நேஷனல் புக் ஹவுஸ், ஆஷ் லேன், மகாத்மா காந்தி ரோடு, பம்பாய். விலை: ரூ. 3—0—0.

அமெரிக்கப் புரட்சி, பிரஞ்சுப் புரட்சி இரண்டுக்கும் விதை ஊன்றிய மூல புருஷர்களில் ஒருவர் தாமஸ் பெயின். அவரது வாழ்க்கைச் சரித்திரத்தைப் பலர் எழுதியிருக்கிருர்கள். என்ருலும், இந்த ஆசிரியர், அதைப் புதுமையான முறையில், ஆழ்ந்த சரித்திர ஆராய்ச்சியுடன், ஒரு நாவலைப் போல் ருசிகரமாய் எழுதியிருக்கிருர். மனதைக் கவரும் வர்ணனையும், உள்ளங் கிளரும் நிகழ்ச்சிகளும் இதிலே நிறைந்திருக்கின்றன. நால்வகைச் சுதந்தரத்தைப் பற்றி வாய்ப் பறையடிக்கும் ரூஸ்வெல்டின் அமெரிக்காவிலிருந்து வரும் இந்த ஜீவிய சரித்திரத்தை, பேச்சுச் சுதந்தரம் கூட இல்லாது தவிக்கும் நம் இந்திய மக்கள் விசேஷமாய்ப் படிக்க வேண்டியதாகும்.

✲

அறிவும் குணமும்

அறிவாளி கடலைக் கண்டு ஆனந்திப்பான்; குணசாலி மலையைக் கண்டு ஆனந்திப்பான். ஏனெனில், அறிவாளி, சலன முடையவன்; குணசாலியோ சாந்தியுடையவன்.

— சீன வேதாந்தி கன்பியூஷியஸ்.

-- சுருக்கமான வழி --

ராமசாமிக்குத் தன் மனைவி மேல் வெகு அன்பு. கல்யாணமாகி ஐந்து வருஷமாகியும், தம்பதிகள் புதிதாய்க் கல்யாணமானவர்கள் போல அவ்வளவு அந்நியோந்நியமாய் இருந்துவந்தார்கள்.

ராமசாமிக்கு ஒரு காரியாலயத்தில் குமஸ்தா வேலை. மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளம். ஏதோ ஒருவகையில் குடும்ப வாழ்க்கை நடந்து வந்தது. பரஸ்பர அன்பு ஒன்றைத் தவிர, அவர்கள் வாழ்க்கையில் இன்பம் அளிக்கத் தக்கதாய் வேறென்றும் இல்லை.

அன்பு கண்ணுக்குப் புலப்படாத பொருள். கண்ணுக்குப் புலப் படும் முறையில், மனைவிக்கு ஏதாவது ஒரு நகை செய்து போட வேண்டும் என்று அவனுக்கு வெகு நாளாக யோசனை. பலநாள் வரை யோசித்து யோசித்துப் பார்த்தான். வழி ஒன்றையும் காணோம். அவளை வெறுங் கரத்துடன் பார்க்க அவனுக்கு மிக்க வேதனையாய் இருந்தது. ஏழையாய்ப் பிறக்க நேர்ந்ததற்காக வருந்தினன்.

அவனுக்கு வேலையில் விருப்பம் இல்லை. நாளாகவாக, உற்சாகமும் சந்தோஷமும் குறைந்து கொண்டே வந்தது. யந்திரம் போலக் காலங் கழித்து வந்தான் சகோதரக் குமாஸ்தாக்களில் ஒருவர் அவனுக்கு மிக்க நண்பர். அவர் ராமசாமியின் மனோவேதனையை உணர்ந்தார். என்ன விஷயம் என்று விசாரித்தார். ராமசாமி தன் நண்பரிடம் எல்லா விஷயத்தையும் விவரமாகக் கூறினன்.

நண்பர் சிரித்துக் கொண்டார். "பூ, இவ்வளவு தானா? இதற்காக வா இவ்வளவு கவலை? என்னிடம் முன்னமே சொல்லியிருக்கப் படாதா?" என்றார்.

"சொல்லலாம். ஆனல், சொல்லி என்ன பிரயோசனம் உண்டாகப் போகிறது?" என்றான் ராமசாமி ஏக்கத்துடன்.

"என்ன பிரயோஜனம் உண்டாகப் போகிறதா? ......சுருக்கமாக ஒரு வழி சொல்லுகிறேன் கேள். பணத்திற்குப் பணம் மிச்சம். நகைக்கு நகையுமாச்சு. **திருச்சியில் எம். ராமசாமி செட்டி கம்பெனியார் 'ஒரிஜினல் டைனமோ கல்ச்சர் வைரங்களை'** உற்பத்தி செய்கிறார்கள். **தோடு சைஸ் வைரம் ரூ. 1-8-0. பேசரி சைஸ் ரூ. 1-0-0.** அதை வாங்கிக் குறைந்த செலவில் ஒரு தோடு செய்து போட்டுவிடு" என்றான்.

ராமசாமியின் முகம் மலர்ந்தது. அவன் நண்பனைத் தழுவிக் கொண்டான்.

புதிய சீனா

"உலகத்திலேயே பகைவருக்கு நகைமுகங்காட்டி, நல்வரவு கூறி, அவர்களைத் தங்களிடம் ஐக்கியப்படுத்திக் கொண்டு விடுகிற சக்திவாய்ந்த தாய்மார் இருவர், வாழ்க பாரதமாதா! வாழ்க சீனத் தாய்!

இந்தியாவும் சீனாவும், பூமிதேவியின் மூத்த பெண்கள்; இரட்டைக் குழந்தைகள். இவ்விருவரும் அழியாத கன்னியர்; குன்றாத வனப்பினர். குறையாத வளத்தினர். இவர்கள், எத்தனையோ நாடுகளுக்கு நாகரிகப் பால் புகட்டினார்கள்; எத்தனையோ இடங்களுக்கு ஞான விளக்கை ஏந்திச் சென்றார்கள். நாகரீகத்தையும் ஞானத்தையும் மட்டுமா கொண்டு சென்றார்கள்? இல்லை, இல்லை; உணவையும் உடையையும் கூடக் கொண்டு சென்றார்கள். மற்றவர்களுடைய வந்தனத்தையோ நன்றியையோ எதிர்பார்த்து இவர்கள் இங்ஙனம் செய்யவில்லை; தங்கள் கடமையாகக் கருதியே செய்தார்கள்.

இன்று உலகத்தில் சத்தியமென்றும், தருமமென்றும் பேசப்படுகிறதென்று சொன்னால், அவை யாவும் இந்த இரண்டு நாடுகளிலிருந்து பிறந்தவைதான். யந்திர நாகரிக வெறி முற்றியுள்ள இந்த இருபதாவது நூற்றாண்டிலே மேற்படி சத்தியத்திற்கும் தருமத்திற்கும் மதிப்பு வைத்துப் பேசுவது இந்த இரண்டு நாடுகளுந்தான். சத்தியத்தையும், தருமத்தையும், தாங்கள் கவசமாக அணிந்து கொண்டிருக்கிற வரையில் தங்களுக்கு அழிவே கிடையாது என்ற திடமான நம்பிக்கையுடனிருப்பதும் இந்த இரண்டு நாடுகளுந்தான்.

ஆனால்—இந்த ஆனால் என்ற வார்த்தையை நாம் மிகுந்த மன வேதனையுடனேயே உபயோகிக்கிறோம்—இவ்விரண்டு நாடுகளும் எவ்வளவுக்கெவ்வளவு அமைதியிலேயே இன்பம் துய்த்து வந்தனவோ, துய்க்கும் ஆற்றல் பெற்றிருந்தனவோ அவ்வளவுக்கவ்வளவு யுத்தச் சுழலில் அகப்பட்டுக்கொண்டு அமைதியை இழந்து நிற்கின்றன. இப்படி அமைதியை இழந்து நிற்கின்ற காலத்திலும், ஒன்றுக்கொன்று அநுதாபத்தோடு பார்த்துக் கொள்கின்றன. இரண்டு நாடுகளுக்கும் பரம்பரையான தொடர்புண்டல்லவா? நெருங்கிய நட்பு உண்டல்லவா? உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் சீனாவே! உரிமைக்காகப் போராடிவரும் இந்தியா, தனது மனப்பூர்வமான அநுதாபத்தை உனக்குத் தெரிவிக்கிறது."

இப்படி "புதிய சீனா" புத்தகத்தில் சர்மாஜீ ஆரம்பிக்கிறார்.

புத்தகம் விரைவில் வெளிவரும்

சக்தி வெளியீடு

கரப்பான் வியாதி தீர

எக்ஸ்-மா (X-MA)வை

உபயோகிக்கவும்

மற்றொரு சமீபகால நற்சாட்சி பத்திரம்

அன்பார்ந்த ஐயன்மீர்,

தங்கள் அரிய எக்ஸ்-மா ஆயின்ட்மெண்டால் குணமடைந்து, நான் இதை பம்பாயிலுள்ள ஒரு ஸ்திரீக்கு வெகுவாக சிபார்சு செய்கிறேன். பம்பாயில் உங்களுக்கு பிராஞ்சு இருந்தால், அவளுக்கு ஒரு புட்டி கொடுக்கும்படி செய்யவும். இல்லையேல் உங்களது மதராஸ் ஆபீஸிலிருந்து அவளுக்கு அனுப்பவும். உங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்)..



கரப்பான் சொறி போன்ற சரும வியாதிகளுக்கு தக்க மருந்து ஸ்பென்ஸரின் எக்ஸ்-மாதான். இது கீழ்நாடெங்கும் பிரசித்தி பெற்றது. எல்லா நாடுகளிலும் அதை வாங்கியவர்கள் பரம திருப்தி அடைந்துளர். ஒவ்வொரு தபாலிலும் இந்த மருந்து வேண்டுமென்று ஆர்டர்கள் குவிந்த வண்ண மிருக்கின்றன. அதன் அபார விற்பனையே அதன் குணத்திற்குச் சான்று. இதற்குமுன் இதை 'ஸ்மித்ஸ்' அன்குவென்டம் டெடர்ஜென்ஸ்' (Smiths unquentum Detergens) என்றழைத்தார்கள். சரும வியாதிகளின் நிவாரணியான இதற்கிணை வேறெதுவுமில்லை. 'கரப்பான், வண்ணான்சொறி, எரிதிமர் போன்ற சரும வியாதிகளுக்கு எரிச்சல் கொடாத மருந்து எக்ஸ்-மா ஒன்றுதான்.

கைக்கு அடக்கமான புட்டி

ரூ. 1-4-0

உபயோகிக்கும் விதம்

காலையிலும் மாலையிலும் சொறி கண்டவிடத்தில் நன்றாகத் தடவ வேண்டும். சொறிமீது காற்றுப் படாமலிருக்க மெல்லிய துணி போட்டு மூடுவது நலம்.

இந்த மருந்து தயாரிப்பவர்கள்

ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமிடெட் ஒன்றுதான்

வர்த்தக சம்பந்தமான விசாரணைகள் கோரப்படுகின்றன:

ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமி.,

மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ்

SPENCER & CO., LTD., MADRAS.

லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.



P.A.R.

பி. எ. ராஜூ செட்டியார் & பிரதர்

வைரம், நகை வியாபாரம், கோயமுத்தூர்.

ஊக்கத்துக்கு உயர்துணைவன்.



எல்லோராவில் கைலாசநாதர் கோவில் மதில்களில் உள்ள சிற்ப நயங்களைக்கண்டு நீங்கள் அதிசயப்படுகிறீர்கள். அதற்கு ஊக்கமளித்த சக்தி எது என்பது உங்களுக்குக் கட்டாயம் தெரிந்திருக்கும். பெண்மையின் லக்ஷயம் தெய்வ கலையை அங்கே பெருகிறது. நமது அன்றாட வாழ்விலும் அது மானுஷிக எல்லையை மீறுகிறது. பெண் அன்போடும் பாசத்தோடும் பணிவிடை செய்வதைப்போல் அதிசயம் வேறு என்ன? நாள் பூராவும் உழைத்துவிட்டு சோர்வடைந்துவரும் கணவனுக்கு ஒரு கோப்பை தேயிலைபானம் தயாரித்துக் கொடுப்பதுபோல் திருப்தி அளிப்பது வேறு என்ன? அன்பு ததும்பும் கோப்பை அவனுக்கு சோர்வை அகற்றுகிறது. அவன் மனமும் கலகலக்கிறது.

★

"நித்திய கர்மா" என்ற எங்கள் புது சித்திரங்களுடன் கூடிய புத்தகம் எந்தெந்த நேரத்திலெல்லாம் தேயிலை பானம் பருகலாம் என்பதைப்பற்றி விவரிக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து உங்கள் பெயர் விலாசம் முதலியவற்றுடன் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். இந்தியத்தேயிலைக் கமிஷனர், இந்தியன் டீ மார்கெட்டு எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

குடும்பத்திற்கு ஏற்ற ஒரே பானம் இந்தியன் டீ



இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 202

Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Pr
115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan